விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 05 புதன்கிழமை (18.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 90

### நேற்று மட்டும் 15 பேர் அடையாளம் காணப்பட்டனர்

# கொரோனா வைரஸால் பாதித்தோர் எண்ணிக்கை 43 ஆக உயர்வானது

(கொழும்பு)
கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 15 பேர் நேற்று செவ்வாய்க்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. 23

## வாந்தி எடுத்த 4 நாட்களேயான ஆண் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)
தாய்ப்பால் குடித்தபோது வாந்தி எடுத்த 4 நாட்களேயான ஆண் குழந்தை ஒன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.
இச்சம்பவம் நேற்று முன்தினம் துன்னாலை மேற்கு கரவெட்டியில் இடம்பெற் 23

### நாடு திரும்பியவர்கள் கண்காணிக்கப்படுவர்

# முழு நாட்டையும் முடக்க வேண்டிய அவசியமில்லை

### ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)
கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்காக முழுநாட்டையும் தனிமைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
மேலும், நாடு திரும்பிய அனைவரும் கண்காணிக்கப்படுவர் என்றும் தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பு செயலணி நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.
இக்கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும்போதே கோட்டா இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வெளிநாடுகளில் இருந்து வருவோரை பெரும்பாலும் தடுத்துள்ள நிலையில், அனைவரையும் நாட்டிற்குள் வருவதைத் தடுக்கும் தீர்மானத்தை விரைவில் எடுப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.
மார்ச் முதலாம் திகதியில் 23



## யாத்திரிகர்கள் நயினாதீவுக்கு செல்லத் தடை

(நயினாதீவு)
கொரோனா தொற்றைத் தடுக்கும் வகையில் நயினாதீவுக்கு யாத்திரிகர்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
அதேநேரம் நயினாதீவுக்குச் சென்று வருபவர்கள் படகுப் போக்குவரத்தின்போது அணிய வேண்டிய மிதக்கும் கவசத்தை அணிய மறுப்பதாகவும் கூறப்படுகிறது. (ம)

## 6 கட்சிகள் யாழில் இன்று வேட்பு மனு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் ஆறு கட்சிகள் தமது வேட்புமனுக்களை இன்று புதன்கிழமை தாக்கல் செய்யவுள்ளனர்.
எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்களை கட்சி 23

### கொரோனா தொற்றுக்குள்ளான

## முதலாவது நபர் மட்டக்களப்பில் நேற்று இனங்காணப்பட்டார்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பில் கொரோனா தொற்றுள்ள முதலாவது நபர் இனங்காணப்பட்டுள்ளார்.
குறித்த நபர் லண்டனில் இருந்து மட்டக்களப்புக்கு வந்து தங்கியிருந்தவரே கொரோனா சந்தேகத்தில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனு 23

### கொரோனா தொடர்பில் ஆலோசனை பெற

## யாழ்.போதனாவால் தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது

021 222 2268, 071 949 0094

(யாழ்ப்பாணம்)
யாழ்.போதனா வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொடர்பில் ஆலோசனை பெறுவதற்கு தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ள 23

## சங்கரத்தையில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்தொன்றில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் சங்கரத்தைச் 23

### தரம் 5



புலமைப்பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

### அநுராதபுரம் சிறைச்சாலையில்

## மரண தண்டனை கைதிகளுடன் தமிழ் அரசியல் கைதிகள்

### இணைத்து விடப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)
அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 11 பேர் நேற்று முன்தினம் முதல் மரண தண்டனை கைதிகளுடன் இணைத்து 23

### கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில்

கலாநிதி ச.பாலகுமார் எழுதும்

விழிப்புணர்வு கட்டுரை உள்ளே

### தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின்

## தேர்தலுக்கான வேட்பாளர் விபரங்கள் வெளியீடு

(கொழும்பு)
எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஊடாக போட்டியிடும் வேட்பாளர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 23

## பருப்பு, மீனின் விலையை குறைக்க ஜனாதிபதி பணிப்பு

### வங்கிக் கடனை மீளப்பெறுவதை 6 மாதம் நிறுத்தவும் கோரிக்கை

(கொழும்பு)
ஒரு கிலோ கிராம் பருப்பு 65 ரூபாய்க்கும் மீனின் ஒன்று 100 ரூபாய்க்கும் 23

### யாழ்.சிறைச்சாலையில் கைதிகளை

# இரண்டு வாரங்களுக்கு பார்வையிட முடியாது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைத்துள்ள கைதிகளை இன்று முதல் இரண்டு வாரங்களுக்கு பார்வையிட முடியாது என சிறைச்சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை இருவாரங்களுக்கு பார்வையிட பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த அறிவுறுத்தலுக்கு அமைய யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இன்று முதல் இரு வாரங்களுக்கு சிறைகளில் உள்ள கைதிகளை பார்வையிட பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என யாழ்ப்பாணம் சிறைச்சாலை அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (ம-3.101)

## ஆண்டொன்று சென்றாலும் அகலவில்லை உம் நினைவு


பிறப்பு 23 . 05 . 1935



இறப்பு 18 . 03 . 2019

### அமரர் மனுவேற்பிள்ளை சிறில் இராசநாயகம்

தந்தையே ஈர்ந்தனன் எந்தையை
தண்ணொளி இல்லறம் தந்தனை
விந்தையாய் மொழிபகர்ந்தெங்களை
விரும்பியே பாரினில் வளர்த்தனை
சிந்தை நாம் குளிர்கையில் உந்தனை
சீர்வழி பரமனும் அழைத்ததேன்
வந்தனை செய்கின்றோம் தந்தையே
வானோரோடு வாழ்ந்தருள் பொழிகவே




கோவில் வீதி,
சுண்டிக்குளி.

என்றும் உம் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள் (நிலா,விஜி, றெஜி)
(அருட்தந்தை விஜின்ரஸ் அடிகளார்)

(2627)

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 ✽ 09 ✽ 1952



மறைவு 17 ✽ 03 ✽ 2020

### இராசையா ஜெயபரிபாலன்

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர் RDD பெற்றா எசன்ஸ்)

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா ஜெயபரிபாலன் அவர்கள் நேற்று 17.03.2020 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - தவமணி தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற நடராசா - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சர்வபரிபாலன், செல்வகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானாம்பிகை (கலா) யின் அன்பு கணவரும், பார்த்தீபன் (யா/இந்துக்கல்லூரி 2017 A/L), 'சாம்பவி (வேம்படி மகளிர்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.03.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (C-9505)

021 205 4574

தகவல் -
குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்

### திருமதி திருச்செல்வம் சித்தம்மா

கரம்பனை பிறப்பிடமாகவும் இல.606, 6ஆம் யூனிற் இராமநாதபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருச்செல்வம் சித்தம்மா அவர்கள் நேற்று (17.03.2020) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - றோசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற லூக்கேஸ் பிள்ளை - பிரகாசியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருச்செல்வத்தின் அன்பு மனைவியும் அன்ரன், நிர்மலன், பாலன், தேவரஞ்சிதமலர், யசிந்தா, தயாளன், செனிக்கா, டயான், சீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், டொறின், யோகவதி, மாலா, யோகராசா, தேவராசா, தயாளினி, ஸ்ரீரஞ்சன், பாலினி, அமுதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சேவியர், சூசைப்பிள்ளை, லோயிஸ் மற்றும் மெற்றலின், சிசிலியா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கீர்த்திகா, மிதுசா, இவர்னா, இவாஞ்சலா, கெரோன், நிருயா, அனோயா, காலஞ்சென்ற டினுயா, ஆன்கிசானா, மேரிக்கா சஞ்சுதன், கீதன்சன், சன்சிகா, ஓவியா, கவிச்செல்வன், காவியன், சாதனா, இனியா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சோவ்பியா, ஜோர்யா, நிதனா, நிநிதன், அத்விதன், மகிசா, அப்சரா, அன்றியா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.03.2020) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இராமநாதபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

இல.606,6ஆம் யூனிற்,
இராமநாதபுரம். (C-9504)

தகவல் -
குடும்பத்தினர்

# வெளிநாடுகளில் இருந்து இலங்கை பிரவேசித்த ஆறாயிரத்திற்கும் அதிகமானோர் கண்காணிப்பில்

**(கொழும்பு)**

**இத்தாலி உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு பிரவேசித்த ஆறாயிரத்திற்கும் அதிகமானவர்கள் தமது அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் வீடுகளில் கண்காணிப்புக்குட்படுத்தப்படுவதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்தது.**

கடந்த ஐந்தாம் திகதிக்கு முன்னர் நாட்டிற்குப் பிரவேசித்த 2 ஆயிரத்து 572 பேர் மற்றும் மார்ச் 5 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை உத்தியோகபூர்வமாக நாட்டிற்குள் நுழைந்த மூவாயிரத்து 460 பேர் தனிமைப்படுத்தப்பட்டு வருவதாக அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட பல பகுதிகள் மற்றும் தென் மாகாணத்தின் சில பகுதிகளில் வைரஸ் தொற்றக்கூடிய அவதானம் இருப்பதாக பொது சுகாதார பரிசோதகர்கள் அடையாளங் கண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வடக்கில் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கும் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக வடமாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள பணிப்பாளர் திருமதி சி.சுஜீவா தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று வடமாகாணத்தின் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைத்த கடிதத்தில் வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய பொதுமக்கள் பிரதேச செயலகங்களில் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் நோக்கிலும் அவர்களின் நலன் கருதியும் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் (ரக்ஸ்) வழங்கும் செயற்பாடானது தற்காலிகமாக 17.03.2020 தொடக்கம் 31.03.2020 வரை வடமாகாணத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் இடைநிறுத்தப்பட்டது.

இதனால் இக்காலப்பகுதியில் காலாவதியான வாகன வருமான வரி அனுமதிப்பத்திரம் செலுத்துபவர்களுக்கான தண்டப்பணம் அறவிடப்படமாட்டாது என்பதுடன், இது தொடர்பில் போக்குவரத்து பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டது என அக்கடிதத்தில் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-250)

## கொரோனா வைரஸ் தொற்றால் 7,100 பேர் பலி! 182,000 பேர் பாதிப்பு

| நாடு | பலி | பாதிப்பு |
|---|---|---|
| சீனா | 3,200 | 80,900 |
| இத்தாலி | 2,158 | 27,980 |
| ஈரான் | 853 | 14,991 |
| ஸ்பெயின் | 292 | 7,844 |
| பிரான்ஸ் | 79 | 5,423 |
| தென்கொரியா | 81 | 8,320 |
| அமெரிக்கா | 65 | 3,790 |
| இங்கிலாந்து | 10 | 1,400 |
| இந்தியா | 3 | 129 |



# கொரோனா தடுப்பு தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவராக இராணுவத் தளபதி சவேந்திர நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் இலக்கம். 1090, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, ராஜகிரிய, முகவரியில் ஸ்தாபிக்கப்பட்ட கொவிட் 19 வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவராக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டார்.

மக்கள் நலனை உறுதி செய்வதற்காகவும் பொது சுகாதாரம் மற்றும் ஏனைய சேவைகளை, சிறப்பான ஒருங்கிணைப்புடன் கூடிய நிவாரணம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்நிலையத்தின் கீழ் கொண்டு வரப்படும் சேவைகளை ஒருங்கிணைப்பதற்காக சேவை அவசியத்தின் முக்கியத்துவத்திற்கேற்ப அனைத்து அதிகாரிகளும் இணைத்துக் கொள்ளப்படுவதோடு அதற்காக அவர்கள் எந்நேரமும் தயாராக இருக்க வேண்டுமென அரசு அறிவித்துள்ளது. (இ-7)

# அடுத்து வரும் இரு வாரங்கள் கொரோனா வைரஸ் அவதானத்துக்குரிய வாரங்களாகப் பிரகடனம்!

## விசேட கலந்துரையாடலில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கொரோனா வைரஸின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக ஆளுநரின் பணிப்பின் பேரில் விசேட கலந்துரையாடல் ஒன்று மாகாண சுகாதார அமைச்சில் நேற்று இடம்பெற்றது.

வடபகுதியின் சுகாதாரத்துறை மற்றும் நிர்வாகத்துறை சார்ந்த உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டதுடன் முக்கியமான தீர்மானங்கள் சில மேற்கொள்ளப்பட்டன.

❖ அடுத்து வரும் இரண்டு வாரங்கள் கொரோனா வைரஸ் அவதானத்துக்குரிய வாரங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு பாரியளவில் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லல்.

❖ பொதுமக்கள் ஒன்று கூடும் வைபவங்கள், நிகழ்வுகள், விழாக்களை இரண்டு வாரங்களுக்கு ஒத்தி வைத்தல்.

❖ ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட குடும்ப நிகழ்வுகளை (திருமண விழா, பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள், அந்தியேட்டி) மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் மிக அவசியமான உறுப்பினர்களுடைய பங்குபற்றுதலோடும் பாதுகாப்பாக நடத்துவதை உறுதிப்படுத்தல்.

❖ அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட 14 நாடுகளில் இருந்து (ஈரான், இத்தாலி, தென்கொரியா, ஒஸ்ரியா, பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க், நெதர்லாந்து, சுவீடன், ஸ்பெயின், சுவிட்ஸர்லாந்து, ஐக்கிய இராச்சியம், பெல்ஜியம், நோர்வே.) குறித்த காலத்துக்குள் (மார்ச் 1 இல் இருந்து) வருகை தந்தவர்கள் தங்களை தனிமைபடுத்துவதோடு, ஏற்பாடு செய்திருக்கும் சகல விசாரணை மற்றும் பரிசோதனைகளுக்கு தங்களை அவசியம் உட்படுத்த வேண்டும்.

❖ முதியோர் மற்றும் சிறுவர் இல்லங்களுக்கு வெளிநாட்டில் இருந்து வருகை தந்த பயணிகள் மறு அறிவித்தல் வரும் வரை செல்வதை தடுத்தல்.

❖ பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 15.03.2020 சுற்றறிக்கைக்கு அமைவாக ஆளுநர் செயலகம், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள், போன்றவற்றிற்கு பொதுமக்கள் மிக மிக அத்தியாவசிய தேவைகளைத் தவிர இதர காரணங்களுக்காக செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

❖ அரச மற்றும் தனியார் கல்வி நிலையங்களின் பிரத்தியேக கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள், பிரதேச மட்ட கழக விளையாட்டு நிகழ்வுகள், சனசமூக நிலையங்கள் போன்ற பொது அமைப்புக்களின் மக்கள் ஒன்று கூடும் சகல நிகழ்ச்சிகளும் இரு வாரங்களுக்கு தடை செய்யப்படுகின்றன.

❖ பொதுப்போக்குவரத்து வாகனங்கள் பூரண கிருமித்தொற்று நீக்கலுக்கு அவசியம் உள்ளாக்கப்படல் வேண்டும்.

மேற்குறித்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்து அனைவருடைய பாதுகாப்பையும் கருதி பொறுப்புணர்வோடு செயற்படுத்துவதென இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (இ-7)

## கொரோனா வைரஸ் அமரவீரவின் மகன் தனிமைப்படுத்தல்




(கொழும்பு)

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்த அமைச்சர் மகிந்த அமரவீரவின் மகன் பசன் அமரவீர தனிமைப்படுத்தப்பட்டார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை, தியத்தலாவிலுள்ள தனிமைப்படுத்தல் மையத்திற்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டார். (இ-7)

# கொரோனா வைரசுக்கு ஸ்பெயின் கால்பந்து பயிற்சியாளர் பலி





கொரோனா வைரசுக்கு ஸ்பெயினை சேர்ந்த கால்பந்து பயிற்சியாளர் பிரான்சிஸ்கோ கார்சியா பலியாகி உள்ளார்.

ஸ்பெயினை சேர்ந்த 21 வயதான பிரான்சிஸ்கோ கார்சியா அங்குள்ள அட்லெடிகோ போர்டா அல்டா கிளப்பில் பயிற்சியாளராக இருந்து வருகிறார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு அவர் "கோவிட் 19" எனும் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டார். முழுமையாக பாதிக்கப்பட்ட நிலையில் அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். சிகிச்சை பலன் அளிக்காமல் அவர் கொரோனா வைரசுக்கு பலியானார்.

இந்த வைரசுக்கு பலியான இளம் வயதானவர் கார்சியா ஆவார். அவரது மறைவுக்கு அட்லெடிகோ போர்டா அல்டா கிளப்பு இரங்கல் தெரிவித்துள்ளது. இது மிகவும் துரதிருஷ்டவசமானது என்று அந்த கிளப் தனது அனுதாபத்தை தெரிவித்துள்ளது.

ஸ்பெயினில் உள்ள மற்றொரு கால்பந்து கிளப்பான வாலன்சியாவை சேர்ந்த கேரி கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்.

# எனக்கு கொரோனாவா?:போலி செய்தியை பரப்புவதைநிறுத்துங்கள்-அலெக்ஸ் ஹேல்ஸ் காட்டம்

எனக்கு கொரோனா வைரஸ் தாக்கப்பட்டுள்ளது என்று பரப்பப்படும் பொய் செய்திகளை உடனடியாக நிறுத்துங்கள் என்று அலெக்ஸ் ஹேல்ஸ் காட்டமாக தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் கடந்த வாரமே உலகில் உள்ள அனைத்து விளையாட்டுகளும் தள்ளி வைக்கப்பட்டன.

ஆனால் பாகிஸ்தான் சூப்பர் லீக் ஆட்டங்கள் மட்டும் ரசிகர்கள் ஏதுமின்றி மூடிய மைதானங்களில் நடைபெற்றது. ஞாயிற்றக்கிழமை வரை போட்டி நடைபெற்றது. இரண்டு அரையிறுதி போட்டிகள் நேற்றும், இறுதிப் போட்டி இன்றும் நடைபெறுவதாக இருந்தது.

இந்நிலையில் நேற்று நாக்-அவுட் போட்டிகள் ரத்து செய்யப்படுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டு அறிவித்தது. இங்கிலாந்தை சேர்ந்த அதிரடி பேட்ஸ்மேன் அலெக் ஹெல்ஸ் கராச்சி கிங்ஸ் அணிக்காக விளையாடி வந்தார்.

ரி20 தொடரில் விளையாடிய வெளிநாட்டு வீரர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இதனால்தான் போட்டி ரத்து செய்யப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டு அந்த வீரரின் பெயரை வெளியிடவில்லை.

ஆனால், அந்த வீரர் அலெக்ஸ் ஹேல்ஸ் என்று கிரிக்கெட் வர்ணனையாளர் ரமீஸ் ராஜா தெரிவித்தார். அதேபோல் கல்ஃப் நியூஸ் செய்தி வெளியிட்டது. இது காட்டுத்தீ போன்ற மளமளவென பரவியது.

இந்நிலையில் இதுபோன்ற போலி செய்திகளை நிறுத்துங்கள் என அலெக்ஸ் ஹேல்ஸ் சாடியுள்ளார். விவகாரம் பிரச்சினையான பிறகு, அலெக்ஸ் ஹேல்ஸ் டெஸ்ட் செய்து கொள்ளவில்லை. தன்னைத்தானே தனிமைப்படுத்தி கொண்டார் என ரமீஸ் ராஜா தெரிவித்தார். கல்ஃப் நியூஸ் செய்தியாளர் டுவிட்டரை அழித்துள்ளார். ஆனால் முன்னதாகவே எடுக்கப்பட்ட ஸ்கிரீன் ஷாட் வேகமாக பரவி வருகிறது.

பாகிஸ்தான் சூப்பர் லீக்கில் விளையாடிய அலெக்ஸ் ஹேல்ஸ், ஜேசன் ராய், டைமல் மில்ஸ், லியம் டவ்சன், லியம் லிவி ங்ஸ்டோன், லெவிஸ் கிரேகோரி, ஜேம்ஸ் வின்ஸ், ஆகியோர் அவர்களது வீட்டில் 14 நாட்கள் தனிமைப்படுத்த பட்டுள்ளனர்.

# சமூக வலைத்தளத்திற்காக பேட்டிங் செய்ய முடியாது : புஜாரா



டெஸ்ட் போட்டியில் அதிகமான பந்துகளை சந்திக்கிறார் என்ற விமர்சனம் எழும் நிலையில், அதுபற்றி கவலை இல்லை என்கிறார் புஜாரா.

இந்திய டெஸ்ட் அணியின் முன்னணி பேட்ஸ்மேன் புஜாரா. இவர் நிலைத்து நின்று விளையாடக்கூடியவர். இவரது விக்கெட்டை வீழ்த்துவதற்குள் எதிரணி பந்து வீச்சாளர்களுக்கு போதும்போதும் என்ற நிலை ஏற்படும்.

என்றாலும் மெதுவாக விளையாடுவது குறித்து விமர்சனம் எழுந்து வருகிறது. இந்நிலையில் சமூக வலைத்தளங்களுக்காக பேட்டிங் செய்ய இயலாது என்று புஜாரா தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து புஜாரா கூறுகையில் "முதல் இன்னிங்சில் நான் 200-க்கும் மேற்பட்ட பந்துகளை சந்தித்து 60 ரன்கள் அடித்திருக்கலாம். ஆனால் எனக்கும், அணியின் சக வீரர்களுக்கும் ஆடுகளம் எவ்வளவு கடினமாக இருக்கும் என்பது தெரியும். நான் விளையாடியது இறுதி போட்டி. பொறுப்பு என்மீது இருந்தது. சூழ்நிலை சார்ந்திருந்தால் இதுபோன்று மெதுவாக பேட்டிங் செய்வது தவறு அல்ல.

நான் சர்வதேச பேட்ஸ்மேன், பந்து வீச்சாளர்கள் 110 கிமீட்டர் வேகத்தில்தான் பந்து வீசுகிறார்கள். அதனால் எப்படியும் விளையாடலாம் என்ற ஈகோவை நான் பின்னுக்குத் தள்ளிவிடுவேன். சூழ்நிலை சரியில்லை என்றால் நான் எனது வழக்கமான ஷாட்டுகளை எளிதாக அடிக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். கேம் சேஞ்ச் என்பது பிட்ச்-ஐ பொறுத்தது. நியூசிலாந்து தொடரை எடுத்துக் கொண்டால், ஆடுகளம் மிகவும் சவாலாக இருந்தது.

நான் சமூக வலைத்தளங்களுக்காக பேட்டிங் செய்ய முடியாது. ஏராளமானவர்களால் எனது ஆட்டம் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட்டை புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால், அவர்கள் அதிக அளவில் ஒயிட்-பால் கிரிக்கெட்டை பார்க்கிறார்கள். என்னுடைய இலக்கு சிலரை சந்தோசப்படுத்த வேண்டும் என்பதல்ல. அணியை வெற்றி பெற வைக்க வேண்டும் என்பதுதான் இலக்கு. அது இந்திய அணியாக இருக்கலாம். அல்லது சவுராஷ்டிரா அணியாக இருக்கலாம்.

சில நாட்களில் நான் வேகமாக பேட்டிங் செய்வேன். சில நேரங்களில் மெதுவாக பேட்டிங் செய்வேன். கிரிக்கெட்டை விரும்புவர்களுக்கும், ரசிகர்கள் கூட்டத்திற்கும் மரியாதை அளிக்கிறேன். மற்ற நபர்கள் போன்று என்னால் சிக்ஸ் அடிக்க இயலாது. நான் சமூக வலைத்தளங்களை தவிர்க்க விரும்புகிறேன். விளையாடும்போது அவற்றை பார்ப்பதில்லை. நான் மற்றவர்கள் சந்தோசப்படுவதற்காக பேட்டிங் செய்யவில்லை" என்றார்.

# ஐபிஎல் நிர்வாகத்தின் பதிலுக்காக காத்திருக்கிறோம் என்கிறார் கேன் ரிச்சர்சன்



வீட்டிற்குள்ளே முடங்கி கிடக்கும் நாங்கள் ஐபிஎல் நிர்வாகத்தின் பதிலுக்காக காத்திருக்கிறோம் என கேன் ரிச்சர்ட்சன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று பீதி காரணமாக உலகளில் உள்ள அனைத்து விளையாட்டுகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் முற்றிலுமாக தடுத்து நிறுத்த எவ்வளவு காலம் ஆகும்? என்பது குறித்த தெளிவான பார்வை இல்லை.

இதனால் வீரர்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கும் நிலை உருவாகியுள்ளது. ஐபிஎல் தொடரில் கேன் ரிச்சர்ட்சன் உள்ள 17 வீரர்கள் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் ஐபிஎல் தொடரில் விளையாட இருந்தார்கள். தற்போது ஐபிஎல் தொடர் ஏப்ரல் 15-ந்தேதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதன்பின் நடைபெறுமா? என்பது சந்தேகம். இதற்கிடையில் கேன் ரிச்சர்ட்சனுக்கு நியூசிலாந்து தொடரில் விளையாடும்போது உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதனால் சுமார் 26 மணி நேரம் தனிமைப்படுத்தப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது.

அவருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இல்லை என்பதால் விடுவிக்கப்பட்டார். இந்நிலையில் ஐபிஎல் நிர்வாகத்தின் பதிலுக்காக காத்திருக்கிறோம் என கேன் ரிச்சர்ட்சன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கேன் ரிச்சர்ட்சன் கூறுகையில் "ஐபிஎல் தொடர் ரத்து செய்யப்படலாம் என்ற கருத்துதான் பெரிய அளவில் நிலவி வருகிறது. ஆனால் தற்போதுள்ள சூழ்நிலை ஒருநாள் அல்லது ஒரு வாரத்தில் சீராக முடியும். ஆகவே, நான் போனை வைத்துக் கொண்டு உள்ளேன். தற்போதுள்ள நிலையில் ஐபிஎல் தொடரில் விளையாட தயாராக உள்ளேன்.

ஆஸ்திரேலியா அணியைச் சேர்ந்தவர்கள் வீட்டில் உட்கார்ந்து கொண்டு இதுகுறித்து சாட்டிங் செய்து கொண்டிருக்கிறோம். ஐபிஎல் போட்டி முடியும் வரை நாங்கள் தனியாக இருக்கப் போகிறோம். தற்போது வீட்டில் இருக்கும் எங்களுக்கு அடுத்த கிரிக்கெட் போட்டி எப்போது என்ற எண்ணம் உண்மையிலேயே இல்லை. இந்த அளவிற்கு விஸ்வரூபம் எடுத்துள்ளதை இது காட்டுகிறது.

தென்ஆப்பிரிக்காவில் இருந்து வரும்போது கூட நாங்கள் இந்த கொரோனா வைரஸ் குறித்து நினைக்கவில்லை. எல்லாவற்றையும் ரத்து செய்துவிட்டு வீட்டிற்குள் முடங்கி கிடப்பது கடினமான விஷயம். ஆனால், செய்திகளை பார்க்கும்போது இது சரியான விஷயம்தான் என்பதை உறுதியாக காட்டுகிறது.

முக்கியமான விஷயம் என்னவென்றால் வெளிநாட்டிற்குச் சென்ற ஆஸ்திரேலியர்கள் சொந்த நாடு திரும்பினால் 15 நாட்களுக்கு தனிமை படுத்தப்படுவார்கள். இதுதான் அவர்களுக்கு கொஞ்சம் கஷ்டமான விஷயம்" என்றார்.

## ஏல விற்பனை

(மல்லாகம்)

மல்லாகம் நீதவான் நீதிமன்றால் அரசுடைமையாக்கப்பட்ட உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள், ஆட்டோ, சிறிய ரக உழவியந்திரம் ஆகிய சான்றுப் பொருட்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

மேலும் ஏலத்தில் வாங்கப்ப டும் பொருட்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்வதோடு நீதிமன்ற வளாகத்திலிருந்து அன்றைய தினமே அப்புறப்படுத்தல் வேண்டும். அத்துடன் ஏலத்தினைக் கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வருகை தர வேண்டும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

# வெளிநாடுகளிலிருந்து வடமராட்சிக்கு வந்தவர்கள் தங்கியிருக்கும் விடயத்தை உடன் அறியத்தரவும்

## சுகாதாரத் துறையினர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளிலிருந்து வந்து வடமராட்சிப் பகுதியில் தங்கியிருப்போர் தாம் தங்கியிருக்கும் விடயத்தை அப்பகுதியிலுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடமோ அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலோ தெரிவிக்குமாறு சுகாதாரத் துறையினர் வேண்டுகோள் விடுத்தனர்.

அண்மைய காலத்தில் வெளிநாடுகளிலிருந்து வடமராட்சிப் பகுதிக்கு வந்திருப்போர் தொடர்பான தகவல் சுகாதாரப் பகுதியினருக்கு கிடைக்கப் பெற்றதையடுத்து சுகாதாரப் பகுதியினர் அவர்கள் தங்கியிருக்கும் வீடுகளுக்குச் சென்ற போது அவர்கள் சுற்றுலா சென்றிருப்பதாக தெரிய வந்தது.

எனவே வெளிநாடுகளில் இருந்து வந்து வடமராட்சி பகுதிகளில் தங்கி இருப்போர் 14 நாட்கள் தமது வீடுகளில் இருக்குமாறும், தாம் இருக்கும் விடயங்களை அருகில் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தெரிவிப்பதன் மூலம் தேவையற்ற பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளலாம் எனச் சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர். (இ-60)



# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## மருத்துவ ஜோதிடம்

**நோய் எதிர்ப்பு சக்தியை குறிக்கும் பாவங்கள்**

●3 மற்றும் 5 ஆம் பாவங்கள்

**நோய் குறிகாட்டும் கிரகங்கள்**

●செவ்வாய்-தவறான உணவுப் பழக்க வழக்கங்களால் வரும் நோய்கள்

●சனி - பரம்பரை நோய்கள், பூர்வ ஜென்ம பாவத்தால் வரும் நோய்கள்

**நோய் எதிர்ப்பு சக்தியை குறிக்கும் கிரகங்கள்**

●சூரியன் - உடல் தெம்பு, புத்துணர்ச்சி, உயிராற்றல்

●சந்திரன் - உடல் சத்துக்கள்

●சுக்கிரன் - வீர்ய சக்தி

**மருத்துவ ஜோதிட விதிகள் (பாரம்பரிய முறை)**

1.கடுமையான நோய்களைக் கண்டறிய சந்திரனின் நிலையை பார்க்கவும்.

2.நாட்பட்ட வியாதிகளைக் கண்டறிய சூரியனின் நிலையைப் பார்க்கவும்.

3.இளமையில் வரும் நோய்களைக் கண்டறிய சந்திரனின் நிலையைப் பார்க்கவும்.

4.முதுமையில் வரும் நோய்களைக் கண்டறிய சூரியனின் நிலையைப் பார்க்கவும்.

5.ஜாதகத்தில் சூரியன், சந்திரன் நிற்கும் இராசிகள் குறிக்கும் உடல் பாகங்களில் எந்தவிதமான அறுவைச் சிகிச்சையும் செய்யக்கூடாது.

6.ஜாதகத்தில் செவ்வாய், சனி நிற்கும் இராசிகள் குறிக்கும் உடல் பாகங்களில் எந்தவிதமான அறுவை சிகிச்சையும் செய்யக்கூடாது.

7.ஜாதகத்தில் சூரியன், சந்திரன் ஆட்சி, உச்சம் பெற்று நின்றால் நோய்கள் எளிதில் குணமாகும்.

8.மேடம், சிம்மம், ரிஷபம், கடகம், துலாம் ஆகிய லக்கினங்களில் பிறந்தவர்களுக்கு நோய் எளிதில் குணமாகும்.

9.கன்னி லக்கினம், கன்னி இராசியில் பிறந்த பெண்கள் நல்ல செவிலியராக செயற்படுவர்.

10.லக்கினத்திற்கு 6 இல் சனி, செவ்வாய் உள்ளவர்கள் நோயாளிகளைப் பார்க்கவோ, தொடவோ கூடாது. இவர்கள் தொட்டால் நோய் எளிதில் குணமாகாது.

11.லக்கினத்தில் சூரியன், சந்திரன், சுக்கிரன் உள்ளவர்களை நோயாளிகள் பார்ப்பதும் தொடுவதும் நல்லது. நோய் விரைவில் குணமாகும்.

12.லக்கினாதிபதி பகை, நீச்சம், அஸ்தமனம் பெற்று நிற்க, 6-8 இற்குடையவர்கள் நீச்சம், பகை, அஸ்தமனம் பெற்று நின்றால் நோய் எதிர்ப்பு சக்தி உடலில் அதிகமாக இருக்கும்.

13.லக்கினாதிபதி பகை, நீச்சம், அஸ்தமனம் பெற்று நிற்க, 6,8 இற்குடையவர்கள் ஆட்சி உச்சம் பெற்று நின்றால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும்.

14.லக்கினத்திற்கு 6-8 இல் அதிக எண்ணிக்கையில் கிரகங்கள் நின்றால் ஒரே நேரத்தில் பல வியாதிகள் ஒன்றாக வந்து தாக்கும்.

15.நோயாளியின் லக்கினத்திற்கு 6-8 ஆம் வீடுகளை ஜென்ம லக்கினமாகவோ, ஜென்ம இராசியாகவோ அல்லது பெயர் இராசியாகவோ கொண்டவர்கள் நோயாளிகளைப் பார்க்கக்கூடாது. இவர்கள் பார்த்தால் நோய் எளிதில் குணமடையாது.

16.லக்கினத்திற்கு 6-8 இல் நின்ற கிரகம் அல்லது 6-8 இற்குடைய கிரகங்கள் சம்பந்தமான நோய்கள் வரும்.

17.ராகு, கேதுக்கள் நின்ற பாவங்கள் குறிக்கும் உடலுறுப்புக்களில் ஏதாவது நோய் இருக்கும்.

**நோய் வரும் காலம்**

1.லக்கனத்திற்கு 6-8 இற்குடையவர்களின் சாரம் மற்றும் 6-8 இல் நின்ற கிரகங்களின் சாரம் பெற்ற தசா - புத்தி நடத்தும் போது உடலில் நோய்கள் தோன்றும்.

2.குருவுக்கு 6-8 இல் நிற்கும் கிரகம் தசா-புத்தி நடத்தும் போது உடலில் நோய்கள் தோன்றும்.

3.லக்கினத்திற்கு 6-8 இற்குடையவர்கள் நிற்கும் ராசி மற்றும் அந்த இராசிக்கு திரிகோண ராசிகளில் கோச்சார குரு அல்லது கோச்சார சனி வரும் காலம் உடலில் நோய் தோன்றும்.

4.லக்கினத்திற்கு 6-8 இற்குடையவர்கள் நின்ற நவாம்ச இராசி மற்றும் அந்த இராசிக்கு திரிகோண இராசிகளில் கோச்சார குரு அல்லது சனி வரும் காலம் உடலில் நோய் தோன்றும்.

5. லக்கினத்திற்கு அல்லது லக்கினாதிபதி நின்ற இராசிக்கு திரிகோண இராசிகளில் ராகு வரும் காலம் உடலில் நோய் தோன்றும்.

**சிகிச்சைக்கு உகந்த நட்சத்திரங்கள்**

●அஸ்வினி, சதயம்- அனைத்து வியாதிகளும் நீங்க.

●பூசம் - பரம்பரை நோய்கள், பூர்வ ஜென்ம பாவத்தால் வரும் நோய்கள் நீங்க.

●மகம்-பித்ரு சாபத்தால் வரும் நோய்கள் நீங்க.

## வியாபாரிகளுக்கு முகக்கவசம்

# வெற்றிலை துப்பினால் கைது

(யாழ்ப்பாணம்)

கொரோனா நோய்த் தடுப்புப் பற்றி ஆராய அவசரமாக சபையைக் கூட்டும்படி உறுப்பினர் மதுசுதனால் தவிசாளருக்கு கையளிக்கப்பட்ட கோரிக்கை கடிதத்திற்கு அமைவாக நல்லூர் பிரதேச சபை நேற்று முன்தினம் கூட்டப்பட்டு பிரதேச மக்கள் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது, எவ்வாறான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுப்பது பற்றி விரிவாக ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

●மக்களுக்கு ஒலிபெருக்கிகள் மூலம் பாதுகாப்பு விழிப்புணர்வு முன்னாயத்த நடவடிக்கைகள், நோயிலிருந்து தப்பிப்பதற்கான வழிமுறைகள் பற்றி விழிப்புணர்வு பிரசாரத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளல்.

●பொது இடங்களில் துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள் காட்சிப் படுத்தல்.

●பிரதேச சபை எல்லைக்குள் இருக்கின்ற விடுதிகள், தங்குமிடங்கள் அனைத்தும் உடனடியாக தரவுகள் சேகரிக்கப்பட்டு. கண்காணிக்கப்படும். அத்தோடு விடுதி உரிமையாளர்கள் அங்கு தங்குவோர் பற்றிய தகவல்களை சபைக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

●வெளிநாட்டிலிருந்து வருகை தந்து பிரதேச எல்லைக்குள் இருப்பவர்களை உடனடியாக சுகாதார வைத்திய அதிகாரிக்கும் நல்லூர் பிரதேச சபைக்கும் அறியத்தர வேண்டும்.

●திருமண வைபவங்கள் தவிர்ந்த ஏனைய பொதுமக்கள் கூடுகின்ற நிகழ்வுகளை பொலிஸார் மூலம் கட்டுப்படுத்தல் அதற்குரிய அனுமதிகளை வழங்காது கட்டுப் படுத்தல்.

●நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள்ளே பொதுமக்கள் அதிகமாகக்கூடும் இடமான திருநெல்வேலி சந்தையிலே வியாபாரிகளுக்கு முகக்கவசம் விநியோகித்தல்.

●திருநெல்வேலி சந்தையிலே வெற்றிலை துப்புபவர்களை உடனடியாக கைது செய்வதற்கு கோப்பாய் பொலிஸார் உறுதியளித்தனர்.

இவ்வாறான விடயங்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் பிரதேச சபை மற்றும் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் கோப்பாய் பொலிஸார் இணைந்து முடிவுகள் எட்டப்பட்டன. (இ-7)

# கொரோனா வதந்தி பரப்புவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பகுதிகளில் இதுவரை எவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லைஎனவும்கொரோனா தொடர்பில் வதந்திகளைப் பரப்புவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.செந்தூரன் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொடர்பில் பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்வதோடு பொதுமக்கள் அச்சமடையக் கூடிய வகையில் தேவையற்ற வதந்திகளைப் பரப்பக்கூடாது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான செய்திகளை சமூக வலைத்தளங்களில் பதிவிடுவோர் மற்றும் தகவல்களை அனுப்பியோர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் பொதுமக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் வகையில் யாராவது உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டால் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## இராசி பலன்

**18.03.2020**

பங்குனி 05, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

நவமி முற்பகல் 8.25 மணிவரை

பூராடம் பிற்பகல் 5.18 மணிவரை

சுபநேரம் 4.48-6.18 மணிவரை

இராகுகாலம் 12.18-1.48 மணிவரை

தன்னைக் கண்டித்துக் கொள்வன் மகிழ்ச்சியில் திளைப்பான்

வள்ளவன்

கிரகநிலை: சூரி, சுக், ராகு, புத, சனி,கேது, குரு, செவ்,சந்

சந்திராஷ்டமம்: ரோகினி, மிருகசீரிடம்

**மேடம்:** ரோக பயமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெண்கள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**இடபம்:** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சிரித்துப் பேசும் நண்பகளால் சில சிக்கல்கள் ஏற்படலாம், முற்சிகளில் நிதானம் தேவை.

**மிதுனம்:** அலங்காரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

**கடகம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், வருமானம் திருப்திகரமானதாக அமையும், பகைவர்கள் மனம் மாறுவர்.

**சிம்மம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், புண்ணிய காரியங்களில் நாட்டம் கூடும், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**கன்னி:** பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**துலாம்:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழிபோடும் நாள், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு:** ஆழ்ந்த சிந்தனையுண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மகரம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**கும்பம்:** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, முத்தான வாய்ப்புக்கள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

# அரச நிறுவனங்களுக்கு வரும் மக்களை குறைக்க நடவடிக்கை

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக உள்நாட்டலுவல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 10/2020 சுற்றுநிருபத்திற்கமைவாக பலவித அரச கடமைகளின் பொருட்டு அரச நிறுவனங்களுக்கு வருகை தரும் பொதுமக்களை குறைத்துக் கொள்வதற்கேதுவாக மாவட்டச் செயலகத்தில் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய பொது மக்கள் ஈமெயில், தொலைபேசி மற் றும் தொலைநகல் மூலமாக நிறை வேற்றிக்கொள்ள முடியுமென அறியத்தரப்படுகின்றது.

ஈமெயில்:districtsecretaryjaffna@gmail.com தொலைபேசி இல: 021 222 5000, தொலைநகல்: 021222 2775 என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் அறிவித்துள்ளார். (இ

# கைகளைக் கழுவக்கூறிய மனைவி மீது கணவன் தாக்குதல்

(வாழைச்சேனை)

வெளியில் சென்று வந்த கணவன் வீட்டுக்குள் வரும் போது கையை கழுவிவிட்டு உள்ளேவரும்படிகூறியமனைவி மீது கடும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,


வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டமாவடி - மீராவோடை பகுதியிலுள்ள நபரொருவர் வெளியில் சென்று மீண்டும் தன்னுடைய வீட்டுக்குள் நுழைந்துள்ளார். அப்போது அவருடைய மனைவி நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரிக்கிறது கைகளை கழுவும்படி அறிவுறுத்துதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே நீங்களும் கைகளைக் கழுவிவிட்டு உள்ளே வாருங்கள் என்று கூறிய போது கோபமடைந்தகணவன்மனைவி மீது தாக்குதலை நடத்தினார்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த பெண் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதோடு. தாக்குதலை மேற்கொண்ட நபரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# ஒரு ஆசனம் மட்டும் கிடைத்தால் அரசியலிலிருந்து ஓய்வுபெறுவேன்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கல்முனை)

பாராளுமன்றத் தேர்தலில் ஒரு ஆசனம் மட்டும் கிடைக்கப் பெற்றால் அடுத்த ஐந்து வருடத்தின் பின்னர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவேன் எனவும் வயதுபோன பின்னர் அரசியல் செய்யப்போவதில்லை எனவும் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அம்பாறை-கல்முனையிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பாராளுமன்ற தேர்தலில் ஒரு ஆசனம் கிடைக்கப் பெற்றால் அடுத்த ஐந்து வருடத்தின் பின்னர் ஓய்வு மக்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கியம் பற்றிய பேச்சு மாத்திரம் இறுதிவரை இருக்கின்றது. செயல்வடிவம் கொடுப்பது பற்றிப் பேசவேண்டும். நாங்கள் தயாராக இருக்கின்றோம்.மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பது போல இருக்க வேண்டும். மக்களுக்கு தேசிய நல்லிணக்கம் அவசியமில்லாமல் எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. நாங்கள் கூட்சி சார்ந்து இருந்தாலும் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு எம்மால் முடியும்.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அதிகளவான பாரா ளுமன்ற உறுப்பினர்கள் இருப்பது போன்று எங்களுக்கு 5 ஆசனங்கள் இருந்தால் போதும். அதனால்தான் மக்கள் ஆணையைப் பெறுவதற் காக வடக்கு-கிழக்கில் தனித்துப் போட்டியிடுகிறோம். அத்துடன் பழிவாங்கும் எண்ணம் இருக்குமானால் நாம் எதையும் சாதிக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# யாழில் முதன்மை வேட்பாளராக “கை” சின்னத்தில் அங்கஜன்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினருமான அங்கஜன் இராமநாதன். எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்டத்தின் முதன்மை வேட்பாளராக "கை" சின்னத்தில் களமிறங்கவுள்ளார் என அவரின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (இ-7)

# கனடாவிலிருந்து இலங்கை வரத் தடை

(கொழும்பு)

கட்டார், பஹ்ரைன் மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து வருகை தரும் பயணிகளுக்கு இலங்கை நுழைவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என சிவில் விமான சேவைகள் திணைக்களத்தின் தலைவர் உபுல் தர்மதாஸ தெரிவித்தார். (இ-7)

# பரீட்சைகள் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் நடத்தப்படவிருந்த வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தால் மறுதிகதி குறிப்பிடும்வரை பிற்போடப்பட்டன.

மேலும் இப்பரீட்சைகள் நடத்தப்படும் புதிய திகதி சகல பரீட்சார்த்திகளுக்கும் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் வடக்கு மாகாண பொதுச் சேவைஆணைக் குழுவின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (இ


**பெண் உதவியாளர் தேவை**

யாழில் இயங்கும் பல் கிளினிக்குக்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு:-
075 975 9828
0094 75 975 9824,
075 975 9827

(2622)

**பொதுக்கூட்டம் பிற்போடல்**

FWC

22.03.2020 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இ.குகானந்தன்
செயலாளர்
077 691 1696

(2623)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 3
கி.பா: 29 செவ் 4 இல்
உயரம்: 5’8”
தகைமை/தொழில்: B.Sc.நில அளவையாளர்(அரச)
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: B/10674

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 1
கி.பா: 11 ½செவ், கேது, சூரி 3 இல்
உயரம்:5’11”
தகைமை/தொழில்: B.Sc. அரச நிலஅளவையாளர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/10675

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: செவ் 6 இல்
உயரம்: 5’8”
தகைமை/தொழில்: Mechanical Engineering. Drivey Instructor
எதிர்பார்ப்பு: படித்த பெண். விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: B/10676

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 2
கி.பா: 66 செவ் 11 இல்
உயரம்: 5’7”
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. இலத்திரனியல் வியாபாரம்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ. இ: B/10677

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 25¾ செவ் 7 இல்
உயரம்: 5’6”
தகைமை/தொழில்: B.Com
எதிர்பார்ப்பு: படித்த உயர்தராதரமுடைய மணமகன்.
தொ.இ: G/7507


பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: செவ், வெள், 5 இல்
உயரம்: 5’4”
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த.
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும். இவர் விவாகரத்தானவர்.
தொ.இ: G/7508

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 16½ செவ் 1 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.
எதிர்பார்ப்பு: பொருத்தமான மணமகன்
தொ.இ: G/7511

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: 13½ சூரி, செவ் 11 இல்
உயரம்: 5’6”
தகைமை/தொழில்: HND IT.-E-Soft.
எதிர்பார்ப்பு: Accountant, Engineer, Banker, Q.S. போன்ற உயர் வரன்
தொ.இ: G/7514

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கொரோனா வைரஸ் தோற்றமும் தொற்றும்




2015 ஆம் ஆண்டு பங்குனி மாதம் அமெரிக்காவின் வான்கூவர் நகரத்திலிருந்து **Bill Gates** உலக மக்களுக்கு ஒரு பகிரங்க அறிவித்தலை விடுக்கின்றார் **(TED.com; Next out beak? We are not ready).**

அது அடுத்த உலக நெருக்கடி பற்றிய செய்தியாகும். "ஒரு அணுகுண்டு வெடிப்பல்ல அது பதிலாக ஒரே மூச்சில் பத்து மில்லியன் மக்களைக் கொல்லக் கூடிய உலகப் பரம்பல் பெற்ற ஒரு வைரஸ் தாக்கமாக்கும். ஆனாலும் உலகம் அதை எதிர்கொள்ளத் தயாராக இல்லை" என்பதாக உள்ளது. இது உலகக் கோடீஸ்வரரின் தெய்வ வாக்கு அல்லவா.

2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 30 ஆம் திகதி இரவு 7 மணிக்கு மர்மமான அறிகுறிகளுடன் உள்ள ஒரு நோயாளியின் மாதிரிகள் வுஹானிலுள்ள வைரஸ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வருகிறது. சில நிமிடங்களில் **Shi Zhengli** என்ற வைரஸ் நிபுணரான **(virologist)** ஒருபெண்ணின் தொலைபேசி அலறுகிறது. அதுமேற்படிநிறுவனத்தின் தலைவரின் அழைப்பு. அவர் சொல்கிறார் "வுஹான் நோய் கட்டுப்பாடுமற்றும் தடுப்பு நிலையத்திலிருந்து **(Wuhan center for diseasecontrol and prevention)** இரண்டு நிமோனியா நோயாளிகளின் மாதிரிகள் பரிசோதனைக்காக வந்துள்ளன. அவர்களின் அறிகுறிகள் வித்தியாசமாக உள்ளது. ஆகவே உங்களின் நவீன ஆய்வு கூடத்தில் மாதிரிகளை பரிசோதிக்க வேண்டும்"

அந்த வைரஸை அடையாளப்படுத்தவும் தோற்றுவாயை அறியவும் **Shi** இனுடைய ஆராய்ச்சிக்கூடத்தில் பரிசோதனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே அந்த வைரஸானது வுஹான் முழுவதும் காட்டுத்தீ போல் பரவிவிட்டது.

### யார் இந்த Shi Zhenghli?

வெளவால் பெண் **(Bat woman)** என அழைக்கப்படுபவர். ஒருபுகழ் பெற்ற வைரஸ் விஞ்ஞானி. 2004 காலப்பகுதிகளில் வைரஸ்க்களைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிப் பயணத்தை மேற்கொண்டார். சர்வதேச அணிகளுடன் சேர்ந்து **Nanning** இலுள்ள வெளவால் குகைகள் நோக்கிப் பயணமானார். இந்த பயணத்தின் நோக்கம் ஒன்று **SARS** வைரஸின் தோற்றுவாயையும் பரம்பலையும் அறிந்து கொள்ளவதாகும். ஆராய்ச்சியின் முடிவில் "கண்டேன் கொரொனாவை வெளவாலில்" என உலகிற்கு அறிவித்தார் ஆராய்ச்சியாளர் **Shi.** தொடர்ந்து ஒரு டசினுக்கு மேலான பயங்கரமான **SARS** போன்ற வைரஸ்க்களை வெளவால்களில் கண்டுபிடித்துள்ளதால் உலகிற்கு ஒரு அவசர எச்சரிக்கையை விடுவதாகக் குறிப்பிட்டார். ஒரே விலங்கில் வெவ்வேறு வகை **SARS** வைரஸ்க்கள் சேர்ந்து வாழும் போது "மீள்சேர்க்கை" எனும் பொறிமுறையூடாக புதியவகை வைரஸ்க்கள் தோன்றுவது சாத்தியமே. எனவே அவரது அவசர அறிவிப்பை விஞ்ஞானிகள் அன்றே கருத்தில் எடுத்திருக்க வேண்டும்.



இந்த படத்தில் Shi ஒரு வெளவாலைப் பிடிப்பதற்காக காட்டுப் பகுதியில் நிற்பது காட்டப்பட்டுள்ளது.


காட்டு மிருகங்களை வேட்டையாடி விற்பனை செய்யும் **guangong** வியாபாரிகள் **SARS** வைரஸ்க்களை மரநாய் மற்றும் கீரிகளிலிருந்து பெற்றுக் கொண்டதாக ஹொங் கொங்கைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதற்கு முன்பு அறிவித்திருந்தார்கள்.

இவ்வருடம் தை மாதம் 22 ஆம் திகதி சீனாவின் தேசிய நிமோனியா கட்டுப்படுத்தும் அமைப்பைச் சேர்ந்த **Guanga wang** என்பவர் **N95** எனப்படும் முகக்கவசம் அணிந்து வுஹான் என்ற கொரோனா வைரசின் தோற்றுவாய்க்கு செல்கின்றார். முகக்கவசம் பாதுகாப்பானது என அவர் கருதியிருக்கக் கூடும். ஆனால் அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுவிட்டது. தனது கண்ணினூடு தொற்று ஏற்பட்டிருக்கலாமென கூறுகின்றார்.

### சீனாவின் Shitou - குகை

இது ஒரு கிராமத்தை அண்டிய பகுதியில் உள்ள குகையாகும். இக் கிராமத்தில் வாழும் மக்கள் ரோசாப் பூக்களையும், தோடம்பழங்களையும்,பெரிப்பழங்களையும் மற்றும் வால்நட் ஆகியவற்றைப் பயிரிடுகின்றார்கள். இப் பகுதியில் வாழும் மக்களில் 200 பேரின் இரத்த மாதிரிகளை **Shi** பரிசோதனை செய்தார். இதில் 6 பேருக்கு **SARS** போன்ற கொரோனா வைரஸ்க்கு எதிரான பிறபொருள் எதிரிகள் காணப்பட்டுள்ளன. ஆனாலும் இவர்களுள் ஒருவராவது வன விலங்குகளைக் கையாளவில்லை. ஆனால் இரவு நேரங்களில் வெளவால்கள் தங்கள் கிராமத்தைச் சுற்றிப் பறப்பதாக அந்த மக்கள் தெரிவித்தனர்.

ஒருமுறை **Shi** யும் அவரது அணியும் **Yunnan** மலைசார் பகுதிக்குச் சென்று நிமோனியாவினால் பாதிக்கப்பட்ட 6 சுரங்க தொழிலாளர்களிடம் பரிசோதனை மேற்கொண்டார்கள். இவர்களில் கொரோனா வைரஸ் தொற்று காணப்பட்டதை கண்டுபிடித்தார்கள். இவர்களில் இருவர் பின்பு மரணித்து விட்டார்கள். தொடர்ந்து அவ்விடத்தில் மெற்கொண்ட ஆராய்ச்சிகளில் ஆறு வகையான வெளவால் இனங்களில் பல்வேறு வல்கயான கொரோனா வைரஸ் காணப்பட்டதை அறிந்து கொண்டார்கள். வெளவால்களை **"Flying factory of new viruses"** "பறக்கும் வைரஸ் தொழிற்சாலைகள்" என அறிவித்தார்கள்.




கொரோனா வைரஸானது விலங்குகளில் தோன்றி விலங்குகளூடாக மனிதனை அடைகின்றது.

காடழிப்பும், காட்டு மிருகங்களின் இடங்களைப் பிடித்துக் கொள்ளவதும் உலகமெங்கும் முழுமூச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்க வெளவால்கள் , மரநாய்கள், கீரிகள், குதிரைகள், பன்றிகள் போன்ற விலங்குகள் வைரஸ் உற்பத்தி தொழிற்சாலையாக மனித வாழ்விடங்களை நோக்கி வருவதும் ஒரே விலங்கில் பல்வேறு வகையான கொரோனா வைரஸ் வாழ்வதும் அதனால் ஏற்படும் **RNA** மீள் சேர்க்கையினூடாக புதிய வைரஸ்க்கள் தோற்றம் பெறுவதும் இனி நடந்து கொண்டே இருக்கும். அதிவீரியமுள்ள வைரஸ்க்கள் வழித்தோன்றிக் கொண்டே இருக்கும். இன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உலக சுகாதார அவசரநிலை இனிவரும் தசாப்த காலங்களிலும் பிரகடனப்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### கொரோனா வைரஸின் அமைப்பு

கொரோனா வைரஸானது வைரஸ்களில் பெரியதும், உறை ஒன்றினால் சூழப்பட்டதுமான ஒற்றைச் சங்கிலி **RNA** என்ற பரம்பரை பதார்த்தத்தை கொண்ட ஒரு வைரஸாகும். இது விலங்குகளிலும், மனிதர்களிலும் தொற்றக் கூடிய இயல்பு கொண்டது. இந்த வகை வைரஸ்க்களாவன நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன,

$\alpha$.(அல்பா), $\beta$. (பீற்றா), $\gamma$. (காமா) மற்றும் $\delta$ (டெல்ரா) கொரோனா வைரஸ்களாகும். இவற்றுள் a மற்றும் B வகையைச் சேர்ந்த வைரஸ்கள் மனிதனில் தொற்றக் கூடியவை. இதில் அல்பா கொரோனா வைரஸ்க்களான **hCov-NL63** மற்றும் **hCoV– 229E** ஆகும். பீற்றா கொரோனா வைரஸ்க்களாவன **HCoV– OC 43, HKU, SARS –CoV** மற்றும் **MERS –CoV** என்பனவாகும்.


இவற்றுள் பீற்றா கொரோனா வைரஸ்க்கள் பல வருடங்களுக்கு முன் மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. 2002 - 2003 காலப்பகுதியில் **SARS - CoV** முதலில் சீனாவில் ஆரம்பித்து மற்றைய நாடுகளுக்கு வேகமாகப் பரவியது. இதனால் 8000 இற்கும் அதிகமானவர்கள் நோய்த் தொற்றுக்கு உள்ளாகினார்கள். அத்துடன் கிட்டத்தட்ட 800 உயிரிழப்புக்கள் பதிவாகின. மீண்டும் 2012 இல் இன்னொரு வகையான பீற்றா கொரோனா வைரஸ் **MERS –CoV** முதலில் மத்திய கிழக்கிலும் தொடர்ந்து பல நாடுகளிலும் மனிதர்களில் தொற்றியது. இதனால் 1110 பேர் தொற்றிற்கு உட்பட்டு 422 பேர் மரணித்ததாகவும் சித்திரை மாதம் 29 ஆம் திகதி 2015 ஆம் ஆண்டில் பதியப்பட்டது. **SARS** மற்றும் **MERS** வைரஸ்க்கள் விலங்குகளிலேயே வாழ்ந்தன. வெளவால்களிலேயே இவ் இரண்டு வகை வைரஸ்க்களும் முதன் முதலில் தொற்றி பின் ஒரு இடைப்பட்ட விலங்குகளினூடாக மனிதனை அடைந்து இருக்கலாமென கருதப்பட்டது.

2002 இலும் 2015 இலும் மூன்றாம் தடவையாக 2019 இலும் ஒரே வகையான கொரோனா வைரஸ் தனது பிரத்தியேக இயல்புகளை மாற்றி மாற்றி வீரியமடைந்ததென்பது ஆச்சிரியப்படத்தக்க விடயமல்ல. ஏனெனில் அது ஒரு **RNA** வைரஸ். **RNA** பரம்பரை கூறானது இயல்பாகவே மாற்றமடையக் கூடிய தன்மை கொண்டது. **RNA** இல் ஏற்படும் மாற்றங்களை சீர் செய்து கொள்வதற்கான பொறிமுறைகள் இல்லை. ஆகவே **RNA** விகாரமடைதல் சர்தாரணமாகவே நடைபெறக்கூடியதே. அதைவிட முக்கியமாக மீள்சேர்க்கை நடைபெறுவதன் மூலம் புதிய புதிய கொரோனா வைரஸ்க்கள் தோன்றிக் கொண்டே இருக்கப்போகின்றன. இது **COVID – 19 (SARS-CoV– 2)** உடன் நின்றுவிடப்போவதில்லை என்பது தெளிவாகப்படுகின்றது.

2019 காலப்பகுதியிலிருந்த **COVID – 19** மிகவும் வீரியமாக இருந்ததாகவும், இவ்வருடம் தைமாதத்தில் உள்ள **COVID– 19** இன் வீரியத்தன்மை ஒப்பிட்டளவில் குறைந்துள்ளமையும் சீன ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் பிறப்புரிமையலகுகளினால் ஒரு முக்கியமான நான்கு வகையான புரதங்கள் உருவாக்கப்படுகின்றன. அவையாவன, **'S'** புரதம் **(Spike)**, **'N'**புரதம் **(Nucleoucapsid), M** புரதம் **(Membrane) E** புரதம் **(Envelop)** இந்த நான்கு வகையான புரதங்களும் மற்றைய கூறுகளுடன் சேர்ந்து புதிய வைரஸ் துணிக்கையினை உருவாக்குகின்றன.

கொரோனா வைரஸ் மனிதக் கலங்களை **(Hostcells)** தாக்கப்போகின்றதென்பது அதன் உறையில் காணப்படும் முளைபுரதமான ஒரு கிளைக்கோ புரதம் ஒன்றினால் தீர்மானிக்கப்படுகின்றது. இது **Spike Glycoprotein** ஆகும். **S** புரதம் என அழைக்கப்படுகின்றது. இப் புரதமானது மனித கலங்களிலுள்ள **ACE– 2(Angiotensin converting enzyme)** என அழைக்கப்படும் ஒரு நொதியத்தில் பிணைந்து கொள்கின்றது. இதை தொடர்ந்து இப்புரதமானது **S1** மற்றும் **S2** என உப பகுதிகளாக எமது உடலில் உள்ள ஒருவகை செரீன் புரோத்தியேசு எனும் நொதியத்தினால் பிரிக்கப்படுகின்றது. இணைந்து கொண்ட வைரஸானது விருந்துவழங்கி கலமென்சவ்வுடன் ஒன்றித்துக் **(Fusion)** கொள்கின்றது.





Anti – ACE – 2 antibodies
வைரஸ் தொற்றைத் தடுக்கிறது

**SARS–CoV** இலுள்ள **"S"** புரதமும் **SARS–CoV–2** இலுள்ள **S** புரதமும் ஏறத்தாழ **76.5%** ஒத்துப்போகும் ஒரே அமினோ அமில தொடர்களைக் கொண்டதாக அறியப்பட்டுள்ளது. **SARS –CoV–2** இன் 394 ஆவது அமினோ அமிலமாக குளுராமைன் காணப்படுகின்றமையானது மனிதக் கலமென்சவ்வு வாங்கியான **ACE– 2** உடன் கூடிய திறனுடன் இணையக்கூடிய வாய்ப்பைக் கொண்டிருக்கின்றது. இதனால் **SARS –CoV–2** ஆனது **SARS –CoV** ஐ விட மிகவும் வீரியத்துடன் மனித கலங்களுடன் பிணையும் தன்மை ஏற்படுகின்றது. சுவாச சிற்றறை கலமென்சவ்வு மற்றும் குடல் பகுதிகளில் உள்ள கலமென்சவ்வு ஆகியவற்றிலுள்ள **ACE – 2** நொதியத்துடன் இந்த வைரஸ்க்கள் இணைந்து கொள்கின்றன. தொடர்ந்து மனிதக் கலங்களுக்கு உட்சென்று பெருகிக் கொள்கின்றன.

(18ஆம் பக்கம் பார்க்க....)

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2020-13.04.2020



விகாரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம் தான். என்றாலும் ஜென்ம சனியின் ஆதிக்கம் இருக்கிறது. ஏழரைச் சனியில் இன்னும் பாக்கி இருப்பதால், கொஞ்சம் கவனமுடன் இருப்பதே நல்லது. தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் கைவிட வேண்டாம். விரயாதிபதி செவ்வாய் உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் விரயங்கள் கூடுதலாக இருக்கும். அவற்றை சுபவிரயங்களாக மாற்றிக் கொள்ளுங்கள்.

குடும்பத்தில் குழப்பம் அதிகரிக்கும் நேரமிது. விழிப்புணர்ச்சியோடும், இறை சிந்தனையோடும் செயல்பட்டால் தான் விருப்பங்களில் ஒன்றிரண்டாவது நிறைவேறும்.

ஜென்மத்தில் சனியும், கேதுவும் இருப்பதால் உறுதியான முடிவெடுக்க முடியாமலும் அங்ஙனம் முடிவெடுத்தால், செயல்படுத்த முடியாமலும் தவிப்பீர்கள்.

ராகு கேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால், ஏற்றமும், இறக்கமும் வந்து கொண்டே இருக்கும். அதற்குரிய சர்ப்பசாந்தி பரிகாரங்களை முறையாக செய்தால், முன்னேற்றப் பாதையில் செல்லலாம்.

உங்களுக்கு சம்பந்தம் இல்லாத விடயங்களில் தலையிட்டால் வழக்கு, விசாரணை என்று அலைய நேரிடும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல் நல பாதிப்பு இருக்கும். மருத்துவ செலவுக்காக ஒரு தொகையை எடுத்து வைக்க வேண்டியதிருக்கும். இம்மாதம் உங்கள் இராசி நாதன் குருவும் நீச்சம் பெறப் போகிறார். குரு வலிமை இழக்கும் பொழுது மனக்கவலையும், பணக்கவலையும் அதிகரிக்கும். யாருக்கேனும் வாக்கு கொடுத்தால் கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. கொள்கை பிடிப்பையும் தளர்த்திக் கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும்.

சந்தர்ப்பங்கள் சாதகமாக அமைய, இறைவனின் துணை அவசியம் தேவை. அதுமட்டுமல்ல அதிக விழிப்புணர்ச்சியோடு செயல்பட்டால் தான் அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக் கொள்ள இயலும். இம்மாதம் பங்குனி உத்திர திருநாள் வருவதால் முறையாக முருகப்பெருமானை வழிபட்டு வாருங்கள். கனவுகள் நனவாகும். காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

### மகர செவ்வாய் சஞ்சாரம்

உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த செவ்வாய் மார்ச் 22 ஆம் திகதி மகர இராசிக்கு செல்கிறார். விரயாதிபதி தன ஸ்தானத்திற்கு செல்லும் இந்த நேரம் விரயத்திற்கு ஏற்ற தனம் வந்து கொண்டே இருக்கும். வீடு மாற்றங்களும்,

## வரும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்

இட மாற்றங்களும், ஊர் மாற்றங்களும் ஒரு சிலருக்கு ஏற்படலாம். எந்த காரியத்தையும் பணத்தை கையில் வைத்துக் கொண்டு செய்ய இயலாது. காரியத்தை தொடங்கிவிட்டால், பணப்புழக்கம் தானாக வந்து சேரும். தோட்டம் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். பத்திர பதிவில் இருந்த தடைகள்அகலும் உடன் பிறப்புகள் உங்களோடு

இணைந்து செயல்பட முன் வருவதாக சொல்வர்.

### நீச்ச குரு சஞ்சாரம்

மார்ச் 27 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கிறார். அங்கு அவர் நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசியை பொறுத்தவரை குரு நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. இராசி நாதனாகவும், 4 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் குரு பகவான். இந்த காலகட்டத்தில் சொல்லை செயலாக்கிக் காட்ட இயலாது. சோதனைகளுக்கு ஆட்பட நேரிடும்.




விரயங்கள் அதிகரிக்கும். விமர்சனங்களுக்கு ஆளாவீர்கள். அரசு வழி தொல்லைகள் வந்துசேரும். ஆக்கப்பூர்வமாக செயல்பட இயலாது.

### ரிஷப சுக்கிரன் சஞ்சாரம்

மார்ச் 29 ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். 6 இற்கு அதிபதி 6 இல் வரும்பொழுது எதிர்ப்புகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் நடைபெறாது. மதிப்பையும், மரியாதையையும் தக்க வைத்துக்

கொள்ள பெரும் முயற்சி எடுக்கும் சூழ்நிலை உருவாகும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்பட்டு மனக்கவலை அதிகரிக்கும். எதிரிகளின் பலம் கூடும் இந்த நேரத்தில், எதிலும் அதிக விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது.

### நீச்ச புதன் சஞ்சாரம்

ஏப்ரல் 1 ஆம்திகதி மீன இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு புதன் நீச்சம் பெறுகிறார். 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் நீச்சம் பெறுவது யோகம்தான். சுபவிரயங்கள் அதிகரிக்கும். தொழில் மாற்ற சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரத்திற்கான மாறுதல்கள் கிடைக்கலாம். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிக்கு பணம் கொடுத்து உதவுவீர்கள். அதன் மூலம் சேமிப்பு கொஞ்சம் கரையலாம். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மாறும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு பகவானை வழிபாடு செய்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பொருளாதார பற்றாக்குறை அதிகரிக்கும். புதிய திருப்பங்கள் ஏற்படும். இடமாற்றம், வீடு மாற்றங்கள் இனிதாக அமையும். எதிர்பார்த்த வரவு வருவதில் தாமதம் ஏற்படும். கணவன் - மனைவி ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயல்படுவது நல்லது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. தாய்வழி ஆதரவு திருப்தி தரும்.

சகோதர வர்க்கத்தினரில் ஒரு சிலர் மட்டும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். பணிபுரியும் பெண்களுக்கு சக பணியாளர்களால் தொல்லைகள் ஏற்படலாம். பிரச்சினைகளில் இருந்து விடுபட பிரதோஷ காலத்தில் நந்தியையும், செவ்வாய்க்கிழமை முருகப் பெருமானையும் வழிபட்டு வாருங்கள்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் 4 கிரகங்கள் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றன. குறிப்பாக விரயாதிபதி குரு விரய ஸ்தானத்திலேயே இருக்கிறார். அவரோடு தனாதிபதி சனியும் வீற்றிருக்கிறார். எனவே தன விரயம் அதிகரிக்கும் நேரமாக இந்த காலகட்டம் அமையப்போகிறது. மேலும் ஞானகாரகன் கேதுவும், 12 இல் சஞ்சரிப்பதால் ஆன்மீகப் பயணங்கள் அதிகரிக்கும். 4, 11 இற்கு அதிபதியான செவ்வாய் விரய ஸ்தானத்தில் பலம் பெற்றிருக்கிறார்.

குருவோடு செவ்வாய் இணைந்திருப்பதால் குரு மங்கள யோகமாக கருதலாம். எனவே தாய்வழி உறவினர்களின் இல்லத் திருமண விழாக்கள் நடைபெறுவதற்கு உறுதுணையாக இருப்பீர்கள். இடம், பூமி வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். பூர்வீக சொத்துக்களை விற்று விட்டுப் புதிய சொத்துக்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர்.

இம்மாதம் குருவும் நீச்சம் பெறுகிறார். புதனும் நீச்சம் பெறுகிறார். குரு நீச்சம் பெற்றாலும், நீச்சபங்க ராஜயோகமாக

மாறும் அமைப்பை உருவாக்குகிறார். புதன் நீச்சம் பெற்று தன் வீட்டைத் தானே பார்க்கும் யோகம் உண்டு. மாதத் தொடக்கத்தில் அஷ்டமாதிபதி சூரியன் 3 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால், உங்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பார். ஏழரைச் சனியிலும் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. என்ன தான் சிறப்பான வாய்ப்புகள் உங்களைத் தேடி வந்தாலும், கடைசி நேரத்தில் அது கைநழுவிச் செல்லலாம்.

அதிகார பதவியில் உள்ளவர்களை பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு திடீர் திடீரென திருப்பங்கள் ஏற்படும். செயல்பாட்டில் பலரும் குற்றம் காண்பர். மக்கள் சேவையை மகத்தாக செய்தாலும் தொண்டர்களின் ஆதரவு குறைவாகவே கிடைக்கும்.

இம்மாதம் ஏழரைச் சனியின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட விநாயகப் பெருமானையும், அனுமனையும், சனி பகவானையும் விடாது வழிபட்டு வரவேண்டும். மேலும் இம்மாதம் பங்குனி உத்தரத் திருநாள் வருகிறது. அன்றைய தினம் முருகப் பெருமானை முறையாக வழிபட்டு வந்தால் முன்னேற்றம் அதிகரிக்கும்.

### மகர செவ்வாய் சஞ்சாரம்

மாறி மாறி வரும். இளைய சகோதரத்தோடு பகை மாறலாம். பிறருக்கு வாங்கிக் கொடுத்த தொகை பெரும் முயற்சியின் பேரில் மீண்டும் கைக்கு கிடைக்கும்.

### மகர குரு சஞ்சாரம்

மார்ச் 27 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கிறார். அங்குள்ள செவ்வாயோடு இணைந்து குரு மங்கள யோகத்தை உருவாக்குகிறார். எனவே மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள், பெற்றோர்களின் மணி




விழா, முத்துவிழா போன்றவற்றை நடத்திப் பார்க்கும் சூழல் உருவாகும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்கள் வாங்கு

தொழிலை வளப்படுத்திக் கொள்வீர்கள். விரக்தி மனப்பான்மையை வேரோடு தூக்கி எறிந்து வியக்கும் வண்ணம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் திட்டமிடுவீர்கள்.

### மீன புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த புதன் ஏப்ரல் 1 ஆம் தேதி 3 ஆம் இடமான மீனத்திற்கு செல்கின்றார். மீன இராசி புதனுக்கு நீச்ச வீடாகும். 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் நீச்சம் பெறுவதால் நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும்.

6 இற்கு அதிபதி நீச்சம் பெறுவது யோகம்தான் என்றாலும் 9 இற்கு அதிபதியாகவும் அல்லவா புதன் விளங்குகிறார். எனவே உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிகள் கிடைக்கலாம். இலாகா மாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப், பலன்கள்

இம்மாதம் கூடுதல் விரயங்களைச் சந்திக்க நேரிடும். கொடுக்கல் வாங்கல்களில் திருப்தி ஏற்படாது. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கணவன்-

## விரயங்கள் அதிகரிக்கும் நேரம்

மகர இராசிக்கு மார்ச் 22 ஆம் திகதி செவ்வாய் பெயர்ச்சியாகி செல்கிறார். அங்கு செவ்வாய் உச்சம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். என்றாலும் அஷ்டமாதிபதி சூரியன் 3 ஆம் இடத்தில் இருப்பதால் ஒரு சில பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடும். இடம், பூமி விற்பனையால் இலாபம் கிடைத்தாலும், அதைக் கைப்பற்றிக்கொள்ள இயலாமல் போகலாம்.

குடும்பத்தில் கலகலப்பும், சலசலப்பும்

வதில் கவனம் செலுத்துவீர்கள்.

### ரிஷப சுக்கிரன் சஞ்சாரம்

மார்ச் 29 ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். பஞ்சம ஸ்தானத்தில் சுக்கிரன் பலம் பெற்றிருப்பது யோகம் தான். உடல் நலம் சீராகும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். புதியவர்களைக் கூட்டாக சேர்த்துக் கொண்டு

மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குடும்பப் பெரியவர்களை கலந்து ஆலோசித்து செய்ய எடுத்த முடிவு வெற்றி தரும். தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினர்களின் ஒத்துழைப்பு ஓரளவு கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்து நிர்ப்பந்தங்கள் அதிகரிக்கும். எதிர்பார்த்தபடியே இடமாற்றங்களும், இலாகா மாற்றங்களும் வரலாம். அனுமன் வழிபாடும், சனிபகவான் வழிபாடும், அழகன் முருகன் வழிபாடும் நன்மையை வழங்கும்.

(தொடரும்)

## கொரோனா அச்சம்!

# வவு.சிறையில் கைதிகள் உணவு தவிர்ப்பு

(நெளுக்குளம்)

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் உள்ள கைதிகள் கொரோனா அச்சம் காரணமாக தம்மை பிணையில் விடுவிக்க வேண்டும் எனக் கோரி உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸின் தொற்று காரணமாக தம்மை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பிணையில் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தனர். எனினும் சிறைச்சாலை அதி காரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்து சிறைச்சாலை வளாகத்தில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். (9-299)

# கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பது பொதுமக்களின் ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது

## கிளி.மாவட்ட பொது வைத்தியசாலை அதிகாரி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் நோயாளர் இனங் காணப்பட்டால் உடனடியாக அவர்களை தங்க வைத்து சிகிச்சை வழங்கக்கூடிய பகுதி ஒன்று கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் தயார்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட பொதுவைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி இராகுலன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரம்பலை தடுக்கும் செயற்பாடுகள் தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபையில் இடம்பெற்ற விசேட அமர்வில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், மக்களின் முழுமையான ஒத்துழைப்புக்கள் மிகமிக அவசியமாகும்.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையை பொறுத்தவரையில் இவ்வாறு வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி யாராவது இனங்காணப்பட்டால் அவர்களை தனிமைப்படுத்தி உடனடியாக வைத்திய சேவைகளை வழங்கக்கூடிய வகையில் வசதிகள் இல்லாவிட்டாலும் இரண்டு கட்டில்களை கொண்ட தனிமையான இடம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருவோர் கைகளை கழுவிவிட்டு வரக்கூடியவாறும் வைத்தியசாலையில் இருந்து வெளியில் போகும் போதும் கைகளை கழுவிவிட்டு செல்லுமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

அத்துடன் நோயாளர்களை பார்வையிட வருவோர் நோயாளர்களுடன் இருத்தல் என்பவற்றை இயன்றளவு குறைத்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுகள் இரண்டாக பிரிக்கப்பட்டு சுவாசம் தொடர்பான நோயாளர் தனியாகவும் ஏனைய நோயாளர்கள் தனியாகவும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டுகின்றன.

எது எவ்வாறு இருப்பினும் நோய்த்தொற்றுக்களை தடுப்பது என்பது பொதுமக்களின் ஒத்துழைப்புக்களிலேயே தங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-100-315)

# தனிமைப்படுத்தல் முகாமை மன்னாரில் அமைக்க முடியாது

## மன்.நகரசபை முதல்வர்

(மன்னார்)

நாடு முழுவதும் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்திய கொரோனா வைரஸ் தாக்கத்தில் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் எனக் கருதி மன்னாரில் தனிமைப்படுத்துவதற்காக அழைத்து வரும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை நாட்டிற்குள் வருபவர் களில் "கொரோனா" வைரஸின் தாக்கம் இருக்கும் என சந்தேகிக்கப்படும் நபர்களை மன்னாரிற்கு கொண்டு வருவதற்காக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த நடவடிக்கை மன்னார் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள "காமன்ஸ்" கட்டடத் தொகுதியில் குறித்த வெளிநாட்டவர்களை கொண்டு வந்து தனிமைப்படுத்தி வைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனால் மன்னார் மக்கள் அச்சசமடைந்த நிலையில் உள்ளனர்.

பாதிப்பிற்குள்ளானவர்கள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை மேற்கொள்ள ஒத்துழைப்பை வழங்க முடியும். ஆனால் வெளிநாட்டைச் சேர்ந்த, ஏனைய மாவட்டங்களை சேர்ந்தவர்களை மன்னாரிற்கு அழைத்து வந்து தனிமைப்படுத்த அனுமதிக்க முடியாது. குறித்த பகுதியில் குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் என பல தரப்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே அவர்களுக்கும் குறித்த வைரஸ் தொற்று ஏற்படலாம். எனவே வெளி மாவட்டங்களை சேர்ந்தவர்கள் மன்னாருக்குள் அழைத்து வந்து தனிமைப்படுத்துவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (9-285)




# திருக்கேதீஸ்வரத்தில் மகா யாகம்

(மன்னார்)

கொரோனா வைரஸ் தாக்கத்தினை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மன்னார் திருக்கேதீச்சரத்தில் மகா யாகம் நடைபெறவுள்ளதாக திருக்கேதீச்சர திருப்பணிச்சபை செயலாளர் எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

உலக மக்களை அச்சுறுத்தி வேகமாக பரவி வரும் கொரோனா வைரஸ் தாக்கத்தினை முடிவுறுத்தி உலக மக்கள் நலம் பெற பிரார்த்திக்கும் வண்ணம் மன்னார் திருக்கேதீச்சரநாதர் திருக்கோயிலில் சனிப்பிரதேச நாளான எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் 12 மணி வரை மகா யாகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

அத்தருணம் அடியவர்கள் யாவரும் இம்மகா யாகத்தை மனதில் இருத்தி உலக மக்கள் நலம் பெற வேண்டி தங்கள் இல்லங்களில் இருந்தே இறைவனை பிரார்த்தனை செய்யுமாறு மேலும் தெரிவித்துள்ளார். (9-285)

# மரக்கடத்தல் முறியடிப்பு



(நெளுக்குளம்)

வவுனியா பம்பை மடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரக்கடத்தலில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்துள்ளதாக வட்டார வன காரியாலய அதிகாரி தெரிவித்துள்ளார்.

வவுனியா பம்பைமடு பகுதியில் சட்ட விரோதமான முறையில் மரங்கள் வெட்டப்பட்டு பலகைகளாக்கப்பட்டு கடத்தப்பட இருப்பதாக வட்டார வன அலுவலகருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் வட்டார வன அதிகாரி தலைமையிலான குழுவினரால் இவ் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்விசேட நடவடிக் கையில் 41 மருதமர பலகைகள் மற்றும் 5 பாலை மர பலகைக்ளை மீட்கப்பட்டதுடன் கடத்தலுக்கு பயன்படுத்திய வாகன மும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இக்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (9-299)

# கொரோனா-விழிப்புணர்வு



(கண்டாவளை)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பச்சிலைப்பள்ளி பிரதேச கிளையினால் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து எவ்வாறு பாதுகாப்பாக நடந்து கொள்வது என்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் செயலாளருமான சு.சுரேன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் ஒலிபெருக்கி மூலம் மக்களை விழிப்பூட்டும் கருத்துடன் கூடிய துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள், சந்தைகள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களில் துண்டுப் பிரசுரம் மூலமும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் உப தவிசாளர், உறுப்பினர்கள், இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டனர். (9-315-316)

# வேட்புமனு தாக்கல் செய்யும் முன் கைகளை கழுவுங்கள்

(நெளுக்குளம்)

வேட்புமனுவை தாக்கல் செய்ய வருபவர்கள் தமது கைகளை சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் வவுனியா மாவட்ட செயலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுக்கு வேட்பு மனுக்களை அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்கள் தாக்கல் செய்து வருகின்றன.

இந்நிலையில் வன்னி தேர்தல் தொகுதிக்கான வேட்புமனுக்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்யப்படுகின்றது.

இந்நிலையில் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு இருவரே அனுமதிக்கப்படும் நிலையில் அவர்கள் தமது கைகளை சுத்தம் செய்வதற்காக வேட்புமனு தாக்கல் செய்யும் பகுதிக்கு முன்பாக கைகளைச் சுத்தம் செய்யும் பதார்த்தம் மற்றும் ரிசு என்பன வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை இருவர் இது தொடர்பில் வேட்புமனு தாக்கல் செய்ய வருவோருக்கு அறிவுறுத்தல் வழங்கவும் மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (9-299)




# மன்னார் ஆயருடன் குணசீலன் சந்திப்பு

(மன்னார்)

வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தலைமையிலான "தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின்" வன்னி மாவட்ட தேர்தல் தொகுதியின் மன்னார் மாவட்ட வேட்பாளராக போட்டியிடும் வட மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஞானசீலன் குணசீலன் நேற்று மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடியதோடு அவரிடம் ஆசி பெற்றார். (9-285)



(குருமன்காடு)

கொரோனா தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களை பாதுகாப்பாக இருக்க வழிவகுக்கும் வகையில் வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தால் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

இத்துண்டுப்பிரசுரங்கள் ஊடகவியலாளர்களால் வவுனியாவின் ஆலயங்கள், புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், முச்சக்கர வண்டிகள், பேருந்துகள் என பல இடங்களிலும் பரவலாக விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-250)

# கொரோனா தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றமடையும் வவுனியா மாவட்டம்

## அச்சத்தில் பொதுமக்கள்



(நெளுக்குளம்)

**கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானதாக சந்தேகிக்கப்படும் 449 நபர்கள் கொழும்பிலிருந்து வவுனியாவிலுள்ள பல பகுதிகளுக்கு வரவழைக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதனால் வவுனியா நகரம் பிரதான கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றமடைந்து வருவதாக பொதுமக்கள் அச்சமடைந்து வருகின்றனர்.**

வவுனியாவிற்கு கடந்த 13 ஆம் திகதி 265 கொரோனா வைரஸ் தொற்குள்ளானதாக சந்தேகிக்கப்படும் நபர்கள் விமான நிலையத்திலிருந்து பொலிஸாரின் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டு பம்பைமடு பெண்கள் இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் 16 ஆம் திகதி மேலுமொரு தொகுதி 134 கொரோனா நோயாளர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இத்தாலி, தென்கொரியா, ஈரான் ஆகிய நாடுகளிலிருந்து விமான நிலையத்திற்கு வந்திறங்கியவர்கள் பெரியகட்டு இராணுவ முகாமிற்கு அழைத்து வரப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளதுடன் நேற்று அதிகாலை பூவரசன்குளம் வேலங்குளம் விமானப்படை முகாமிற்கு 15பெண்கள், 35 ஆண்கள் உட்பட 50 பேர் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

தற்போது வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 449 ஆக அதிகரித்து வருகின்றது.

இந்நடவடிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று நம்பப்படுவதுடன் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுக்குள்ளானதாக சந்தேகிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை காணக்கூடியதாக உள்ளது.

இந்த நிலையில் வவுனியா பிரதான கொரோனா வைரஸ் நோய் தொற்றுக்குள்ளானவர்களை தனிமைப்படுத்தும் முகாமாக மாற்றமடைந்து வருகின்றதை அவதானிக்க முடிந்துள்ளதுடன் மக்கள் மத்தியில் அச்ச நிலையையும் ஏற்படுத்தி வருவதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (9-250-299)




## ஆலயங்களில் அமைதியாக வழிபடுங்கள் அதிகமாக கூடுவதை தவிர்த்திடுங்கள் சர்வதேச இந்து இளைஞர் பேரவை

(நெளுக்குளம்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக அனைத்து இந்துமத வழிபாட்டுத்தலங்களிலும் அமைதியான முறையில் அடியவர்கள் வழிபடலாம் எனவும் நித்திய கைங்கரியங்களில் எந்த மாற்றமும் ஏற்படுத்தத் தேவை இல்லை எனவும் நைமித்திய பூஜைகளை சற்றே ஆடம்பரமில்லாது அமைதியாக செய்து கொள்ளவும் எனவும் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ.ஜெ.மயூரக் குருக்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே மேற்படி தெரிவித்துள்ளார். குறித்த அறிக்கையில், இன்று உலக நாடுகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸானது பல மனித உயிர்களைக் காவுகொண்டுள்ளதுடன் மிக வேகமாகப் பரவியும் வருகின்றது. அதனைக் கட்டுப்படுத்த பல உலக நாடுகள் திணறி வருகின்றது. ஆனால் அவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதை நாம் அனைவரும் அறிவோம்.

அதனை மேலும் பரவாமல் செய்ய மருத்துவத்துறையும் அரசாங்கமும் பல வழிகளை எமக்கு சொல்லியிருக்கின்றது. எனவே அவற்றை செய்ய வேண்டியது அனைவரது கடமையுமாகும். அதனால் இந்த நோய்த்தாக்கத்தில் இருந்து நாம் அனைவரும் காக்கப்பட வேண்டுமேயானால் சில முன்னேற்பாடுகளை செய்ய வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு.

தொடுகைகள் மற்றும் சுவாசங்கள் மூலம் பரவுவதால் பலர் ஓரிடத்தில் சேரும்போது அதனுடைய பரம்பல் பரவலடையும். எனவே அப்படியான சந்தர்ப்பங்களை அனைவரும் தவிர்த்துக்கொள்வோம்.

இது அனைவரது உயிர்சார்ந்த நடவடிக்கையாகும். அதனால் நாம் ஆலயங்களில் தற்காலிகமாக அதிகமாக கூடுவதனை தவிர்கலாம். பொது நன்மைகள் கருதி அவற்றை குறைத்துக் கொள்வதில் எந்த இடையூறுகளும் ஏற்படப்போவதில்லை. வழமையான வழிபாடுகளுக்கும் எந்த குந்தகமும் ஏற்படப்போவதில்லை.

எனவே மருத்துவர்களின் ஆலோசனைப்படி அவற்றை மேற்கொள்வதுடன் அனைத்து சுகாதாரத் தொண்டர்கள் மருத்துவர்களுக்கும் பூரண ஆதரவினை வழங்கி அவர்களின் செயற்பாடுகள் சிறப்பாக அமைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

தேவை ஏற்படும் போது சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் அனைத்து இளைஞர்களும் உறுப்பினர்களும் களத்தில் இறங்கி வேலை செய்யவும் தயாராக உள்ளனர். எனவே ஆலயம் சார்ந்தோர்கள் இதனை நடைமுறைப்படுத்துமாறு அன்பாகக்கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-299)

## இ.போ.சபை பேருந்துகளில் தொற்று நீக்கல் செயற்பாடுகள்

(குருமன்காடு)

இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை பேருந்துகளில் கிருமி தொற்று நீக்கல் செயற்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

கொரோனா வைரஸ் தொற்று பரவலடைந்து வரும் நிலையில் இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலையில் இருந்து புறப்பட்டு பொதுமக்களுக்கான சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு மருந்து தெளித்து கிருமி நீக்கம் செய்யும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பேருந்துகளின் கைபிடிப் பகுதி, இருக்கைகள், ஜன்னல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் மருந்து தெளித்து




கிருமி நீக்கம் செய்யும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. (9-250)

## வவுனியாவில் கைக்குண்டு மீட்பு

(நெளுக்குளம்)

வவுனியா மாமடு பகுதியில் நேற்றுக் காலை வெடிக்காத நிலையிலிருந்த கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக மாமடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், வவுனியா - மாமடு நெடுங்குளம் பகுதி வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பொதுமகன் ஒருவர் வீதிக்கு அருகே வெடிக்காத நிலையிலிருந்த கைக்குண்டு ஒன்று அப்பகுதியில் இருப்பதனைக் கண்டுள்ளார். உடனடியாக மாமடு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன் பொலிஸாரால் விசேட அதிரடிப்



படையினருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

இதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் 'கைக்குண்டை செயலிழப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டனர். (9-299)





கொரோனா வைரஸிலிருந்து உலக மக்களை பாதுகாக்க வேண்டி நேற்று முன்தினம் வவுனியா கருமாரி அம்மன் ஆலயத்தில் விசேட பிரார்த்தனை இடம்பெற்றது. மக்களை தொற்றிலிருந்து பாதுக்காக்கவும், இத் தொற்றினால் இறந்தவர்களின் ஆத்மா சாந்தி வேண்டியும் நெய் விளக்கேற்றி விசேட கூட்டு பிரார்த்தனை இடம்பெற்றது. (படங்கள்-நெளுக்குளம் செய்தியாளர்)

## முல்லை.மாவட்டத்தில் 5 இந்தியர்கள் கைது

(முல்லைத்தீவு)

சுற்றுலா விசா மூலம் இலங்கைக்கு வந்து, முல்லைத்தீவு மாவட்டத்தில் வியாபாரம் மற்றும் சாத்திரம் நடவடிக்கையில் ஈடுபட்ட 5 இந்தியர்களை, முல்லைத்தீவு பொலிஸார், நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவர்கள், முல்லைத்தீவு நகரம் மற்றும் குமுழமுனைப் பிரதேசங்களில், சாத்திரம் மற்றும் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனரென, பொலிஸார் தெரிவித்தனர்.கைது செய்யப்பட்ட ஐவரும், தமிழ்நாடு , மதுரை பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களை, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (9-281)

# பாரதம்

## இந்தியாவில் கொரோனா தொற்று மூவர் உயிரிழப்பு;129 பேர் பாதிப்பு


(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 129 ஆக உயர்ந்துள்ளது. அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 39 பேர் பாதிக்கப்பட்டனர்.

சீனாவின் வுஹான் நகரில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. உயிர் கொல்லியான இந்த வைரஸ் 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் தாக்கி உள்ளது. சீனாவுக்கு அடுத்தபடியாக இத்தாலி, ஈரான், ஸ்பெயினில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தியாவிலும் கொரோனா வைரஸ் பரவி வருகிறது.

வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் மூலம்தான் இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியது. கேரளா மாநிலத்தில்தான் முதன்முதலில் இந்த பாதிப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து மற்ற மாநிலங்களில் கொரோனா தாக்குதல் ஏற்பட்டது. (ஐ-2)

## கொரோனா வைரஸ் அச்சம் மூடப்பட்டது தாஜ்மஹால்



(ஆக்ரா)


கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் மூடப்பட்டுள்ளதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

காதல் சின்னமான தாஜ்மஹாலை பார்வையிடுவதற்காக நாளாந்தம் பல்லாயிரக்கணக்கானோர் வருவதாக தெரிவித்துள்ள இந்திய கலாசார அமைச்சகம் அதனால்கொரோனா தொற்றை கட்டுப்படுத்த தாஜ்மஹாலை தற்காலிகமாக மூடுவது அவசியமானதாகும் என்றும் சுட்டிக்காட்டியது.

உலகின் முன்னணி சுற்றுலாத் தலங்களில் ஒன்றான தாஜ்மஹாலை பார்வையிடுவதற்காக நாளொன்றுக்கு சுமார் 70 ஆயிரம் பேர் வரை அங்கு செல்கின்றனர்.

இதேவேளை இந்திய அரசாங்கம் மக்களின் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு பல முக்கிய தலங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் பாரம்பரிய கட்டடங்கள் என்பவற்றையும் மூடியுள்ளது. (ஐ-2)

## இஸ்ரேல் பிரதமருக்கு கொரோனா பரிசோதனை



(ஜெருசலேம்)

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூவுக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உள்ளதா என்பதை கண்டறிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இஸ்ரேலில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வரும் நிலையில் அங்கு இதுவரை 213 பேருக்கு நோய் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. வைரஸ் பரவுவதை தடுக்கும் வகையில் அந்த நாட்டு அரசு தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஏற்கனவே நாடு முழுவதும் பாடசாலைகளுக்கு காலவரையறையற்ற விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வணிக வளாகங்கள், சினிமா தியேட்டர்கள் மற்றும் ஹோட்டல்களை மூட பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ கடந்த ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

இந்நிலையில் உலக நாடுகளின் தலைவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களை கொரோனா வைரஸ் தாக்கி வரும் சூழலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூவுக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உள்ளதா என்பதை கண்டறிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனையின் முடிவில் அவர் கொரோனா வைரஸால் பாதிக்கப்படவில்லை என்பது உறுதிசெய்யப்பட்டதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பெஞ்சமின் நெதன்யாஹூவுடன் அவருக்கு நெருக்கமானவர்களுக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர்களுக்கும் கொரோனா பாதிப்பு இல்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-2)

## கண்களை மூடிக்கொண்டு நெருப்புடன் போராட முடியாது

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

கண்கள் மூடப்பட்டிருக்கும் போது நெருப்புடன் போராட முடியாது என கொரோனா குறித்து உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 150 இற்கும் அதிகமான நாடுகளுக்கு பரவியுள்ளது. இந்த வைரஸ்தாக்குதலுக்கு உலகம் முழுவதும் இதுவரை 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். மேலும் ஒரு இலட்சத்து 82 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதானம் கெப்ரியேசஸ் கொரோனா வைரஸ் குறித்து செய்தியாளர்களிடம் கூறுகையில், "கண்கள் மூடப்பட்டிருக்கும் போது நீங்கள் நெருப்புடன் போராட முடியாது. பரிசோதனை, பரிசோதனை, பரிசோதனை. சந்தேகத்திற்குரிய அனைவரையும் பரிசோதனை செய்யுங்கள்" என அவர் தெரிவித்தார். (ஐ-2)

## உலகை மிரள

## உயிரிழப்பு 7 ஆ

(ஜெனீவா)

**உலகை மிரள வைத்துள்ள கொரோனா வைரஸ் காரணமாக இதுவரையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7,171 ஆக அதிகரித்துள்ளது.**

மேலும் இந்த வைரஸ் காரணமாக 182,598 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, 79,881 பேர் பாதிப்பிலிருந்து மீண்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றால் இத்தாலியில் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 158 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை கொரோனா தொற்று காரணமாக இத்தாலியில் 27 ஆயிரத்து 980 பேர் பாதிக்கப்பட்டனர்.

இதேநேரம் ஈரானில் 14,991 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். அத்தோடு 853 பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை, கொரோனா தொற்று காரணமாக தென்கொரியாவில் புதிதாக 84 பேர் அடையாளம் காணப்பட்டனர். இதற்க

## ஹோலி கொண்டா

## விஷ சாராயம் குடித்ததில்

(காத்மண்டு)

நேபாளத்தில் ஹோலி பண்டிகையையொட்டி விஷ சாராயம் குடித்த 17 பேர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தனர்.

நேபாளத்தின் தெற்கு பகுதியில் உள்ள தனுசா மாவட்டத்தைச் சேர்ந்த சிலர் ஹோலி பண்டிகையையொட்டி கடந்த 10 ஆம் திகதி வீட்டிலேயே மது தயாரித்து குடித்தனர். அவர்களில் 28 பேருக்கு மது குடித்த சில மணி நேரத்தில் வாந்தி மற்றும் மயக்கம் ஏற்பட்டது.

இதையடுத்து, அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்க

## போர்ச் சூழலுக்குள் பிறந்த

### யுனிசெப் அ

(டமாஸ்கஸ்)

சிரியாவில் 40 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் போர் சூழலில் பிறந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெப்) கவலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை சிரியாவில் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் நடந்து வரும் உள்நாட்டு போரில் 9,000 இற்கும் அதிகமான குழந்தைகள் உயிரிழந்தன.

இதற்கிடையே சிரியாவின் கவலைக்குரிய நிலைகுறித்து ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் அறிக்கையொன்றை வெளியிட்டது.

இந்த அறிக்கையில், 'சிரியாவின் வடமேற்குப் பகுதியில் தொடர்ந்து வன்முறை நடந்து கொண்டிருக்கிறது. சிரியாவில் நடக்கும் போர் மற்றொரு அவமானகரமான எல்லையைத் தொட்டுள்ளது. சிரியாவில் 40 இலட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் போர்ச்சூழலில் பிறந்துள்ளன.

இலட்சக்கணக்கான குழந்தைகள் வன்முறை, போர், மரணங்களுக்கு இடையே அடுத்த தாளப்பத்திற்குள் நுழைகின்றனர்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.



உலக நாடுகளின் போர்க்களமாக இருக்கும் சிரியாவில் இதுவரை 3 இலட்சத்து 46,600 பேர் உயிரிழந்தனர். 70 சதவீத மக்கள் வறுமையிலும் உணவுத் தட்டுப்பாட்டாலும் தவிக்கின்றனர்.

அதேபோல், சுமார் 10 இலட்சம் மக்கள் புலம்பெயர்ந்து விட்டனர் என்று ஐ.நா.

# வெளிநாடு

## ...வைக்கும் கொரோனா

## ...ஆயிரத்தைத் தாண்டியது

...ா
...ந்த
...ரித்

...தொற்று
...ஆயிரத்து

...91 பேர்
...னர். அத்

...தொற்று
...திதாக 84
... இதற்க



...மைய அங்கு 8 ஆயிரத்து 320 பேர் பாதிக்கப்பட்டனர். அத்துடன் தென் கொரியாவில் கொரோனா வைரஸால் இதுவரை 81 பேர் உயிரிழந்தனர்.

அதேநேரம் இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 137 பேர் பூரணமாக குணமடைந்துள்ளதாகவும் அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள அனைத்து உணவகங்கள், மதுபான நிலையங்கள் மற்றும் விடுதிகள் நேற்று முதல் மூடப்பட்டன. கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நியூயோர்க் நகர முதல்வர் பில் டி பிளேசியோ தெரிவித்தார்.

அங்குள்ள உணவகங்கள், மதுபான நிலையங்கள் மற்றும் விடுதிகளில் மக்கள் ஒன்றுகூடுவதால் கொரோனா வைரஸ் தொற்றால் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-2)

## அமெரிக்கா தடுப்பூசி பரிசோதனை கொரோனாவுக்கு தீர்வு தருமா?



(வோஷிங்டன்)

முழு உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸானது, மிகப் பெருமளவில் மக்களின் உயிர்களை காவுகொண்டுள்ளது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து முதன்முறையாக அமெரிக்காவில் பரிசோதனை செய்யப்பட்டது.

வோஷிங்டன் சியாட்டிலிலுள்ள ஓர் ஆய்வகத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நான்கு பேருக்கு இந்த தடுப்பூசி செலுத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டுள்ளதாக பிபிசி செய்தி இணையத்தளம் தகவல் வழங்கியது.

இந்த தடுப்பூசி கொரோனாவுக்கு தீர்வாகுமா என்று உடனே சொல்ல முடியாது. அதற்கு சில காலங்கள் ஆகும் எனவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மேலும், பரிசோதனைக்கான தடுப்பூசி செலுத்தப்பட்ட 43 வயதான பெண்மணியான ஜெனிபர், "இந்த பரிசோதனைக்குள்ளாவது என் பேறு," எனக் குறிப்பிட்டார். (ஐ-2)

## ...ண்டாட்டம்

## ...தில் 17 பேர் பலி

...கையை
...டிலேயே
...களில் 28
...நேரத்தில்

...னவரும்
...க சேர்க்க...ப்பட்டனர்.

அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி 17 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். ஏனைய 11 பேரும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ-2)

## கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஈரானில் நாடாளுமன்றத் தேர்தல் ஒத்திவைப்பு

(டெஹ்ரான்)

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஈரானில் நாடாளுமன்ற தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சீனாவில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாத இறுதியில் தோன்றிய உயிர்கொல்லி நோயான கொரோனா வைரஸ் தற்போது 141 நாடுகளில் பரவியுள்ளது.

சீனாவுக்கு வெளியே கொரோனா வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஈரான் 2 ஆவது இடத்தில் உள்ளது. அங்கு கடந்த மாதம் 19 ஆம் திகதி மத்திய மாகாணமான குவாமில் முதல்



கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

உடனடியாக அந்த மாகாணம் தனிமைப்படுத்தப்பட்ட போதிலும் ஈரான் முழுவதிலும் கொரோனா வைரஸ் பரவிவிட்டது. ஈரானில் கொரோனாவால் இதுவரை 853 பேர் பலியான நிலையில், நோய் பாதித்தவர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்தையும் தாண்டியுள்ளது. அமெரிக்காவின் பொருளாதாரத் தடை, விலைவாசி உயர்வு என பல சிக்கல்களை எதிர்கொண்டு வரும் ஈரானுக்கு கொரோனா வைரஸ் பெரும் தலைவலியாக அமைந்துள்ளது. இந்த நிலையில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஈரான் நாடாளுமன்றத்துக்கான 2 ஆம் கட்ட தேர்தலை அந்த நாட்டு தேர்தல் ஆணையம் ஒத்திவைத்துள்ளது. (ஐ-2)

## ...ந்த குழந்தைகள்

### ...ப் அறிக்கை



...க இருக்
...லட்சத்து
...0 சதவீத
...த் தட்டுப்

...ம் மக்கள்
...று ஐ.நா. தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் போர் காரணமாக கடந்த டிசெம்பர் மாதம் முதல் சுமார் 90,000 பேர் சிரியாவிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. (ஐ-2)

## இருபது நாட்களுக்குப் பிறகுதான் கொரோனாவின் அறிகுறி தெரியும்

### சீன வைத்தியர்கள் அதிர்ச்சித் தகவல்

(பீஜிங்)

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸின் அறிகுறி, பாதிக்கப்பட்டு 20 நாட்களுக்கு பிறகுதான் தெரியும் என சீன வைத்தியர்கள் தெரிவித்தனர்.

ஏழாயிரம் உயிர்களை காவுகொண்டுள்ள கொரோனா வைரஸின் பரவலைத் தடுக்க, உலக நாடுகள் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

கொரோனா வைரஸ் ஒருவரது உடலில் தாக்கினால், அந்த



வைரஸ் அவரது உடலில் எத்தனை நாட்கள் வரை இருக்கும் என்பதை சீன வைத்தியர்கள் தெரிவித்தனர்.

ஒருவரை கொரோனா பாதித்தால் அவரிடம் குறைந்த பட்சம் 37 நாட்கள் அது வீரியத்துடன் இருக்கும் என்றும் 20 நாட்களுக்கு பிறகுதான் அதன் அறிகுறி தெரியும் எனவும் தெரிவித்தனர்.

கொரோனா அறிகுறிகள் தெரிந்த பிறகு 20 நாட்கள் கவனமாக இருக்கவேண்டும் எனவும் வைரஸால் பாதிக்கப்பட்டவர் அந்த பாதிப்பில் இருந்து மீண்டு வர சில வாரங்கள் ஆகும்.

மேலும், வைரஸ் பாதிப்பில் இருந்து குணமாகிய பிறகும் ஓரிரு நாட்களுக்கு அந்த வைரஸின் தாக்கம் உடலில் இருக்கும் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-2)

# மாத்தறையில் 35 பேர் தலைமறைவு

(மாத்தறை)

**வெளிநாடுகளிலிருந்து மாத்தறைக்கு வந்த 277 பேரில் 35 பேர் தலைமறைவாகியுள்ளனர் என மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் உபாலி கருணாரட்ன தெரிவித்தார்.**

மாத்தறையில் ஒருவர் கூட இதுவரை கொரோனா வைரஸால் பாதிக்கப்படவில்லை. இதன் காரணமாக மக்கள் பதற்றமடையத் தேவையில்லை என அவர் தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்த வேளை நோய்த் தொற்றுள்ளதா? எனப் பரிசோதனை செய்யப்பட்டவர்கள், தனிமைப்படுத்தலிற்கு உட்பட்டவர்கள். இந்த நடைமுறையைப் பின்பற்றாதவர்கள் அனைவரையும் தேடிக்கண்டு பிடிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதாக அவர் தெரிவித்தார். வெளிநாடுகளிலிருந்து வந்த பின்னர் வீடுகளிலிருந்து காணாமல் போன 35 பேரை கண்டுபிடிப்பதற்கான ஒத்துழைப்பை வழங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறையின் ஹோட்டல்களில் தங்கியுள்ள வெளிநாட்டுப் பயணிகள் குறித்த விபரங்களை வெளியிடுவதற்கு பொலிஸார் இணங்கியுள்ளனர்.

வைரஸ் உள்ளதாக சந்தேகிக்கப்படுபவர்க்ளுக்கு சிகிச்சையளிப்பதற்கும் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதற்கும் அதிகாரிகள் விசேட பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுத்திகரிப்பு




(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வெளிச்செல்லும், உட்புகும் பகுதிகள் உட்பட அனைத்துப் பகுதிகளையும் சுத்திகரிப்புச் செய்யும் பணிகளில் விமானப் படையினர் ஈடுபட்டனர்.

இலங்கையில் தற்போது கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகள் கடும் சோதனைகளின் பின்னரே நாட்டுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர். இந் நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தின் உட்புகும் பகுதி, வெளியேறும் பகுதி, வெளிநாடுகளிலிருந்து வருவோரின் பகுதி, சுங்க வளாகங்கள் குடிவரவு உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் இலங்கை விமானப் படையினர் சுத்திகரிப்பு செய்தனர். (இ-7)

# வேலைத்தளங்களில் எவ்வாறு கொரோனா தொற்றிலிருந்து பாதுகாத்து கொள்வது

## சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவுறுத்து

(கொழும்பு)

எங்களுடைய அதிகளவு நேரத்தை வேலை செய்யும் இடங்களிலேயே செலவிடுகின்றோம். எனவே, COVID-19 எனப்படும் கொரோனா வைரஸிக்கு எதிராக எவ்வாறு வேலை செய்யும் இடங்களைப் பாதுகாத்துக் கொள்வது என்பதை குறித்து நாம் அதிக அக்கறை செலுத்த வேண்டுமென சுகாதார மேம்பாட்டுப் பணியகம் வேண்டுகோள் விடுத்தது.

சுகாதார மேம்பாட்டு பணியகம் விடுத்த அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டது. உங்கள் வேலை செய்யும் இடத்தைப் பாதுகாப்பாக வைத் திருக்க இந்த வழிமுறைகளைப் பின்பற்றவும்.

காய்ச்சல், இருமல் அல்லது சளி போன்ற லேசான அறி குறிகளை யாராவது காட்டினால், முழுமையாகக் குணமடையும் வரை வேலைக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்துங்கள். முடிந்தால், வீட்டிலிருந்து வேலை செய்ய ஊக்குவிக்கவும்.

கதவு கைப்பிடிகள், தொலைபேசி ரிசீவர்கள், மேசை மேற்பரப்புகள், ஸ்டேபிளர் போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் பயன்படுத்தும் உபகரணங்களையும் தவறாமல் சுத்தம் செய்யுங்கள். உங்கள்கைகளை சவர்க்காரத்தை பயன்படுத்தி அடிக்கடி நன்கு கழுவுங்கள். உங்கள் முகம், வாய், மூக்கு மற்றும் கண்களைத் தொடுவதைத் தவிர்க்கவும். COVID-19 வைரஸ் பொதுவாக தொடர்பு மூலமே பரவுகிறது. முடிந்தவரை மக்கள் கூட்டம் அதிகரிப்பதைத் தவிர்க்கவும். கூட்டங்களை ஒத்திவைத்து, காணொலி மற்றும் குழு அழைப்பு போன்ற நவீன தகவல் தொடர்பு முறைகளைப் பின்பற்றவும். உங்கள்பணியிடத்தில்கொரோனா வைரஸ் பரவுவதற்கான வாய்ப்பை நீங்கள் குறைத்தால் உங்கள் அன்பான குடும்ப உறுப்பினர்களுக்கு நோய்த் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பையும் குறைக்கலாம் என இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகம் மேலும் வேண்டுகோள் விடுத்தது. (இ-7)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவருக்கு உதவி



(யாழ்ப்பாணம்)

யாழ்பாணம்கே.கே.பி இளைஞர் கழகத்தால் யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அண்மையில் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. யாழ். சமுர்த்தி வங்கி முகாமையாளரின் பரிந்துரைக்கு அமைவாக இளைஞர் கழகத்தால் இந்த உதவிப்பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. யாழ். நகர் சமுர்த்தி வங்கி முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## திருமகள் கருணை!

காட்டில் ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். திடீரென ஒரு நாள் லட்சுமி தேவி அதாவது திருமகள் அவர் முன்பு வந்து நின்று காட்சி கொடுத்தார். "முனிவரே நீங்கள் முன்பு செய்த சில நல்வினை காரணமாக நான் சிறிது நாள் உங்களிடம் தங்கியிருக்கப் போகிறேன்."என்றார்.

"தாயே! உங்களுடைய கருணையும் அதனால் வரும் செல்வமும் இல்லறத்தில் உள்ளவனுக்குத் தானே கிடைக்க வேண்டும். சந்நியாசியான எனக்கு எதற்கு செல்வம்?'' என்றார் அந்த முனிவர். "முனிவரே இப்போது உங்களுக்கு செல்வம் வேண்டாம் என இருக்கலாம். இருந்தாலும் நீங்கள் முன்பு செய்த புண்ணியத்தின் பயனாக குறித்த சிலகாலம் உங்களிடம் நான் இருந்துதான் ஆக வேண்டும். நான் உங்களிடம் இருந்தால் எல்லாம் நல்லபடியாக முடியும். பயப்படத் தேவை இருக்காது.சகல சக்திகளும் உண் டாகும். ராஜ மரியாதைகள் கிடைக்கும். உலக மக்கள் உங்களை மிகவும் மதிப்பார்கள்''என்றார். வேறு வழியில்லை முனிவர் பேசாமல் இருந்துவிட்டார்.

ஒரு நாள்முனிவர் குளித்துவிட்டு வந்து கொண்டிருந்தார். வழியில் ஒரு புதையல் கண்ணில் பட்டது. அதுவும் அவர் காலடியில். அதாவது திருமகள் அருள், லட்சுமி கடாட்சம் அவருக்கு கிடைத்திருக்கிறது என அர்த்தம். இருந்தாலும் இவர் எல்லா பாசங்களையும் விட்டவராயிற்றே. அதனால் அதை தொடவே இல்லை. பேசாமல் சென்றுவிட்டார். மரத்தடியில் போய் வழக்கம் போல் அமர்ந்தார். அதற்குப் பிறகு யோசித்தார்.

திருமகள் என்னிடம் தங்கியிருப்பதாக சொல்லியிருக்கிறார். நமக்கு அரச மரியாதை கிடைக்கும் என வேறு சொல்லியிருக்கிறார். அதை சோதித்து பார்க்கலாம் என முடிவு செய்தார். பக்கத்தில் ராஜசேகரம் என ஒரு நகரம். அங்கே பராந்தகன் என ஒரு ராஜா. இந்த முனிவர் நேராக ராஜாவிடம் சென்றார். அவர் வருவதைப் பார்த்ததும் அந்த அரசன் அரியணையிலிருந்து எழுந்து ஓடி வந்து குனிந்து இவரை வணங்கினான். இவர் உடனே அந்த ராஜா காலில் இருந்த மகுடத்தைக் காலால் எட்டி உதைத்தார்.

லட்சுமி தேவி ராஜமரியாதை கிடைக்குமென சொன்னார்கள் தானே. அதை சோதிக்க வேண்டும் என்பதற்காகத் தான் இவ்வாறு செய்தார். சபையில் உள்ளவர்களெல்லாம் பதறிப்போனார்கள். உடனே என்ன நடந்தது தெரியுமா?அந்த கிரீடத்துக்குள்ளேயிருந்து ஒரு நாகபாம்பு தலையை நீட்டிக் கொண்டு வந்தது.

"ஆகா இந்த முனிவர் ஒரு திரிகால ஞானி.ஒரு பெரிய ஆபத்திலிருந்து என்னைக் காப்பாற்றியுள்ளார்'' என நினைத்து அந்த முனிவர் காலில்விழுந்து வணங்கினான். இதைப் பார்த்து ஏனையோரும் காலில் விழுந்தார்கள். முனிவரை புஷ்பரதத்தில் ஏற்றி குடை, சாமரம், ஆலவட்டம் இது மாதிரியான உபசாரங்களுடன் ஊர் வலமாக அழைத்து வந்தார்கள்.

மேளதாளம் வானவேடிக்கை!

லட்சுமி தேவி சொன்னது போன்ற ராஜமரியாதை கிடைத்தது. முனிவர் யோசித்தார். மறுபடியும் லட்சுமி கடாட்சத்தை சோதித்துப் பார்க்க விரும்பினார். ஒரு நாள் நடுராத்திரி அந்தப்புரத்தில் ராஜாவும் ராணியும் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். இந்த முனிவர் திடீரென உள்ளே நுழைந்தார்.அவர்கள் இருவர் முதுகிலும் பளார் பளார் என நான்கு அடி கொடுத்து அவர்கள் இரண்டு பேர் கைகளையும் பிடித்து தர தர என வெளியில் இழுத்து வந்தார்.இப்போது எப்படி நமக்கு ராஜமரியாதை கிடைக்கிறது பார்ப்போம் என நினைத்தார்.

சிறிது நேரத்தில் அந்த கட்டடம் இடிந்து விழுந்தது. அவ்வளவுதான் மறுபடியும் ஓடி வந்து இவர் காலில் விழுந்தார்கள். "அடா இந்தக் கட்டடம் இடியப் போவதை ஞானக்கண்ணால் பார்த்துள்ளாரே எப்பேர்ப்பட்ட மகான்!''என்றார்கள். அதற்குப் பிறகு அந்த முனிவர் சிறிது காலம் ராஜமரியாதையுடன் இருந்தார். ஒருநாள் இரவு லட்சுமிதேவிமுனிவருடைய கனவில்வந்து,"முனிவரே நாளை காலையில் உங்களை விட்டு நான் சென்று விடுவேன். இனிமேல் உமக்கு எந்த உபசாரமும் நடக்காது ''என சொல்லிச் சென்றார்.

மறுநாள் விடிந்தது. முதல் நாள் முனிவர் தன்னிடம் கொடுத்த ஒரு மாம்பழத்தை வெட்டி ஒரு துண்டை வாயில் போட்டான் மன்னன். உடனே அவன் மயங்கி விழுந்தான். அரச வைத்தியர்கள் வந்தார்கள். மாம்பழத்தில் விஷம் கலந்துள்ளது என்றார்கள். அந்த பழம் மரத்தில் இருக்கும் போதே நாகம் விஷத்தைக் கக்கியிருந்தது. இது தெரியாமல் முனிவர் அதை ராஜாவிடம் கொடுத்துள்ளார். மன்னன் மருந்து சாப்பிட்டு பிழைத்தான். இனிமேல் இந்த முனிவர் இங்கே இருப்பது நல்லது இல்லை என்றான் மன்னன்.

காவலர்கள் அவரை அழைத்து சென்று காட்டில் விட்டு வந்தார்கள். கிருபானந்தவாரியார் சொன்ன கதை இது. திருமகள் கருணை எப்படிப்பட்டது என்பதை விளக்குவதற்காக அவர் இதைச் சொன்னார். இதையே நம் மொழியில் சொல்லப் போனால் "எல்லாம் ஒரு நேரம் தான்!''அப்படி என்போம். நாம் சில சமயம் நல்லதாக நினைத்து செய்வது கெட்டதாக முடியும்! கெட்டது என நினைத்து செய்வது நல்லதாக முடியும்!

நமது ஆள் ஒருவன் ஜெயிலில் இருந்து வெளியே வந்தான். "எதுக்குடா ஜெயிலுக்கு சென்றாய்? '' என கேட்டேன். "ஒரு தடவை பஸ்ஸில் வந்து கொண்டிருந்தேன்.பக்கத்தில் இருந்த என் சிநேகிதன் ஒரு பத்து ரூபா பணம் இருந்தா குடு என கேட்டான். அவனுக்கு உதவ வேண்டும் என்பதற்காக உடனே நான் பொக்கெட்டிலிருந்து பத்து ரூபா எடுத்துக் கொடுத்தேன். அதுக்காக என்னை ஜெயிலில் தள்ளிவிட்டார்கள்'' என்றான்.

"பொக்கெட்டிலிருந்து பத்து ரூபா எடுத்துக் கொடுத்தது தப்பா ?'' என்றேன்.

"அப்படித்தான் அவர்கள் சொல்கிறார்கள். ஏனென்றால் நான் பணம் எடுத்தது எனது பொக்கெட்டிலிருந்து இல்லை. பக்கத்தில் நின்று கொண்டிருந்தவனின் பொக்கெட்டிலிருந்து'' என்றான்.

# 170 பேர் தனிமைப்படுத்தலை தவிர்த்துக்கொண்டுள்ளனர்

## பாதுகாப்புச் செயலர் கமால் தகவல்

(கொழும்பு)

இத்தாலி, தென்கொரியாவிலிருந்து இலங்கை வந்த 170 பேர் தனிமைப்படுத்தலில் இருந்து தப்பித்துள்ளனர் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இதேவேளை ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஈ-ரான், தென்கொரியா ஆகிய நாடுகளில் இருந்து மார்ச் முதலாம் திகதி முதல் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் இலங்கைக்கு வந்த அனைவரையும் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தது.

கொரோனா வைரஸிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்தார்.

இத்தாலி கொரியாவிலிருந்து நாடு திரும்பி தங்கள் குடும்பத்தினருடன் வாழும் 170 பேர் இதுவரை தனிமைப்படுத்தலிற்கு உட்படவில்லை என அவர் தெரிவித்தார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாங்கள் அவர்களைப் பரிசோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும் என குறிப்பிட்ட அவர் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த இது அவசியம் எனவும் தெரிவித்தார்.

14 நாள் தனிமைப்படுத்தலிற்கு உட்படாதவர்கள் பொலிஸாருக்கு தங்கள் நிலையை தெளிவுபடுத்த வேண்டும்.



அவர்களைத் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அழைத்துச்செல்லப்போவதில்லை. அவர்கள் வீடுகளில் வைத்தே தனிமைப்படுத்தப்படுவார்கள்.

இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கொரோனா அச்சத்தால்

# இலத்திரனியல் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் கொரோனாவிற்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பிரதேச சபை உறுப்பினர்களுடன் தொலைபேசி மற்றும் வட்ஸப் மூலமாக ஓரிடத்தில் ஒன்றுகூடாதவாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை கூட்டத்தினைக் கூடி ஆராய்ந்ததாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் காய்ச்சல் தொற்று எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், அனர்த்த முன்னெச்சரிக்கை தொடர்பாக பிரதேச சபை, சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி, வலிகாமம் கிழக்கிற்கு உட்பட்ட அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தினர் ஆகியோருக்கு இடையில் அலுவலகத்தில் நேரிலும் தொலைத் தொடர்பு வசதிகள் ஊடாகவும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இக்கலந்துரையாடலில் ஏற்கனவே பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு விழிப்புணர்வு அறிவிப்புக்களைச் செய்வதற்கான வாகன வசதியை பிரதேச சபை செய்துள்ள நிலையில், நிலைமைகள் மோசமடையின் அது தொடர்பில் பிரதேச சபையின் வகிபாகத்திற்கு ஏற்ப உதவிகளை தாம் கோருவதாக வலிகாமம் கிழக்கு பிரதேச பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி இந்துஜன் தெரிவித்தார்.

அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடனான கலந்துரையாடலில் சட்டம் ஒழுங்குகள் அறிவிப்புக்களின் பிரகாரம் பொது நிகழ்வுகளை மட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும் பிரதேச சபை உறுப்பினர்களால் இது சுகாதாரம் மற்றும் மருத்துவம் சார்ந்த பிரச்சினையாகவுள்ள நிலையில் பொதுச் சுகாதாரத் துறையினரால் கோரப்படும் உதவிகளை இடர்கால நிலைமையாக உடன் ஏற்படுத்துவதற்கு தயார்ப்படுத்தல் பற்றி ஆராயப்பட்டது. மேலும் பிரதேச சபை உறுப்பினர்களால் மக்கள் தவிர்க்க முடியாது அத்தியாவசியமாக வந்து செல்ல வேண்டிய இடங்களில் கைகழுவுவதற்கான பொது இடங்களைத் தயார்ப்படுத்துவது தொடர்பில் ஆலோசனை முன்வைக்கப்பட்டது. அத்துடன் அரசாங்கம் இடர் நிலையில் அறிவித்துள்ள விதிமுறைகளைப் பின்பற்றுவதை பிரதேச சபை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தில் சபை உறுப்பினர்கள் அவதானித்து தவிசாளரின் கவனத்திற்குக் கொண்டு வருவது பற்றியும் அதுபற்றி உரிய தரப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது பற்றியும் முடிவு எடுக்கப்பட்டது.

தற்போதும் வீடுகளில் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அவற்றுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. சந்தேகத்திற்கிடமான நோய் அறிகுறிகள் தென்படுவோர் தயக்கமின்றி அரச மருத்துவ உதவியைப்பொறுவது சட்டரீதியான சமூகப்பொறுப்பு என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலைமையில் பிரச்சினைகள் இனங்காணப்படுமிடத்து தவிசாளர் உள்ளிட்ட குறித்த வட்டாரத்தில் செயற்படும் உறுப்பினர் நிலைமைகள் மீது அவதானிப்பினைச் செலுத்துவதற்கும் அவ் அவ் தரப்பினரின் தொடர்புகள்ளை ஏற்படுத்தி உதவுவதற்கும் முடிவு எடுக்கப்பட்டது. மக்கள் இவ் அனர்த்த காலத்தில் தவிசாளர் என்ற வகையில் அவசரத்தில் பிரத்தியேக தொலைபேசி இலக்கமான 077 656 9959 அல்லது 021 433 9959 இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் எனவும் தவிசாளர் நிரோஷ் தெரிவித்தார். (இ-7)

# கொரோனா தாக்கத்திலிருந்து பாதுகாக்க ஆலயத்தில் திருநீலகண்ட கசாயம்



(திருகோணமலை)

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு திருநீலகண்ட கசாயம் வழங்கப்பட்டது. திருகோணமலை பேச்சியம்மன் ஆலய நிர்வாகம் இந்த ஆன்மீக நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.13 வகையான மூலிகைகளைப் பயன்படுத்தி இக் கசாயம் தயார் செய்யப்பட்டு பக்தர்களுக்கு வழங்கப்பட்டதாக கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

பங்குனித்திங்கள் முதல் நாளான நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இந்நிகழ்வு திருகோணமலை பேச்சியம்மன் ஆலயத்தில் இடம் பெற்றது. பெருமளவிலான பொதுமக்கள் ஆலயத்துக்கு வருகை தந்து இந்த திருநீலகண்ட கசாயத்தைப் பெற்றுச் சென்றனர். (இ-7)

# கொரோனா ஒழிப்பு தகவல் அறிக்கையிடும் நிலையம் வடமராட்சியில்

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக, வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கொரோனா ஒழிப்பு தகவல் அறிக்கையிடும் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டது.

எனவே,எமது பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான தகவல்களை 021 226 3259 என்ற தொலைபேசி இலக்கம் மூலமாக தொடர்பு கொண்டு (நீடிப்பு இலக்கம் 107) காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை தெரியப்படுத்த முடியும் என்று பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ

# புகையிரத சேவைகளை நிறுத்துவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

புகையிரத சேவைகளை தற்காலிகமாக நிறுத்துவதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்தது.

அதற்கமைய நேற்று செவ்வாய்க்கிழமை முதல் நாளை 19 ஆம் திகதி வரை அமுலுக்கு வரும் வகையில் 88 ரயில் சேவைகளை இரத்துச் செய்வதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் வகையில் பொதுப் போக்குவரத்து சேவைகளில் முன்னெடுக்கப்படும் கிருமி ஒழிப்பு நடவடிக்கைகள் இன்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளில் ஒரு வார காலத்திற்கு 24 மணித்தியாலங்களுக்கும் கிருமி ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதனைத் தவிர முகக்கவசங்கள் மற்றும் கையுறைகளை அணியுறுமாறு பேருந்து ஊழியர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்தது.(இ-7)

# ஆடை வாங்கச் செல்வதை தவிர்க்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்திற்காக ஆடைகளைக் கொள்வனவு செய்வதைத் தற்காலிகமாக தவிர்த்துக் கொள்வது கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைத் தடுப்பதற்கு பெரும் உதவியாக அமையுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

ஆடைகள், துணிகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்யும் பொழுது விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் உடைகளைத் தொடுதல், கடைகளில் ஒன்று கூடுதல் அவற்றை அணிந்து பார்த்தல் என்பவற்றின் மூலம் நோய் பரவக்கூடிய வாய்ப்புள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு நடவடிக்கையாக, பெரும் எண்ணிக்கையில் பொது மக்கள் கூடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 | 120 |
| தக்காளி | 120 | 80 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| கோவா | 100 | 80 | 100 | 120 |
| கரட் | 140 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 100 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 200 | 300 | 320 |
| பெரிய வெங்காயம் | 280 | — | 220 | 240 |
| பாகற்காய் | 200 | 120 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 100 | 80 | 60 | 60 |
| லீக்ஸ் | 160 | 170 | 160 | 200 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 150 | 100 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 100 | 120 | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | — | 60 |
| கீரை - 1பிடி | 50 | 35 | 30 | 30 |
| தேசிக்காய் | 140 | 120 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60 | 30-70 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 130 | 100 | 160 | 160 |
| முள்ளங்கி | 30 | 40 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | 80 | — |

# இலங்கை அரசியலமைப்பும் 19 வது திருத்தம் சம்பந்தமான விமர்சனங்களும்



05

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

**ஆறாம் திருத்தமும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும்**

1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசமைப்புக்கான ஆறாவது திருத்தத்தை. ஜே.ஆர்.அரசாங்கம் வெற்றிகரமாக நிறைவேற்றியது. இதன்படி மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அதிகாரப் பதவிகளிலுள்ளவர்கள் இலங்கையின் அரசமைப்புக்கும் ஒற்றையாட்சிக்கும் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கும் விசுவாசமாகவும் பிரிவினைக்கு ஆதரவாகவோ, துணைபோகவோ மாட்டோம் என்று சத்தியப்பிரமாணம் எடுக்க வேண்டியதாயிற்று. அவ்வாறு இல்லையெனில் அவர்கள் பதவிகளை இழக்கும் நிலையும் குற்றவாளிகளாகக் காணப்படக்கூடிய நிலையும் ஆறாவது திருத்தத்தின் விளைவாக உருவாகியிருந்தது.

ஆறாவது திருத்தத்தின் பின்னரான தமது நிலைப்பாடு பற்றியும் எதிர்கால அரசியல் நகர்வுகள் பற்றியும் கலந்துரையாடித் தீர்மானிப்பதற்காக ஆறாவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு இரண்டு தினங்களில அ.அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் 16 பேரைக் கொண்ட நாடாளுமன்றக் குழு வவுனியாவில் கூடியது. தனிநாட்டுக்கான கோரிக்கையைத் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்னிறுத்தி அதற்கான மக்களாணையைப் பெற்றிருந்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர், அந்த மக்களாணைக்கு முற்றிலும் முரணாக அமைந்த ஆறாம் திருத்தத்தின் கீழான சத்தியப்பிரமாணத்தை நிச்சயம் செய்ய முடியாது. அது தமிழ் மக்கள் அவர்களுக்கு வழங்கியிருந்த ஆணையை மட்டுமல்லாது அவர்கள் முன்னிறுத்தியிருந்த அடிப்படைக் கொள்கைக்கே விரோதமாக அமைந்திருக்கும்.

ஆனால் ஆறாம் திருத்தத்தின் கீழ் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூன்று மாதங்களுக்குள் சத்தியப்பிரமாணம் செய்யவில்லையெனில் அவர்களது பதவிகள் பறிபோகும் நிலை இருந்தது. இதனையெல்லாம் அவர்கள் நிச்சயம் அலசி ஆராய்ந்திருக்கக்கூடும். இறுதியாக அரசமைப்புக்கான ஆறாம் திருத்தத்துக்குக் கீழாக தாம் சத்தியப்பிரமாணம் செய்யப் போவதில்லை என தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றக்குழு தீர்மானித்தது.

தமிழ்த் தலைமைகளின் நிலைப்பாடு அடுத்த இரண்டு நாட்களில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவருமான அ.அமிர்தலிங்கம் விடுத்திருந்த அறிக்கையொன்றில், 1983 'கறுப்பு ஜூலை' இன அழிப்பை பாரதூரமான அரச பயங்கரவாதம் என வர்ணித்த அவர், இந்தப் பாரதூரமான அரச பயங்கரவாதத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி ஆயுதம் ஏந்தவும் தயார் என்றார். மேலும், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியானது அமைதி வழியிலான இலக்குகளை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்டது என்று குறிப்பிட்ட அமிர்தலிங்கம் ஆனால் தமிழ் மக்கள் மிகவும் அதிர்ந்து போயுள்ளார்கள் என்றும் இனி அவர்களால் சிங்கள மக்களோடு இணைந்து வாழ முடியாது என்றும் குறிப்பிட்டார். அகதிகளைத் தாங்கிய ஒவ்வொரு கப்பலும் யாழ்ப்பாணத்தை வந்தடைகிறபோது அது நடந்தேறிய கொடூரத்தை மீண்டும் மீண்டும் எதிரொலிக்கிறது என்று மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டதுடன் இந்திய அரசாங்கம் உடனடியாக இதில் தலையிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஆறாம் திருத்தத்தை எதிர்கொள்வது தொடர்பில் மாற்று வ்ழிகள் பற்றியும் தமிழ்த் தலைமைகள் ஆலோசித்திருக்கிறார்கள் என்பதும் தெரியவருகிறது. 1983 'கறுப்பு ஜூலை' பற்றி, 'இந்தியா டுடே' பத்திரிகையில் எழுதியிருந்த சல்தன்யா கல்பக், 'தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியானது தனது குறிக்கோள்களில் தனிநாடு என்பதைச் சுயநிர்ணயம் என்று மாற்றிக்கொள்ள முடியுமென்றும் ஏனெனில் சுயநிர்ணய உரிமை என்பது பிரிவினைக்கான உரிமையையும் சுதந்திரமான அரசியல் நிலைப்பாட்டை எடுப்பதற்கான உரிமையையும் உள்ளடக்கியது என்றும் அல்லது தாம் ஒரு கட்சியாக மறைந்திருந்து செயற்படலாம்' என்றும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரொருவர் கூறியதாகப் பதிவு செய்கிறார். மேலும் ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் படை இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என ஐ.நாவுக்கு வேண்டுகோளையும் அமிர்தலிங்கம் அனுப்பினார்.

பெரியண்ணனின் தலையீடு பற்றிய அச்சம் அந்நியத் தலையீடு அதிலும் குறிப்பாக இந்தியத் தலையீடு பற்றிய அச்சம் ஜனாதிபதி ஜே.ஆருக்கு கொஞ்சக்காலமாகவே அதிகமாக இருந்தமை அவரது அறிக்கைகள், கருத்துகள், நடவடிக்கைகளிலிருந்து தெளிவாகத் தென்படுகிறது. மே மாதம் ஜே.ஆர். இந்தியாவின் 'த இந்து' பத்திரிகைக்கு வழங்கியிருந்த செவ்வியொன்றில், "இந்தியா எம்மை ஆக்கிரமிக்குமானால் எம்முடைய கொள்கை கோட்பாடுகளை இந்தியாவினால் எவ்வகையிலும் சிதைக்க முடியாது. நீங்கள் இலங்கையைக் கைப்பற்றி ஆளுங்கள். ஆனால் 15 மில்லியன் மக்கள் உங்களை எதிர்க்கும்போது உங்களால் ஆட்சி நடத்த முடியாது. நான் உயிரோடிருந்தால் அத்தகைய ஆக்கிரமிப்புக்கெதிரான இயக்கத்தை நானே முன்னின்று நடத்துவேன்" என்று கூறியிருந்தார்.

மேலும் 'கறுப்பு ஜூலை' இன அழிப்பைத் தொடர்ந்து வெளியுறவு அமைச்சர் ஏ.ஸீ.எஸ்.ஹமீட் டில்லி விரைந்து இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியிடம் "இந்தியா, இலங்கை மீது நேரடி நடவடிக்கை எடுக்குமா?" என்ற கேள்வியை முன்வைத்து "இந்தியா நேரடியாக எந்த நடவடிக்கையையும் உடனடியாக எடுக்காது" என்ற உறுதிமொழியையும் இந்திராகாந்தியிடமிருந்து பெற்று வந்திருந்தார்.

> **1983 இல் ஜனாதிபதி ஜே.ஆர்.வழங்கிய செவ்வியொன்றில், "இந்தியா எம்மை ஆக்கிரமிக்கத் தீர்மானித்தால், நாங்கள் அதற்கெதிராகப் போராடுவோம். அந்தப் போரில் நாம் நிச்சயமாகத்தோல்வி அடைவோம். ஆனால்தன்மானத்தோடு தோற்போம்" என்று குறிப்பிட்டிருந்தார்.**
>
> **"இந்தியா எம்மை ஆக்கிரமிக்குமானால் எம்முடைய கொள்கை கோட்பாடுகளை இந்தியாவினால் எவ்வகையிலும் சிதைக்க முடியாது. நீங்கள் இலங்கையைக் கைப்பற்றி ஆளுங்கள். ஆனால் 15 மில்லியன் மக்கள் உங்களை எதிர்க்கும்போது உங்களால் ஆட்சி நடத்த முடியாது. நான் உயிரோடிருந்தால் அத்தகைய ஆக்கிரமிப்புக்கெதிரான இயக்கத்தை நானே முன்னின்று நடத்துவேன்" என்றும் கூறியிருந்தார்.**

இதேவேளை, 1983 ஒகஸ்ட் ஏழாம் திகதி இங்கிலாந்தின் 'த சண்' பத்திரிகைக்கு ஜனாதிபதி ஜே.ஆர். வழங்கிய செவ்வியொன்றில், "இந்தியா எம்மை ஆக்கிரமிக்கத் தீர்மானித்தால் நாங்கள் அதற்கெதிராகப் போராடுவோம். அந்தப் போரில் நாம் நிச்சயமாகத் தோல்வியடைவோம். ஆனால் தன்மானத்தோடு தோற்போம்" என்று குறிப்பிட்டிருந்தார். இதைவிடவும் இந்தியத் தலையீடு இலங்கையில் ஏற்படும் என்ற எச்சரிக்கையை ஆறாம் திருத்தத்தின் மீதான நாடாளுமன்ற விவாதத்தில் வெளிவிவகார அமைச்சரான ஏ.ஸீ.எஸ்.ஹமீட் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவையெல்லாம் ஜே.ஆர்.தலைமையிலான அரசாங்கம் இந்தியத் தலையீடு பற்றிய பெரும் அச்சத்தைக் கொண்டிருந்தமையை எடுத்துக் காட்டுகின்றன.

**இந்தியாவிலும் அழுத்தம்**

மறுபுறத்தில் இந்தியாவிலும் இல்ங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குரல்கள் ஓங்கி ஒலித்ததுடன் இந்திராகாந்தி தலைமையிலான மத்திய அரசாங்கத்தின் மேல் அந்த அழுத்தம் கடுமையாக இருந்தது. மேலும் தமிழ்நாடு கொதித்துக் கொண்டிருந்தது. ஆகவே இந்த விடயத்தை அலட்சியமாக எடுத்துக் கொள்ள முடியாத அரசியல் நிர்ப்பந்தம் இந்திராகாந்திக்கு இருந்தது. மேலும் இந்தியா இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையிடுவதற்கான அருமையானதொரு வாய்ப்பாகவும் இதைப் பொருள்கோடல் செய்யும் அரசியல் ஆய்வாளர்களும் உளர். இதுபோன்ற சந்தர்ப்பங்கள் பிராந்திய பெரியண்ணனாகத் தன்னைக் கருதும் இந்தியாவுக்கு இலங்கைக்குள் வேரூன்றவும் தமது நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கவும் வழிசமைக்கின்றன.

இந்தப் பின்புலத்தில்தான், 10 நாட்களுக்குள் இரண்டாவது தடவையாக 1983 ஒகஸ்ட் ஐந்தாம் திகதி இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி, இலங்கை ஜனாதிபதி ஜே.ஆருடன் உரையாடியிருந்தார். இந்த உரையாடலில், இலங்கையில், இந்தியா நேரடியாகத் தலையிடாது என்ற உறுதிமொழியை மீண்டும் வழங்கியிருந்த இந்திராகாந்தி, இலங்கை விவகாரம் தொடர்பில் தாம் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகவும் ஏனெனில், அது இலங்கையை மட்டுமல்லாது இந்தியாவையும் பாதிக்கிறது என்பதை ஜே.ஆருக்கு எடுத்துரைத்திருந்ததுடன், தமிழ் மக்கள் தொடர்பிலான இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வொன்றை எட்ட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார்.

இந்த ஆறாம் திருத்தத்தின் விளைவை நாம் இன்று வரை கண்டுகொண்டே இருக்கிறோம். சந்திரசோம என்ற நபர், 2014 ஆம் ஆண்டு, இலங்கை உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர், தேர்தல் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்ததோடு, அவரது மனுவானது, இலங்கைத் தமிழரசுக் கட்சியானது, நாட்டில் பிரிவினையைக் கோருவதைத் தனது நோக்கமாகக் கொண்டிருப்பதால், அதற்கு எதிராக அரசமைப்புக்குச் செய்யப்பட்ட ஆறாவது திருத்தத்தின் படியாக, 154அ(4) மற்றும் 154அ(5) சரத்துகளின் கீழ், உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்ற மன்றாட்டத்தை கொண்டமைந்தது. சுருங்கக் கூறின், இலங்கைத் தமிழரசுக் கட்சியானது, இந்நாட்டுக்குள் தனிநாடொன்றைக் கோரும் நோக்கத்தைக் கொண்டிருப்பதனால், அது ஆறாம் திருத்தத்தின் கீழ் தடைசெய்யப்படுவதோடு, அதன் உறுப்பினர்கள் மீது, ஆறாம் திருத்தம் அறிமுகப்படுத்திய பிரிவுகளின் கீழ், தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்பதுதான் மனுவின் நோக்கம்.

ஏறத்தாழ மூன்று வருடங்கள், வாதப் பிரதிவாதங்களின் பின்பு, 2017 ஒகஸ்ட் நான்காம் திகதி பிரதம நீதியரசர் ப்ரியசத் டெபால், நீதியரசர்களான உபாலி அபேரத்ன மற்றும் அனில் குணரட்ண ஆகியோரது இணக்கத்துடன் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான சமஷ்டியையே வேண்டுவதால் அரசியலமைப்பின் 154அ(4) சரத்தின் கீழான நடவடிக்கையை உயர்நீதி மன்றம் நிராகரித்திருந்தது.

**7 ஆம் திருத்தம் - சான்றுப்படுத்தப்பட்டது - 1983/10/04**

நிர்வாக மாவட்டங்களை 25 ஆக அதிகரிப்பதற்கான உறுப்புரை 5 இன் திருத்தம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தைத் தோற்றுவிப்பதன் மூலம் தேர்தல் மாவட்டங்களை 25 ஆக அதிகரிப்பதற்காக உறுப்புரை 96 இன் திருத்தம். மேல் நீதிமன்ற ஆணையாளரை நியமிப்பது பற்றிய உறுப்புரை 111 அ வின் உட்புகுத்தல். கிளிநொச்சியை ஒரு நிர்வாக மாவட்டமாகச் சேர்ப்பதற்காக முதலாவது அட்டவணையின் திருத்தம். சுருங்கச் சொல்லின் இது நிர்வாக மாவட்ட எண்ணிக்கையை அதிகரித்தல் சம்பந்தமானதாகும்.

> **அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட திருத்தங்களில் முதல் 6 திருத்தங்களும் பின்வருவனவாகும். 1 ஆம் சீர்திருத்தம்- உயர்நீதிமன்ற அதிகாரம், 2 ஆம் சீர்திருத்தம்- பூரணப்படுத்தல், பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாற்றம் ஆசன இடைவெளி, 3 ஆம் சீர்திருத்தம் - ஜனாதிபதி பதவி காலநீடிப்பு, 4 ஆம் சீர்திருத்தம்- முதலாம் பாராளுமன்ற பதவிக் கால நீடிப்பு, 5 ஆம் சீர்திருத்தம்- ஜனாதிபதி ஆசன இடைவெளி பூரணப்படுத்தல்/பதிலீடு செய்தல், 6 ஆம் சீர்திருத்தம்- ஆள்புல ஒருமைப்பாட்டுக்கும், இறைமைக்கும் எதிரான செயற்பாடுகளை தடை செய்தல்.**

**8 ஆம் திருத்தம் - சான்றுப்படுத்தப்பட்டது - 1984/03/06**

ராணி சட்டத்தரணி ஒருவர் அனுபவிக்கும் சிறப்புரிமைகளுடன் சிரேஷ்ட சட்டத்தரணிகளை ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிப்பதற்கான ஜனாதிபதியின் தத்துவங்களை அதிகரிக்க உறுப்புரை 33 இன் திருத்தம். திருத்திய உறுப்புரை 33 இன் பிரகாரம் உறுப்புரை 136 இன் திருத்தம். ராணி சட்டத்தரணி மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகள் பற்றிய உறுப்புரை 169அ வின் உட்புகுத்தல். சுருங்கச் சொல்லின் இது ஜனாதிபதி சட்டத்தரணியின் சிறப்புரிமை சமபந்தமானதாகும்.

**9 ஆம் திருத்தம் - சான்றுப்படுத்தப்பட்டது - 1984/08/24**

பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவதற்கு தகைமை பெறாத அரசாங்க ஊழியர்களின் சம்பள அளவுத்திட்டங்களைத் திருத்துவதற்காக உறுப்புரை 91 இன் திருத்தம். சுருங்கச் சொல்லின் இது பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்ய முடியாத தகைமையின் திருத்தம் சம்பந்தமானதாகும்.

**10 ஆம் திருத்தம் - சான்றுப்படுத்தப்பட்டது - 1986/08/06**

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரகடனம் ஒன்றுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்னும் தேவைப்பாட்டை நீக்குவதற்காக உறுப்புரை 155 இன் திருத்தம். சுருங்கச் சொல்லின் இது மக்கள் பாதுகாப்பு சம்பந்தமானதாகும்.

(தொடரும்....)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கீழ்க்காய் நெல்லியும், பெருநெல்லியும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**கீழ்க்காய்நெல்லி:**

Botanical Name - phyllonthus niruri

Family-Euphorbiaceae

இது ஒரு பருவ குறுஞ்செடியாகும். செங்குத்தாக அல்லது தரையோடு படர்ந்து வளரக் கூடியது. இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சார்ந்தது இச்செடியாகும். நாட்டின் வெப்பமான பகுதிகளில் காணப்படும்.

இரத்த சோகை அதாவது இரத்தத்தில் ஈமோகுளோபின் குறைந்து இருந்தால் இரத்தத்தை விருத்தி செய்வதற்கு கீழ்க்காய் நெல்லியை வேருடன் சேகரித்து நன்கு கழுவி அரைத்து 5 கிராம் அளவு தினமும் சாப்பிட்டு பசுப்பால் அருந்திவர ஈமோகுளோபின் அளவு அதிகரிக்கும்.

கீழாநெல்லியை கீரையாகக் கடைந்து சமைத்துச் சாப்பிட்டால் கண்களின் மஞ்சள் நிறம் குறைந்து காமாலை நோய் குணமாகும்.

கீழாநெல்லி இலையுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து நகக் கண்களில் பூசினால் நகங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் நீங்கும்.

கீழாநெல்லி, மருதாணி, மஞ்சள் ஆகிய வற்றை சேர்த்து அரைத்து கால்களில் பூசினால் பித்த வெடிப்பு, சேற்றுப் புண் போன்றவை குணமாகும்.

கீழாநெல்லிச் சாறு எடுத்து 30 மில்லி காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் கல்லீரல் நோய்கள், பித்தப்பை கற்கள் போன்றவை குணமாகும்.

கீழாநெல்லி,கரிசாலை இரண்டையும் சம அளவு அரைத்து தினமும் 10 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் இரத்த சோகை குணமாகும்.

கீழாநெல்லி இலை, கொல்லை இலை, நாவல் பட்டை ஒரே அளவாக எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் காலை, மாலை பசுப்பாலில் எடுக்க வெள்ளை சாய்தல் நீங்கும்.

கீழாநெல்லி இலையை சாறு பிழிந்து 15 மில்லி அளவு தினமும் கற்கண்டு சேர்த்து 7 நாட்கள் தொடர்ச்சியாக குடித்தால் சிறுநீர் தொடர்பான பாதிப்புகள் குணமாகும்.

கீழாநெல்லி வேரை இடித்துச் சாறு பிழிந்து 15 மில்லி அளவு கறந்த பசுவின் பாலில் கலந்து எடுக்க அதிக இரத்தப் போக்கு நிற்கும்.

தேக அரிப்பு நீங்க கீழ்க்காய் நெல்லியிலைகளை மட்டும் ஆய்ந்து எடுத்து அம்மியில் வைத்து சிறிதளவு உப்பும் சேர்த்து மை போல இல்லாமல் சிறிது சொரசொரப்பாக அரைத்து உடலில் பூசி வைத்து 15 நிமிடங்கள் ஊறிய பின் வெந்நீரில் குளிக்க வேண்டும். இவ்விதமாக 3 நாட்கள் செய்தால் தேக அரிப்பு நீங்கும்.



ஆய்ந்து எடுத்த கீழ்க்காய் நெல்லியிலை, பொன்னாங்காணி, மூக்கிரட்டை இலைகளை சம அளவாக எடுத்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து 10 கிராம் அளவு விழுதை வாயில் போட்டு நீராகாரம் சாப்பிட்டுவர காமாலை நோய் தீரும்.

இவ்வாறு தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிட வேண்டும்.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க, கீழ்க்காய் நெல்லிச் செடியை நிழலிலுலர்த்தி இடித்து சூரணித்து வைத்துக் கொள்ளவும். இத்துடன் தேற்றான் கொட்டை 70 கிராம் எடுத்துப் பசுப்பாலில் வேக வைத்து எடுத்து நன்றாக அலம்பி கல்லுரலில் போட்டு சூரணமாக இடித்து வைத்துக் கொள்ளவும்.

கீழ்க்காய் நெல்லிச் சூரணம் 2 தேக்கரண்டி வீதமும், தேற்றான் கொட்டைச் சூரணம் 1/2 தேக்கரண்டி வீதமும் எடுத்து, 350 மில்லி தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து கால் பாகமாகக் கொதிக்க வைத்து வடிகட்டி 175 மில்லி காய்ச்சிய பசும் பாலில் கலந்து, சிறிது சீனியும் சேர்த்து தினமும் காலையில் அருந்திவர நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து தேகபலம் உண்டாகும்.

**கீழ்க்காய் நெல்லித் தைலம்**

கீழ்க்காய் நெல்லியை நிழலிலுலர்த்தி இடித்து எடுத்து தூள் செய்து 700 கிராம் எடுத்து அதற்கு 8 பங்கு நீர் சேர்த்து காய்ச்சி 1/8 பங்காக குறுக்கி இதில் பசுவின் பால் 700 மில்லி, நல்லெண்ணெய் 700 மில்லி சேர்த்து 30 கிராம் சின்னச் சீரகத்தை பசுவின் பால் விட்டரைத்து சேர்த்து காய்ச்சி பதத்தில் வடித்துக் கொண்டு வாரம் இரு முறை தலைக்கு வைத்து வர உட்சூடு, கை, கால் எரிச்சல், தலைச் சுற்றல், பித்த மயக்கம் தீரும்.

பெருநெல்லி

Botanical Name- phyllanthus omblica

Family-Euphorbiaceae

இது மர வகையைச் சேர்ந்தது. மரத்திலிருந்து தானாக விழுந்த பழத்தின் விதைகளைப் போட்டு பயிராக்க வேண்டும். இதை விட ஒட்டு மூலமும் இனப்பெருக்கம் செய்யலாம்.

**100 கிராம் நெல்லிக் கனியிலுள்ள சத்துக்கள்**

புரதம் 5 கிராம், கொழுப்பு 0.1 கிராம், காபோவைதரேற்று 13.7 கிராம், கல்சியம் 50 மி.கிராம், பொஸ்பரஸ் 20 மி.கிராம், இரும்பு 1.2 மி.கிராம், கரோட்டின் 90 மை. கிராம், தயமின் 30 மை.கிராம் , விற்றமின் C 600 மி.கிராம், நார் 3.4 கிராம்.

நெல்லிக் கனி இரத்த சுத்திக்கும், இரத்த விருத்திக்கும் அவசியமானது.

நெல்லிக்காயைப் பறித்து நன்றாக மென்று தின்றால் பற்களும், ஈறுகளும் உறுதியாகும்.

நெல்லிக்காயை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் இரத்தம் சுத்தமாகும்.

நெல்லிக்காய் சாற்றில் மிளகுதூள், தூய தேன் கலந்து குடித்து வந்தால் சளி, மூக்கடைப்பு தீரும்.

நெல்லிக்காய்ச்சாற்றில் சம அளவு தேங்காய் எண்ணெய் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து தலைமுடியில் தேய்த்து வந்தால் முடி உதிர்வது நிற்கும்.

நெல்லிக்காயை பச்சடி அல்லது துவையல் செய்து தினமும் சப்பிட்டுவர கர்ப்பப்பை கோளாறுகள் குறையும்.

நெல்லிக்காயை சாறு பிழிந்து தினமும் 15 - 30 மில்லி குடித்து வர ஆசன வாய்க் கடுப்பு, சிறுநீர் எரிச்சல் குணமாகும்.

நெல்லிக்காயை பச்சைப்பயறு சேர்த்து அரைத்து உடல் முழுவதும் தேய்த்து குளித்து வந்தால் தோல் சுருக்கம் நீங்கும்.

நெல்லிக்காய் சாறு, திப்பிலிப் பொடி, தேன் மூன்றையும் ஒன்றாக சேர்த்து குழைத்து நாக்கில் தடவி வந்தால் வாய்ப்புண் குணமாகும்.

உலர்ந்த நெல்லிக்கனியின் பொடி, கடுக்காய் பொடி இரண்டையும் வகைக்கு 2 கிராம் அளவு எடுத்து காலை, மாலை தேனில் கலந்து சாப்பிட்டால் சளி, மூக்கடைப்பு குணமாகும்.

நெல்லிக்கனி வற்றல் 50 கிராம், சின்னச் சீரகம் 50 கிராம் இரண்டையும் பொடி செய்து அரித்து 2 கிராம் காலை, மாலை தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிட காமாலை குணமாகும்.

நெல்லிக்கனியானது பித்தத்தினால் உடலில் உண்டாகின்ற பல கோளாறுகளை அகற்றி குணமாக்குகின்றது.

நெல்லிக்காய் ஊறுகாயினை தொடர்ந்து உண்டு வந்தால் மிகு அமிலச் சுரப்பு நீங்கி இரைப்பையில் வேலை சீர்படும்.

ஓர் இரவு முழுவதும் ஊற வைத்து கசக்கி பிழிந்து வடிகட்டிய நெல்லிக் கனிச்சாறு 60 மில்லி தேனு டன் கலந்து அருந்த மலச்சிக்கல் குணமாகும்.

கிணற்று நீர் உப்பாக இருந்தால் அந்தக் கிணற்றினுள் இரண்டு, மூன்று நெல்லிமரக் கட்டைகளைப் போட்டு வைக்க, அந்த கட்டைகள் அப்படியே ஊற, ஊற நாளடைவில் அதிலிருந்த உப்புக் கரிப்பு மாறி நல்ல குடிநீராகி விடும்.

உலர்ந்த நெல்லி முள்ளி (நெல்லி வற்றல்) பொடியுடன் வெல்லம், கலந்து பால் விட்டுக் காய்ச்சி தேனையும் அளவாகக் கலந்து லேகியமாக தயாரித்து வைத்துக் கொண்டு 5 கிராம் காலை, மாலை உண்ண உடலுக்கு நல்ல போசாக்கையும் பலத்தையும் கொடுப்பதோடு இரத்தத்தில் இரும்புச் சத்தைக் கூட்டும்.

கீழ்காய்க்நெல்லி, பெருநெல்லி இரண்டும் காயகல்ப மூலிகைகளாகும். உடலில் நோயெதிர்ப்பு சக்தியைக் கூட்டக்கூடியதுமாகும்.

# கொரோனா வைரஸ்...

(8 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

SARS –2 இன் தாக்கத்தால் ஏற்படும் நிமோனியா வருத்தம் COVID–19 என பெயரிடப்பட்டுள்ளது. பிரத்தியே கமான மருந்துகள் இல்லாத நிலையில் அமெரிக்கா வின் முதலாவது நோயாளி மற்ற உதவி சிகிச்சைகளுடன் Remdesivir எனும் மருந்து ஏற்றப்பட்டு குணமடைந்து விட்டாரென Lancet எனும் பிரபலமான ஒரு ஆராய்ச்சி ஏடு சொல்கிறது.

ஆனாலும் இந்த மருந்தின் பாதுகாப்பு "Randomized contr olled clinicaltrial" எனும் ஆராய்ச்சிப் படிமுறை யினூடாக நிரூபிக்கப்பட வேண்டுமென்றும் குறிப் பிடுகின்றது. வைரஸ் தாக்கத்திற்குட்பட்டு குணமடைந்தவர்களிலிருந்து ஏற்றப்பட்ட குருதியில் பாயம் அல்லது பிறபொருளெதிரிகள் ஆகியனவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு பயன்படுத்தப்பட்டதை Lancet குறிப்பிடுகிறது. 2017 ஆம் ஆண்டு இப்படிப்பட்ட ஒரு முறையை எபோலா வைரஸ் தாக்கத்திற்கு பயன்படுத்துவதற்கான அனுமதியை உலக சுகாதார நிறுவனம் வழங்கியிருந்தது. 2015 ஆம் ஆண்டு MERS வைரஸ் தாக்கத்திற்கும் இம்முறை பயன்படுத்தப்பட்டு ள்ளது. Influenza $AH_1N_1$pdmo9 வைரஸ் தாக்கத்திற்கும் இம்முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி சிகிச்சை முறை யானது வைரஸ் தாக்க வீரியத்தையும் இறப்பு விகிதத்தையும் ஒரு குறிப்பிட்ட அளவு குறைத்தவுடன் பக்கவிளைவுகள் அற்றதாகவும் இருந்துள்ளது.

### மனிதரில் நோய் எதிர்ப்பு சக்தி

வைரஸ் துணிக்கையின் உறையின் மேற்பகுதியில் புரதம் அல்லது கிளைக்கோ புரதம் ஆகியவற்றின் நீட்சிகள் காணப்படும். இவை "Epitopes" ஆகவும் தொழிற்படக் கூடியவை. இவ் அமைப்புகளுக்கு எதிராக எமது நிர்ப்பீட னத்தொகுதி பிறபொருள் எதிரிகளைச் சுரந்து இவ்வைர ஸ்களைத் தாக்கி அழித்து விடுகின்றன. அதேநேரம் எமது நிர்ப்பீடனத் தொகுதியானது ஞாபகசக்தி கலங்களான Memory cells ஐ உடம்பில் பாதுகாத்து வைத்துக்கொள்ளும். இவ் ஞாபகசக்தி கலங் கலானவை இரண்டாம் முறை அதே வைரஸ் தொற்று ஏற்பட்டால் உடனடியாகத் தொழிற்பட்டு தாக்கி அழித்து விடுகின்றன. இது எமது நிர்ப்பீடனத்தொகுதியின் ஒரு சிறப்பியல்பாகும். தடுப்பூசியின் தொழிற்பாடும் இந்த சிறப்பியல்பின் அடிப்படையிலேயே அமைகின்றது.

### கொரோனா தடுப்பூசி

**1. cDNA Vaccine**

வைரஸின் உறையிலுள்ள புரதங்களை எமது நிர்ப்பீ டனத் தொகுதி பிறபொருட்களாக அடையாளப்படுத்தி பிறபொருள் எதிரி களை உருவாக்கிக்கொள்ளும். இதன் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டு SARS –CoV என்ற கொரோனா வைரஸிற்கு எதிராகத் தொழிற்படக் கூடிய cDNA நிர்ப்பீடனத்தூண்டு கையை ஜப்பானிய விஞ்ஞானிகள் எலிகளில் செய்து காட்டியுள்ளார்கள். இந்த ஆராட்சியின் போது S,N மற்றும் M புரதங்களுக்கு எதிராக C DNA தடுப்பூசிய உருவாக்கக் கூடிய ஆரம்பகட்ட பரிசோதனைகளை எலிகளில் வெற்றி கரமாகச் செய்து முடித்துள்ளார்கள். அதாவது அவர்கள் S, N மற்றும் M புரதங்களுக்கு எதிரான பிரத்தியேகமாகத் தொழிற்படக்கூடிய Monoclonal Antibodies களை எலிகளில் உருவாக்கிக் காட்டியுள்ளார்கள். இது ஒரு சிறந்த ஆரம்பமாகும்.

**2. ACE –2 பிறபொருளெதிரி**

ACE -2 (angiotensin converti ng enzyme – 2) இது மனிதனில் கலமென்சவ்வுகளில் ஊடறுத்துக் காணப்படும் ஒரு Transmembrane metallo carboxypeptidase நொதியமாகும். SARS –CoV ஆனது ACE – 2 ஐ வாங்கியாக பயன்படுத்தி மனித கலமென்சவ்வுகள் மீது ஒட்டிக் கொள்கின்றது. இதற்காக SARS–CoV உறையிலுள்ள S எனப்படும் கிளைக்கோ புரதத் தினை பயன்படுத்திக் கொள்கின்றது. இதுவே மூலக்கூற்று அடிப்படையில் கொரோனா தொற்றுக்கான முதலாவது படியாகும். ஆகவே இந்த நிலையில் அதாவது S புரதமும் ACE-2 நொதியமும் இணையும் படியை எம்மால் தடுக்க முடியு மாயின் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து எம்மைப் பாது காக்க முடியும். அதற்கு ACE – 2 உடன் பிணைந்து கொண்டு S புரத பிணைவைத் தடுக்கக் கூடிய Anti – ACE– 2 Antibody தேவைப்படும். இது ஒரு Monoclonal Antibody ஆகும். இது சாத்தியமா என்பது விஞ்ஞானிகளின் கையில் தங்கியுள்ளது.

### செறின் புரோத்தியேசு நொதிய நிரோதி

TMPRSS2 என அழைக்கப் படும் இந்நொதியமானது மனித கலமென்சவ்வுகளில் காணப்படும். கொரோனா வைரஸானது ACE–2 இல் பிணைந்து கொண்டவுடன் TMPRSS2 என்ற இந்த நொதியமானது S புரதத்தை இரண்டு துண்டுகளாக உடைக்கிறது. இதனால் மனித கலங்களில் உள்ளே வைரஸ் செல்வதற்கு வழிவகுத்துக் கொடுக்கிறது. இந்த படிமுறையைத் தடுப்பதாயின் TMPRSS2 இன் நொதியத் தொழிற்பாடு நிரோ திக்கப்பட வேண்டும். இதற்குரிய நிரோதியை கண்டுபிடிப்பது ஆராய்ச்சியாளர்களின் கைகளில் உள்ளது.

ஆக மொத்தத்தில் anti – ACE – 2 antibodies மற்றும் TMPRSS2 inhibitors ஆகியவற்றை கண்டு பிடிப்பதில் முழுமூச்சுடன் விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என நம்பலாம்.

நிலைமை இவ்வாறு இருக்க சீனாவைச் சேர்ந்த சில விஞ் ஞானிகள் பின்வரும் கருத்தை முன்வைக்கிறார்கள்.

1. பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு மருந்தும் தற்போது இல்லை.
2. cDNA Vaccine, Anti – ACE – 2 antibodies, TMPRESS2 inhibitors உட்பட்ட வேறு முறைகளைப் பயன்படுத்தி புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்க அதிககாலம் பிடிக்கும்.
3. ஆகவே தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள வேறு மருந்துகளைப் பாவித்து எவ்வாறு SARS -CoV-2 ஐ கட்டுப்படுத்த முடியும் என்பதை கணனி மென்பொருள்களைப் பயன்படுத்தி அறிந்துகொள்ள முடியும் என்று அவர்கள் பெரும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அதற்காக அவர்கள் பரம்பரை அலகு வங்கி (Genbank) இடமி ருந்து SARS –CoV– 2 இன் அத்தனை பரம்பரை அலகுகளின் அவற்றின் விரிவாக்கத்தையும் பெற்றுக் கொண்டார்கள். இந்த தரவைப் பயன்படுத்தி, வைரஸினால் தொகுக்கப்படக்கூடிய சாத்தியமான அத்தனை வைரஸ் புரதங்க ளையும் Computermodeling மூலம் வடிவமைத்தார்கள். அதாவது 19 சாத்தியமான வைரஸ் புரதங்களை வடிவ மைத்தார்கள். மேலதிகமாக மனித கலங்களிலுள்ள இரண்டு புரதங்களையும் சேர்த்து மொத்தம் 21 புரதங்களை நிரைப்படுத்தினார்கள். தொடர்ந்து மருந்து தரவுகளைச் சேர்த்து வைத்துள்ள Compound libra ries, 'ZINC' database மற்றும் சீன இயற்கை மருத்துவப் பதார்த்தங்களின் Data base ஆகியவற்றிலுள்ள வைரஸிற்கு எதிராகத் தொழிற்படக் கூடிய இரசாயனப்பதார்த்தங்களையும் நிரற்படுத்தினார்கள்.

தொடர்ந்து computer Virtual screening என்ற படிமுறை ஊடாக மேற்சொல்லப்பட்ட 21 புரத அமைப்புகளுடனும் தாக்கமடையக்கூடிய தன்மையுடைய உபயோகமான பல மருந்துகளை/ இரசாயனப் பதார்த்தங்களை அடையாளப் படுத்தியுள்ளார்கள். அந்த தரவுகளை உரிய ஆராய்ச்சியாளர் களுக்கு பகிர்ந்துகொள்ள தாம் தயார் என 18.02.2020 இல் பகிரங்கமாக அறிவித்துள்ளார்கள்.

**Shi zhengli இடம் ஒரு கேள்வி:**

SARS– CoV– 2 இன் RNA நியூக்கிலிக் அமில தொடரின் விபரத்தை கண்டறிந்தவுடன் உங்களுக்கு பதற்றம் ஏற்பட்டதாகவும் ஆனால் இதற்கு முன்பு காட்டு விலங்கு களிலிருந்து உங்களால் வுஹான் ஆராய்ச்சி மையத்திற்கு கொண்டு வரப்பட்ட விலங்குகளின் மாதிரிகளிலிருந்து பிரித்தெடுக்கப் பட்ட வைரஸ்களின் RNA தொடர்களுடன் ஒத்துப்போகவில்லை என்ற காரணத்தினால் உங்கள் ஆராய்ச்சி மையத்திலிருந்து தவறுதலாக SARS– CoV -2 சூழலுக்கு வரவில்லை என்று நிம்மதி பெரு மூச்சு விட்டதாகவும் கூறியுள்ளீர்கள். உங்கள் ஆய்வுகூடத்தில் கழிவகற்றல் பொறிமுறைகளை மீள் பரிசோதனை செய்ததாகவும் கூறினீர்கள். ஏன் உங்கள் ஆய்வு கூடத்திலிருந்து தப்பித்த வைரஸ்க்கள் மீள் சேர்க்கையடைந்து SARS – CoV -2 தோன்றியிருக்க முடியாது?

கலாநிதி ச.பாலகுமார்
மருத்துவபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2006

**அஜந்தா**




**யனுசன்**

கொரோனா: உடம்புல கை இருக்கும் கால் இருக்கும் மூக்கு இருக்கும் முழி இருக்கும் ஆனா உயிர் இருக்காது...!



நிலவேம்பு: என் ஆள தொடனும்ன என்ன தாண்டி தொடுடா பார்க்கலாம்...

**றூபினி**



ஒரு நிமிசம் வரைக்கும் கையைக் கழுவனும். பன்டி, உன் சோப் என்ன சிலோவா? கொரோனா வைரஸ் வரக்கூடாதுன்னா முடிட்டு கழுவு

**கமலன்**



**அம்மு**



இஞ்சி, பூண்டு, மிளகு இதெல்லாம் அதிகமாகச் சாப்பிட்டா கொரானாவுக்கு நல்லது. நாம எதுக்கு டாக்டர் கொரோனாவுக்கு நல்லது பண்ணனும்


**யஸவிகா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# முரட்டுச் சிங்கம்



ஒரு பெரிய மலைப் பிரதேசத்தில் செழித்தோங்கி வளர்ந்த அடர்ந்த காடு. அக்காட்டில் சிங்கம், புலி, கரடி போன்ற பெரிய மிருகங்களும் மான், குரங்கு போன்ற சிறிய மிருகங்களும் வாழ்ந்து வந்தன.

காலம் காலமாக பல வகையான மிருகங்களும் ஒரே இடத்தில் இருந்து வந்ததால் இவை ஒற்றுமையாக காட்டில் வாழ்ந்து வந்தன. ஆனாலும், இக்காட்டிலுள்ள சிங்கங்களில் முரட்டுச் சுபாவமுள்ள சிங்கம் ஒன்று இருந்தது.

அதனுடைய செயல்கள் மற்ற சிங்கங்களுக்குப் பிடிக்காததால் அது தனிமைப்படுத்தப்பட்டு தனிக்காட்டு ராஜாவாக உலாவி வந்தது.

இருப்பினும் காட்டிலுள்ள மான், குரங்கு ஆகியவற்றுடன் முரட்டுச் சிங்கம் நட்பாகவே பழகி வந்தது. அவையும் தனியாக வாழும் முரட்டுச் சிங்கத்தின் மீது பாசமாய் இருந்தன.

இச்சிங்கம் காட்டில் உலாவச் செல்லும் போது, மான்களுடன் தான் செல்வது வழக்கம். நாட்கள் ஆக ஆக மான்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது.

இதையறிந்த மற்ற மான்கள் முரட்டுச் சிங்கத்துடன் உலாவச் சென்ற போது, திசை மாறி வேறு எங்கும் சென்றிருக்கலாம். அவை இடம் கண்டறிந்து மீண்டும் நம்மிடம் வந்து சேரும் என நம்பிக் கொண்டிருந்தன.

ஒரு நாள் முரட்டுச் சிங்கம் காணாமல் போன மான் குட்டி ஒன்றுடன் காட்டில் சுற்றித் திரிந்து கொண்டிருந்ததை மற்ற மான்கள் பார்த்தன. ஆனாலும், நீண்ட நாட்கள் ஆகியும் இவ்விரண்டும் தங்களுடைய இருப்பிடம் வந்து சேரவில்லை.

அதிர்ச்சியடைந்த மற்ற மான்கள் முரட்டுச் சிங்கத்தையும் குட்டி மானையும் தேட ஆரம்பித்தன. எங்கு தேடியும் கண்ணில் படவில்லை. குட்டி மானின் தாய், சேயை இழந்த ஏக்கத்தில் காட்டில் சுற்றித் திரிந்தது.

ஓர் அடர்ந்த புதர் பக்கத்தில் சிங்கம் கர்ஜிப்பதைப் போன்ற சப்தம் கேட்டது. உன்னிப்பாக அந்த திசை நோக்கி நடந்த தாய் மான் சேறும், சகதியுமாய் இருந்த படுகுழியில் முதலை ஒன்றுடன் ஒரு சிங்கம் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்தது.

இது நம்முடன் இருந்த முரட்டுச் சிங்கம்தான் என அறிந்து, உரத்த குரலில் சப்தமிட்டது. இந்த சப்தம் கேட்டு, காட்டிலுள்ள மற்ற மான்களும் குரங்குகளும் சிங்கங்களும் அங்கு படையெடுத்தன.

முரட்டுச் சிங்கம் முதலையுடன் போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்த மான்கள் எப்படியாவது அதைக் காப்பாற்ற வேண்டுமென சிங்கங்களிடம் கூறின. ஆனால், சிங்கங்கள் அது தங்களுக்கு இழைத்த கொடுமைக்கு சாகட்டும் என சொல்லி விட்டுச் சென்றுவிட்டன.

ஆனால், குரங்குகள் அந்தச் சிங்கங்கள் சொன்னதைக் கேட்காமல் அதன் மீது இரக்கம் காட்டி காப்பாற்ற ஒரு திட்டத்தைத் தீட்டி மான்களிடம் கூறின.

அத்திட்டத்தின்படி, வளர்ந்த மரங்களில் படர்ந்திருக்கும் கொடிகளைப் பிடுங்கி நாங்கள் கீழே போடுகிறோம். அதைக் கொண்டு நீங்கள் முரட்டுச் சிங்கத்தைக் காப்பாற்றி விடலாம் என யோசனை கூறின.


இதுவும் நல்ல யோசனைதான் என அறிந்த மான்கள், குரங்குகள் மரத்திலிருந்து பிடுங்கிப் போட்ட கொடி ஒன்றை எடுத்துச் சென்று சிங்கம் விழுந்திருந்த குழியில் போட்டு, "ஏய்.... சிங்கமே நீ இதை உன் வாயால் கவ்விப் பிடித்துக்கொள். நாங்கள் உன்னை மேலே தூக்கிக் காப்பாற்றி விடுகிறோம்" எனக் கூறின.

அவ்வாறே, முரட்டுச் சிங்கமும் கொடியைக் கவ்விப் பிடித்துக் கொண்டு ஏறி பாதிக் குழி வரும் போது, கொடி அறுந்து மீண்டும் குழிக்குள் விழுந்துவிட்டது.

இதை மரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த குரங்குகள் ஏராளமான கொடிகளைப் பிடுங்கி ஒன்றாகக் கயிறு போல் திரித்து கீழே போட்டன. மான்கள் அதை சுருட்டிக் கொண்டு போய் மீண்டும் குழிக்குள் போட்டன. முரட்டுச் சிங்கம் அந்தப் பலமான கொடியைப் பிடித்துக் கொண்டு தப்பித்தோம், பிழைத்தோம் எனக் கூறிக் கொண்டு மேலே வந்து சேர்ந்தது.

தன்னை முதலையிடமிருந்து காப்பாற்றி உயிர் பிச்சை வழங்கிய குரங்குகளுக்கும் மான்களுக்கும் கண்ணீர் மல்க நன்றி கூறியது! நாம் நயவஞ்சமாகப் பழகி மான் இனத்தை வேட்டையாடிப் புசித்தும் தன்னைப் பழிவாங்காமல் காப்பாற்றிய செயல் கண்டு அவற்றிடம் மன்னிப்புக் கேட்டது.

தன் உயிர் உள்ளவரை தன் பலத்தை வைத்துக் கொண்டு எல்லா உயிர்களுக்கும் தன்னாலான உதவி செய்வேனே ஒழிய, தொந்தரவு செய்யமாட்டேன் எனவும், அன்றிலிருந்து தனக்கு ஏற்பட்ட துன்பம் ஒரு பாடம் எனக் கருதி மற்ற சிங்கங்களுடன் திருந்தி வாழவும் முடிவு செய்தது முரட்டுச் சிங்கம்.




## மரங்கள்

மரங்கள் இரு பிரதான வகைப்படும்.

**1.கிளையுள்ள மரங்கள்**

உதாரணம்:- மா, பலா, புளி, வேம்பு, ஆல், அரசு, பப்பாளி.

இவற்றில் கிளைகள் காணப்படும். இவற்றின் கிளைகளும் இலைகளும் பெரியகுடைபோன்று விரிந்து காணப்படும். இவற்றில் நார்வேர்த் தொகுதி இருக்காது. ஆணிவேர்த்தொகுதியே காணப்படும்.

**2.கிளைகளற்ற மரங்கள்**

உதாரணம்:- பனை, கமுகு, தென்னை, பேரீச்சை, கித்துள்.

இவற்றில் கிளைகள் காணப்படாது. இவை நன்கு உயர்ந்து வளர்ந்திருக்கும்; இவற்றில் ஆணிவேர்த் தொகுதி காணப்படாது. நார்வேர்த்தொகுதியே காணப்படும்.

## நிறங்கள் (Colours)

எம்மால் பலவித நிறங்கள் பாவிக்கப்படுகின்றன. ஆயினும் 3 நிறங்கள் மிகவும் அவசியமானவை. அவை,

1.சிவப்பு
2.நீலம்
3.மஞ்சள்

இவை மூல நிறங்கள் என அழைக்கப்படும். இவை முதல் நிறங்கள் எனவும் அழைக்கப்படும்.

இம்மூன்று நிறங்களும் ஒன்றுடன் ஒன்று கலக்கப்பட்டுவதனாலேயே ஏனைய எல்லா நிறங்களும் பெறப்படுகின்றன.

நீலம் + மஞ்சள் = பச்சை
சிவப்பு + மஞ்சள் = செம்மஞ்சள்
நீலம் + சிவப்பு = ஊதா
பச்சை + சிவப்பு = கபிலம்

இவ்வாறு கலப்பதன் மூலம் பெறப்படும் நிறங்களை கலப்பு நிறங்கள் அல்லது துணை நிறங்கள் எனவும் அழைக்கப்படும்.

**உணவுத் தேவைக்குப் பயன்படுத்தும் இலைகள் சில:-**

**முருங்கை, முசுட்டை, குறிஞ்சா, சண்டி, அகத்தி, கங்குன், தூதுவளை, பசளி, வல்லாரை, பொன்னாங்காணி, கோவா, முளைக்கீரை, தவசிமுருங்கை.**

## விடுகதைகளும் விடைகளும்

• ஐந்து பேரில் இளையவன், கலியாணத்திற்கு மூத்தவன்.

**சுண்டு விரல்**

• சுருக்கென்று குத்தும் முள், பொறுக்க முடியாது.

**தேள்**

• தீப்பொறி பறக்கும் எரியாது. கையிலே பிடித்தால் சுடாது.

**மின்மினி**

• அஞ்சு காசுக்குச் சரக்கு வாங்கி, இரண்டு வண்டியில் ஏற்றினேன். இன்னும் மீதி இருக்குது - அது என்ன?

**மூக்குப் பொடி**

• மூன்று பெண்கள் ஒரே முகம். மூத்த பெண் ஆற்றிலே நடுப் பெண் காட்டிலே கடைசிப் பெண் வீட்டிலே.

**முதலை, உடும்பு, பல்லி**

• வாசலில் வந்து நின்றவரை வரவேற்க ஆளில்லை.

**செருப்பு**

• அண்ணன் வீட்டுத் தோட்டத்திலே, பச்சைப் பாய் விரித்திருக்கிறது.

**கீரை**

• கட்டுப்பட்டு இருந்த மகளை, விட்டுப் பிரிந்து வந்தாள்.

**உமி**

• பளபளவென்று பட்டுடுத்திப் பதினைந்தாயிரம் குஞ்சலம் தொங்க விட்டுத் தெருவைச் சுற்றி வருகிற பெண் திரும்பிப் பார்க்க மாட்டாளாம்.

**தேர்**


• ஓகோ மரத்திலே, உச்சாணிக் கிளையிலே, ஒட்டுச் சட்டியிலே களிமண் இருக்கிறது.

**விளாம்பழம்**

# சிங்கள மயமாகும் தமிழர் கிராமங்கள்

## அதிர்ச்சியூட்டும் ஆய்வுத் தகவல் வெளியீடு





(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான புராதன எல்லைக் கிராமங்கள் தொடர்ந்தும் சிங்கள மயப்படுத்தலுக்கு உள்ளாகிவருவது தொடர்பில் அதிர்ச்சியூட்டும் ஆய்வு ஒன்றை பேர்ள் அக்சன் (pearl action) என்னும் ஆய்வு நிறுவனம் வெளியிட்டது.

வடக்கு-கிழக்கில் தமிழர் நிலங்கள் சிங்களமயமாக்கல், இராணுவ மயமாக்கலுக்கு உட்பட்டு வருவது தொடர்பில் குறித்த ஆய்வு நிறுவனம் தொடர்ச்சியாக ஆய்வுகளை மேற்கொண்டு ஆதார பூர்வமாக ஆய்வுகளை வெளியிட்டு வரும் நிலையில் அண்மையில் திருகோணமலையின் எல்லைக்கிராமமான வெருகல் பிரதேசம் திட்டமிட்ட சிங்கள மயமாக்கலுக்கு உட்பட்டு வருவது தொடர்பில் மேற்படி இந்த அதிர்ச்சியூட்டும் ஆய்வை வெளியிட்டது.

அந்த ஆய்வில்,

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தமிழர்களையும் முஸ்லிம்களையும் கொண்ட திருகோணமலை மாவட்டம் வரலாற்றில் பெரும்பாலாக தமிழ் பேசப்படும் ஒரு பிராந்தியமாக அமைந்துள்ளது.

கொட்டியாரப்பற்று எனப்படும் திருகோணமலை மாவட்டத்தின் தென்பகுதி பல பத்தாண்டுகளாய் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திற்குட்பட்டது. இதன் வரலாற்றிய புள்ளிவிபரங்கள் தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஏராளமான உள்நாட்டு தமிழ் பேசும் வேடர்களை உள்ளடக்கியது. 1951 ஆம் ஆண்டில் தொடங்கிய அல்லை நீர்ப்பாசனத் திட்டம் குறிப்பாக சேருவிலைப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவியது. இதன்விளைவாக அப்பகுதியின் மக்கள் தொகை பெரிதாக மாறியது. ஏற்கனவே குடியிருந்த தமிழ் மற்றும் முஸ்லிம் கிராமங்கள் தங்களது பெயர்களை சிங்களப் பெயர்களாக மாற்றியமைத்தன.

இன்றைய காலத்தில், சேருவிலைப் பகுதி பெரும்பாலாக சிங்களவர்களைக் கொண்டதாகும். இருப்பினும் பெரும்பாலாக தமிழர்களைக்கொண்ட வெருகலை அதிகம் சிங்களமயப்படுத்த முயற்சிகள் தொடர்கின்றன.

இலங்கைத் துறைமுகத் துவாரம் தமிழ் பேசும் பழங்குடியினரான வேடர்களாலும் தமிழர்களாலும் வணங்கப்பட்ட ஒரு புராதன சைவ ஆலயம் இருக்கின்ற இடத்தில் அமைகின்றது.

விடுதலைப்புலிகளிடம் இருந்து நிலம் பறிக்கப்பட்டதன் பின்பு, அவ்விடம் ஒரு புராதன பௌத்த வரலாற்றிடம் எனக்கூறி அங்கிருந்த கோவிலை இடித்து இலங்கை அரசு ஒரு புத்த விகாரையைக் கட்டி, அக்கிராமத்தை லங்காபட்டுன என மறுபெயரிட்டது.

இதேவேளை கல்லடியில், நீலியம்மன் கோவில் இலங்கை வான்படையால் அழிக்கப்பட்டது. இலங்கை தொல்பொருள் துறையால் அவ்விடம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க பௌத்த பூமியாக அறிவித்ததன் பின்பு, அங்கு ஒரு பௌத்த விகாரை நிறுவப்பட்டது என அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# கொரோனா வைரஸை கட்டுப்படுத்த மட்டக்களப்பில் விசேட செயலணி!



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்ட பொது மக்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று தொடர்பிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலும் பாதுகாப்பு முன்னேற்பாடுகளை ஒழுங்கு செய்யும் வகையிலும் விசேட செயலணி ஒன்றை உருவாக்கும் கலந்துரையாடலானது நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது.

இலங்கையில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்கும் நோக்கிலும், இந்நோய்த் தொற்று தொடர்பில் பொது மக்களுக்கு இருக்கும் அச்ச உணர்வுகளைப் போக்கி, அவர்களுக்கு சுகாதார ரீதியான பாதுகாப்பு நடவடிக்கைகளை வழங்குதல் தொடர்பிலும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், இச்செயற்பாடுகளைத் துரிதப்படுத்த ஓர் விசேட செயலணி ஒன்றை உருவாக்குவது தொடர்பிலும் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பாக வெளிநாடுகள் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் வருகைதரும் பொதுமக்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதோடு, மாவட்டத்திற்குள் வதியும் பொதுமக்களை நோய்த் தொற்றுக்களிலிருந்து பாதுகாப்பதற்குரிய விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், மட்டக்களப்பு மருத்துவ சங்கம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் துணையுடன் மேற்கொள்ளல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் மாநகர நிர்வாக எல்லைக்குள் இயங்கும் அரச மற்றும் தனியார் திணைக்களங்களில் சேவை நாடிச் செல்லும் பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பிலான ஏற்பாடுகளை அந்தந்த நிறுவனங்களின் திணைக்களத் தலைவர்களின் உதவியுடன் மேற்கொள்வதற்கும் தற்போது நிலவும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதோடு இதற்காக உடனடியாக ஓர் செயலணியை உருவாக்கி அவர்களின் ஊடாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் இக்கலந்துரையாடலில் முடிவுகள் எட்டப்பட்டன. (இ-7)

## கொரோனா வைரஸால்

# வெறிச்சோடிய "குட்டி யாழ்ப்பாணம்"



(லாச்சப்பல்)

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக குட்டி யாழ்ப்பாணம் என அழைக்கப்படுகின்ற பிரான்ஸின் லாச்சப்பலும் வெறிச்சோடியது.

அத்தியாவசிய அங்காடிகளைத் தவிர, பிற வர்த்தக நிறுவனங்களுக்கு கடந்த சனிக்கிழமை நள்ளிரவு முதல் அந்நாட்டு அரசாங்கம் தடைவிதித்தது.

இந்தத் தடையுத்தரவானது எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதி வரை நீடிக்கும் என அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## ரணிலின் அழைப்பை நிராகரித்த அனுஷா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தரப்பிலிருந்து வந்த அழைப்பை நிராகரித்துவிட்டதாக மலையக முன்னணியின் ஸ்தாபகத்தலைவர் அமரர் சந்திரசேகரனின் மகள் சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாம் நுவரெலியா மாவட்டத்தில் வேறெந்த கட்சிகளுடனும் இணையாமல் தனித்துக் களமிறங்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# எரிபொருள் மூலம் பெறப்படும் வருமானம் கொரோனா தடுப்பு செயற்றிட்டத்திற்கு

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை 25 சதவீதத்தால் குறைவடைந்த நிலையில் கிடைக்கும் இலாபத்தை கொரோனா வைரஸ் தடுப்பு செயற்றிட்டங்களுக்காக திறைசேரிக்கு வழங்கத் தீர்மானித்துள்ளதாக துறைசார் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றின் காரணமாக சர்வதேச ரீதியில் எரிபொருட்களின் விலை குறைவடைந்துள்ளது.

இலங்கையில் எரிபொருள் விலை மாற்றங்கள் ஏதும் ஏற்படாத நிலையில் எரிபொருள் மூலம் கிடைக்கும்வருமானத்தை கொரோனா வைரஸ் தடுப்பு செயற்றிட்டங்களுக்கு வழங்கப் போவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதியில் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்தது.

நேற்று மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி 185.09 ரூபாயாக பதிவாகியது குறிப்பிடத்தக்கது. (இ-7)

என்னிடம் எதை வேண்டுமானாலும் கேள்;ஆனால் நேரத்தை மட்டும் கேட்காதே!

- நெப்போலியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# பயம் வேண்டாம் ஆனால் எச்சரிக்கையாக இருங்கள்

நாட்டில் கொரோனா தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தொற்றைக் கட்டுப்படுத்தும் பணியில் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றபோதிலும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதில் பல்வேறு சவால்கள் இருக்கவே செய்கின்றன.

அதேவேளை கொரோனாத் தொற்று ப்ரவாமல் இருப்பதற்காக வைத்திய நிபுணர்கள் ஆலோசனைகளையும் அறிவுரைப்புகளையும் வழங்கிய வண்ணமுள்ளனர்.

இதில் தனிநபர் சுத்தம் பேணுவதை அவர்கள் கட்டாயப்படுத்தி வருகின்றனர்.

எனினும் இவற்றை உதாசீனம் செய்கின்ற நிலைமைகளைப் பார்க்கும்போது, எப்படித்தான் கொரோனாத் தொற்றைத் தடுக்கப் போகிறார்கள் என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு நம்மவர்களிடம் அசமந்தம் நின்று நிலை பெற்றுள்ளது.

இவை ஒருபுறமிருக்க, கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் பயம் கொள்ளத் தேவையில்லை என்பது பற்றியும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இஃது மக்களை ஆற்றுப்படுத்துவதற்கு அவசியமான வார்த்தைகள்.

அதேநேரம் கொரோனா வைரஸ் தொடர்பில் நாம் எச்சரிக்கையாக இருப்பது என்பது மிக மிக அவசியமானதாகும்.

ஏனெனில் கொரோனாத் தொற்று மரணத்தை ஏற்படுத்தக்கூடியது.

தவிர, மரணங்கள் பல்வேறு வழிகளில் ஏற்பட முடியுமாயினும் கொரோனாத் தொற்று மரணத்தை ஏற்படுத்துமாயின், சம்பந்தப்பட்டவரின் இறுதிச் சடங்கைக்கூட உரியமுறைப்படி செய்ய முடியாமல் போகும்.

இதற்கு மேலாக, இறந்தவரின் உடலை வைத்து அஞ்சலி செலுத்தவோ, சமயச் சடங்குகளை நடத்தவோ, இறுதி ஊர்வலத்தை சிறப்பாக மேற்கொள்ளவோ முடியாத இக்கட்டான சூழ்நிலை இருக்கும்.

ஒரு மனிதனின் மரணம் பருவம் தப்பி நடக்கலாம். ஆனால் இறந்தவரின் இறுதிச் சடங்கில் ஊரும் உறவும் பங்கேற்பதென்பது மரணத்தின் இழப்பை ஆற்றுப்படுத்தவல்லது.

ஆகையால் கொரோனா தரக்கூடிய மரணத்தை வேறு எந்த மரணத்துடனும் ஒப்பீடு செய்ய முடியாது என்பதால், கொரோனாத் தொற்றுத் தொடர்பில் நாம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எனினும் கொரோனாத் தொற்று ஏற்படுமாயின், அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான தயார்படுத்தல்கள் வடபகுதியில் போதுமானதாக இல்லை என்பதை உணர முடிகிறது.

ஆம், நேற்றைய தினம் ய்ாழ்.மாவட்டச் செயலகத்தில் நடந்த விசேட கூட்டமொன்றில்; பொது சுகாதார உத்தியோகத்தர்களுக்குப் போதுமான முகக் கவசங்கள் கூட இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனின்,

வடபகுதியின் நிலைமை மிக மோசமாகவே இருக்கிறது என்பதை உணர முடியும்.

எனவே கொரோனா தொற்றைத் தடுக்கவும் தவிர்க்கவும் நாம் அனைவரும் தயாராக வேண்டும்.

# உணவுத் தட்டுப்பாடுகள் ஏற்படாவண்ணம் கையிருப்புக்களை பகிர்ந்து வழங்க வேண்டும்

## வர்த்தகர்களுக்கு யாழ்.வணிகர்கழகம் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

எந்த இக்கட்டான சூழ் நிலையிலும் தங்களிடம் இருக்கும் கையிருப்புக்களை எல்லோருக்கும் பகிர்ந்து வழங்கி உணவுத் தட்டுப்பாடுகள் ஏற்படா வண்ணம் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென அனைத்து வர்த்தகர்களுக்கும் யாழ். வணிகர்கழகம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது. இவ் அறிவுறுத்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

1) பொது மக்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் மருந்து வகைகள், அரிசி வகைகள் மற்றும் ஏனைய பொருட்களை போதிய கையிருப்பில் வைத்திருத்தல்.

2) பொது மக்களுக்கான பொருட்களை எந்த சூழ் நிலையிலும் தட்டுப்பாடின்றி விநியோகிக்க தயார் நிலையில் இருத்தல்

3) கடந்த சில நாட்களாக தாங்கள் இரவு பகல் பாராது மக்களுக்கு பொருட்கள் விநியோகித்தமையையிட்டு நாங்கள் உங்களை பாராட்டுவதுடன் தொடர்ந்தும் இக்கட்டான நிலைகள் ஏறபடும் போது மக்களுக்கான சேவையை தொடர்ச்சியாக வழங்குதல்

4) வடமாகாணத்திற்கான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் விநியோகத்தில் தனியார் துறையினரே பெரும்பங்கை வகித்து வருகிறார்கள். அந்த வகையில் வடமாகாணத்தில் இருக்கும் மக்களுக்கான தேவையை பூர்த்தி செய்யும் பாரிய பொறுப்பு எம்மிடமே உள்ளது. அந்த பொறுப்பை உணர்ந்து அவர்களுக்கான சேவையை திருப்திகரமான முறையில் நிறைவேற்றுதல்.

5) எந்த இக்கட்டான சூழ் நிலையிலும் தங்களிடம் இருக்கும் கையிருப்புக்களை எல்லோருக்கும் பகிர்ந்து வழங்கி உணவுத் தட்டுப்பாடுகள் ஏற்படாவண்ணம் பாதுகாத்துக் கொள்ளுதல்.

6) வர்த்தகர்கள் தங்களது வர்த்தக நடவடிக்கைகளுக்கு தற்காலிக களஞ்சிய வசதி தேவைப்படின் யாழ்.வணிகர் கழகத்துடன் தொடர்புகொண்டால் அரசாங்க அதிபர் மூலமாக அரச களஞ்சியங்களை பெற்றுத்தர ஆவன செய்யப்படும் என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ்.முதல்வர் ஆனல்ட் பாராளுமன்ற தேர்தலில் போட்டி

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் யாழ். மாநகர முதல்வர் இமானுவல் ஆனல்ட் போட்டியிடவுள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் யாழ்ப்பாண தேர்தல் தொகுதியில் அவர் போட்டியிடவுள்ளார்

(ம-3,10)

# கொரோனா விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

சமூகத்தில் உள்ள தன்னார்வம் மிக்க இளைஞர்கள் ஒன்று சேர்ந்து தற்போது எமது தேசத்தில் பெரிய சவாலாக அமைந்துள்ள கொரோனா நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு முன்வந்துள்ளனர்.

அந்தவகையில் தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்திக்கும் சமூகத்தில் உள்ள தன்னார்வமிக்க இளைஞர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

அதில் இச்செயற்பாடு பூரண பயனளிக்கும் வகையில் மக்கள் மத்தியில் சென்றடைவதற்காக இந்நோய் தொடர்பான ஓர் பயிற்சி பட்டறையை முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே நமது சமூகத்திலுள்ள தன்னார்வம் மிக்க இளைஞர்,யுவதிகள் நமது மக்களை பாதுகாக்கும் நோகக்கில் கொரோனா நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்வரின், இந்நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பான பூரண அறிவைப் பெறுவதற்கான பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வதற்கு நாளை 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைமுன்றலுக்குவருகை தருமாறு ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கொரோனாவின் தாக்கம் தமிழ்மக்கள் மத்தியில் அச்சம் தருகிறது

## யாழ். மாநகரசபை உறுப்பினர் பார்த்திபன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொரோனாவின் தாக்கம் தமிழ் மக்கள் மத்தியில் அச்சம் தருகின்றது என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தற்போது இலங்கைத் தீவையும் ஆட்கொள்ள ஆரம்பித்து இருக்கின்றது. வைரஸ் தொடர்பான அச்சம் மக்களை ஆட் கொண் டிருக்கின்ற இந்த நேரத்தில் அரச இயந்திரம் வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பாக எடுக்கின்ற நடவடிக்கைகள் எமது மக்களை மேலும் அச்சம் கொள்ள வைத்திருக்கின்றது.

கொரோனா வைரஸ் தொற்றுள்ளவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களை தனிமைப்படுத்துவதற்கான மையங்கள் இன்று தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் மக்களின் கடுமையான எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் அமைக்கப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்ட இத் தனிமைப்படுத்தல் மையங்கள் தற்போது வவுனியா, மன்னார் என்று தொடர்கின்றன.

அன்று மனித குலத்திற்கே ஒவ்வாத முறையில் உயிர் கொல்லும் நச்சு ஆயுதங்களுடன் கொடிய இனவழிப்பு யுத்தத்தை நடத்தி தமிழ்மக்களை கருவறுத்த இதே சிங்கள தேச அரசாங்கம் இன்று ஒரு கொடிய வைரஸ் தொற்று உள்ளவர்கள் என்று சந்தேகம் உள்ளவர்களை தமிழர் பிரதேசங்களில தனிமைப்படுத்த முயலவது மீண்டும் ஒரு இன அழிப்பை எம் மீது மேற்கொள்ள முனைகின்றதா? என்று தமிழர் மனங்களில் எழுகின்ற சந்தேகம் நியாயமானது தான்.

கொரோனா வைரஸ் தொற்றுள்ளவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களை தனிமைப்படுத்தி அவர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட வேண்டும். அதில் எந்த ஒரு மாற்றுக் கருத்திற்கும் இடம் இல்லை. ஆனால் அதற்கு பொருத்தமான இடத்தை. திட்டத்தை மேற்கொள்ள வேணடும் என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

வியாபாரத்தில் இலாப நட்டத்தை தவிர்க்க முடியாது. விளையாட்டில் வெற்றி, தோல்வியைப் பிரிக்க முடியாது. அதுபோல வாழ்வில் இன்ப, துன்பம் இரண்டுமே இருக்கவே செய்யும்.

-கமலாத்மானந்தர்

# மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** நுணாவில், மட்டுவில், கல்வயல், கல்வயல் சந்திரபுரம், வேம்பிராய் Cemetery, மட்டுவில் இராணுவ முகாம், மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவிலடி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பொன்னாவெளி, பாலாவி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பகல அளுத்வத்த கிராமம், கோவில்புதுக்குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், பத்தினியார் மகிழங்குளம் கிராமம், தவசிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# கொரோனா விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

கொரோனா விழிப்புணர்வு நிகழ்வானது கொக்குவில் ஆடியபாதம் வீதி பிரம்படிச் சந்தியில் ஆரம்பமாகும், சனசமூக நிலையத்தின் சகல நிர்வாக உறுப்பினர்களும இவ் விழிப்புணர்வு நடவடிக்கையில் கலந்து கொண்டு முன்னெடுக்க வுள்ளதாக அறிவித்துள்ளனர்.

(ம-03)

# ஆன்மீகச் சிந்தனைகள்

## உடல் நலம் பேணுங்கள்

❖ உண்மையை மட்டும் பேசுங்கள். தர்மவழியில் வாழ்வு நடத்துங்கள்.

❖ தாய், தந்தை, குரு ஆகியோரைத் தெய்வமாகப் போற்றுங்கள்.

❖ கடவுள் நமக்கு செய்வது அத்தனையுமே அருள் தான். அறியாமையால் நாம் துன்பப்படுவதாக எண்ணிக் கொள்கிறோம்.

❖ கல்வி பயிலுதல், தான தர்மம் செய்தல், உடல்நலம் பேணுதல் இவற்றில் எப்போதும் அக்கறை செலுத்துங்கள்.

❖ நல்லவர்களுடன் பழகுங்கள். அவர்கள் கூறும் நல்ல மொழிகள் செவி வழியாக உண்ணும் உணவாகும்.

# மன்னார் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் 25ஆம் நாள் சுற்றுப்போட்டி சமநிலையில் முடிவடைந்தது

மன்னார் மாவட்ட உதை பந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 25 ஆம் நாள் சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7.45 மணியளவில் மின்னொளியில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

"மன்னார் பிறீமியர் லீக்" தலைவரும், இலங்கை உதை பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவரும் மன்னார் நகர முதல்வருமான ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் குறித்த போட்டி இடம் பெற்றது.

குறித்த உதைபந்தாட்ட போட்டியானது பள்ளிமுனை உதை பந்தாட்ட கழகத்திற்கும், எஸ்.எல்.எப்.உதைபந்தாட்ட கழகத்திற்கும் இடையில் இடம்பெற்றது.



இதன் போது பள்ளிமுனை உதைபந்தாட்ட கழக வீரர் நிதுஸன் ஒரு கோலையும், எஸ்.எல்.எப். உதைபந்தாட்ட கழக வீரர் எடிசன் ஒரு கோலையும் அடித்தனர்.

இரு அணிகளும் கடுமையாக மோதிய போதும் 1:1 என்ற கணக்கில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. (க-285)

# கொரோனா பீதியை அடுத்து வேறு விளையாட்டில் டோனி கவனம்



ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகள் கொரோனா பீதியால் ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் டோனி வேறு விளையாட்டில் கவனம் செலுத்தும் வீடியோ வைரலாகியுள்ளது.

மார்ச் 29ஆம் திகதி ஐபிஎல் தொடங்கவிருந்த நிலையில் கொரோனா பயத்தால் ஏப்ரல் 15ஆம் திகதி வரை தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஐபிஎல் அணி வீரர்கள் எல்லாம் சொந்த ஊர்களுக்கு சென்றுவிட்டனர்.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டு வந்த சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர்கள் எல்லோரும் கூட தத்தமது ஊருக்குப் போய் விட்டனர்.

அந்த வகையில் சென்னை அணித்தலைவர் டோனி ராஞ்சியில் பட்மிண்டன் ஆடும் வீடியோ வெளியாகியுள்ளது.

அதில் ராஞ்சியில் உள்ள ஜேஎஸ்சிஏ சர்வதேச ஸ்டேடியத்தில் உள்ள பட்மிண்டன் அரங்கில் டோனி விளையாடுவது போல உள்ளது.

அதே போல இன்னொரு வீடியோவில் ரசிகர்கள் புடைசூழ பைக்கில் ஏறி சவாரி செய்வது போல உள்ளது. மேலும் அவருடன் ரசிகர்கள் செல்பி எடுத்துக் கொள்ளவும் செய்கின்றனர். இதற்கிடையே, இந்த வருட ஐபிஎல் போட்டிகள் நடைபெறுமா? அல்லது ரத்தாகுமா? என்ற செய்திக்காக ரசிகர்கள் காத்துள்ளனர்.(க)

# மும்பையில் உள்ள பிசிசிஐ தலைமையகம் மூடல்!

கொரோனா பரவுவதற்கு மத்தியில் மும்பையில் உள்ள அதன் தலைமையகம் மூடப்படும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமான பிசிசிஐ அறிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனாவிற்கு 2 பேர் பலியாகியுள்ள நிலையில், 114 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா பரவுவதை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாட்டில் உள்ள அனைத்து பள்ளி நிறுவனங்கள், வணிக வளாகங்களை மூட மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.


இந்நிலையில், பிசிசிஐ தனது ஊழியர்களை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வீட்டிலிருந்து வேலை செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

மேலதிக அறிவிப்பு வரும் வரை அனைத்து கிரிக்கெட் நடவடிக்கைகளும் ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், ஊழியர்கள் 'வீட்டிலிருந்து வேலை செய்ய' கோரியுள்ளனர்.

முன்னதாக இந்தியன் பிறீமியர் லீக் (ஐபிஎல்) 2020இன் தொடக்க திகதியை ஏப்ரல் 15க்கு ஒத்திவைத்தது பிசிசிஐ.

எட்டு ஐபிஎல் அணி வீரர்களும் தங்கள் பயிற்சியை முடித்து விட்டு வீடு திரும்பியுள்ளனர். 13ஆவது ஐபிஎல் தொடர் நடக்குமா? என்பது குறித்து இன்னும் தெளிவான தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. (க)

# இந்தியப் பெண்ணை மணந்தார் அதிரடி வீரர் மக்ஸ்வெல்



அவுஸ்திரேலிய அணியின் அதிரடி ஆட்டக் காரரான மக்ஸ்வேலுக்கும், தமிழகத்தை பூர்வீகமாக கொண்ட வினிராமன் என்பவருக்கும் நிச்சயதார்த்தம் முடிந்த புகைப்படம் தற்போது வெளியாகி பலரது வாழ்த்துக்களை பெற்று வருகிறது.

அவுஸ்திரேலிய அணியின் முன்னணி ஒல் ரவுண்டரீாக மட்டுமன்றி உலகளவில் மிகச்சிறந்த அதிரடி வீரராக திகழ்பவர், க்ளென் மக்ஸ்வெல்.

மனரீதியான பிரச்சினையில் இருந்து மக்ஸ்வெல்லை மீட்டு கொண்டு வந்ததில் அவருடைய தோழி வினிராமனுக்கு மிகப்பெரிய பங்கு உள்ளது.

மேலும் அதற்கு பிறகு அவுஸ்திரேலிய அணியில் இடம்பிடித்த மக்ஸ் வெல் தனது சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்தார்.

அதுமட்டுமன்றி தற்போது பல்வேறு இருபது-20 தொடரிலும் அசத்தி வரும் மக்ஸ்வெல் கடந்த சில வருடங்களாக வினிராமன் என்கிற இந்திய வம்சாவளிப் பெண்ணுடன் காதலில் இருந்தார்.

இந்நிலையில் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த வினிராமனை மக்ஸ்வெல்லுக்கு மிகவும் பிடித்துப் போக, தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டுள்ளார்.


இதற்கு வினிராமனும் சம்மதிக்க, தற்போது இருவருக்கும் இரண்டு தினங்களுக்கு முன்பு இந்திய முறையில் திருமணம் நிச்சயதார்த்தம் நடந்துள்ளது.

அந்த நிச்சயதார்த்த புகைப்படத்தையும் வினிராமன் தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். (க)

# கொடிய கொரோனாவை ஒழிக்க நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம்

## ரோகித் சர்மா வேண்டுகோள்

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக உலகமே ஸ்தம்பித்து போய் இருக்கிறது.




இதனை பார்க்க வேதனையாக உள்ளது. நாம் இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும் என்றால் இந்த விடயத்தில் அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியது அவசியமானதாகும்.

நாம் சற்று புத்திசாலித்தனமாகவும் செயற்பட வேண்டும். நமது சுற்றுப்புறத்தில் உள்ளவர்களுக்கு நோய் தொற்றுக்கான அறிகுறி ஏதாவது தெரிந்தால் அதுகுறித்து அருகில் உள்ள மருத்துவ துறையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பெருத்த சிரமங்களுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் சிகிச்சை அளித்து வரும் டாக்டர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களின் பணிகள் பாராட்டுக்குரியதாகும். இந்த கொடிய நோயால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோரும் கவனமாகவும், பாதுகாப்பாகவும் இருங்கள் என்று தெரிவித்துள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## 4 நாட்களேயான...

றுள்ளது.

இதில் சிவனேசன் குணேஸ்வரி தம்பதிகளின் 4 நாட்களேயான ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

தாய்ப்பால் குடித்தபோது வாந்தி எடுத்த குழந்தையை மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றிய நிலையிலும் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## யாழ்.போதனா...

தாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக யாழ். போதனா வைத்தியசாலை மூலம் தங்களின் சந்தேகங்கள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)

## கொரோனா...

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 43ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண்ணுடன் 44 பேர்) அதிகரித்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்று அறிகுறி உள்ளவர்கள் 204 பேர் வைத்தியசாலைகளில் கண்காணிக்கப்படுகின்றனர்.

அத்துடன் மட்டக்களப்பு, வவுனியா உள்ளிட்ட 14 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 2 ஆயிரத்து 258 பேர் தங்க வைத்து கண்காணிக்கப்படுகின்றனர்.

இதேவேளை மார்ச் முதலாம் திகதியிலிருந்து 9ஆம் திகதிவரை வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தோர் சுமார் 300 பேர் நாடு முழுவதும் தங்கியுள்ளனர். அவர்கள் தொடர்பில் பொலிஸ் பதிவுகள் இடம்பெறுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-3)

## முதலாவது நபர்...

மதிக்கப்பட்ட நிலையில் நேற்று அவருக்கு கொரோனா இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் மட்டக்களப்பு நகரில் தங்கியிருந்த நிலையில் நேற்று முன்தினம் சுகவீனம் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு கொரோனா சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்ட குறித்த நபர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவரது பரி சோதனை முடிவுகள் தற்போது கிடைக்கப் பெற்றதை தொடர்ந்து அவருக்கு கொரோனா தொற்று இருப்பதாக தெரியவந்துள்ளது. (ம-3,114)

## சங்கரத்தையில்...

சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் நாமகள் வீதி கொக்குவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த சரவணபவன் அகிலன் (வயது - 44) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## தேர்தலுக்கான...

யாழ். மாவட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் சி.வி.விக்னேஸ்வரன், கந்தையா அருந்தவபாலன், சிற்பரன் தவச்செல்வம், கந்தையா ரத்ணகுமார் மற்றும் மீரா அருளானந்தம் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில், கந்தையா சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சிங்கபாகு சிவகுமார் ஆகியோர் யாழ். மாவட்டத்தில் போட்டியிடவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கட்சி சார்பில் நல்லதம்பி ஸ்ரீகாந்தா மற்றும் கனகலிங்கம் சிவாஜிலிங்கம் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் சார்பில், அதன் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் யாழ். மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார். (ம-3)

## மரண தண்டனை...

விடப்பட்டுள்ளனர். இதனால் தாம் சொல்ல முடியா துன்பங்களை அனுபவிப்பதாக வும் கடும் குற்றச்செயல் தண்டனை கைதிகளுக்குரிய கூடங்களில் இருந்து தம்மை மீட்டு கொழும்பு அல்லது யாழ்ப்பாண சிறைச்சாலைகளுக்கு அனுப்புமாறு தமிழ் அரசியல் கைதிகள் தமது உறவினர்கள் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அநுராதபுரம் சிறைச்சாலைக்கு வரும் புதிய கைதிகளை தமிழ் அரசியல் கைதிகள் இருந்த கூடங்களில் விடுவதாகக் கூறி தமிழ் அரசியல் கைதிகளை மரண தண்டனை கைதிகளுடன் சிறைச்சாலை நிர்வாகத்தினர் விட்டுள்ளார்கள்

இதனால் குறித்த கைதிகள் 11 பேரும் இட வசதிகள் இன்றி கடும் துன்பங்களை, சிரமங்களை அனுபவித்து வருவதாகவும், குறித்த வைரஸ் தொற்று குறையும் வரை தம்மை யாழ்ப்பாணம் அல்லது கொழும்பு சிறைகளுக்கு அனுப்புமாறு சிறைச்சாலை நிர்வாகத்திடம் கேட்டுள்ளனர்.

ஆனால் அவர்களை இடம் மாற்றாமல் மரணதண்டனை கைதிகளுடன் விட்டிருப்பதால் தாம் சொல்லமுடியாத துன்பத்தை எதிர்கொள்வதாகவும் தம்மை எப்படியாவது மீட்பதற்கு உதவுமாறும் உறவினர்களிடம் தெரிவித்துள்ளனர். (ம-3,9)

## முழு நாட்டையும்...

இருந்து 10 ஆம் திகதி வரையில் இத்தாலி மற்றும் தென் கொரியாவில் இருந்து வந்த மூவாயிரம் பேரில் 1500 பேர் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள் என்றும் அவர்களை கண்காணிக்கும் நிலையங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஐரோப்பாவில் இருந்து வந்தவர்களையும் அவர்கள் இருக்கும் இடங்களைத் தேடிச்செல்லும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும், பொதுமக்கள் வீட்டினுள் இருப்பதால் இதனைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் நோய்த்தொற்று தொடர்பாக எவ்வித பொறுப்பும் இல்லாமல் செயற்படுபவர்கள் குறித்து ஜனாதிபதி இதன்போது கவலை வெளியிட்டார்.

தொற்றுக்குள்ளானவர்களை ஒரு இடத்தில் தனிமைப்படுத்தி கண்காணித்தால் இலகுவில் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை இந்தியாவிற்கு மத யாத்திரை சென்றுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு கொண்டு வருதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார். (ம-3)

## பருப்பு, மீன் ரின்...

நுகர்வோருக்கு வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு ஆற்றும் விசேட உரையிலேயே அவர் இந்த அறிவிப்பினை விடுத்துள்ளார். மேலும் இந்த புதிய விலை இன்று (நேற்று) நள்ளிரவு நடைமுறைக்கு வரும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள விசேட விடுமுறையின்போது ஒன்றுகூடல்கள், பொது நிகழ்வுகள் மற்றும் களியாட்டங்களிலிருந்து முற்றாக விலகியிருக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்கு நாங்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினால் வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு முடியும்.

நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் மக்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும் அரசாங்கம் தலைமை தாங்க வேண்டும்.

விடுமுறையின்போது நீர்ப் பிரச்சினை மற்றும் விவசாயிகளுக்கு உரப் பிரச்சினை போன்றன இருக்கின்றன. ஆகவே, நாங்கள் சமூகத்தை கவனத்தில் கொண்டே அனைத்து முடிவுகளையும் எடுக்க வேண்டும்.

மேலும் வங்கிக் கடனை மீளப் பெறுவதை 6 மாதங்களுக்கு நிறுத்த வேண்டும் எனவும் கூறினார். (ம-3)

## யாழில் இன்று...

கள் தெரிவு செய்துள்ள நிலையில் இன்றைய தினம் ஆறு கட்சிகள் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் தமது வேட்புமனுக்களை தாக்கல் செய்யவுள்ளதாக அறியமுடிகிறது.(ம-3)

# இரண்டாயிரம் பேராலேயே ஆபத்து

### ஜனாதிபதி உரை



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரம்பலை நாட்டில் கட்டுப்படுத்தும் எமக்கு தற்போது காணப்படும் அடிப்படைப் பிரச்சினை என்னவெனில், மார்ச் மாதம் 10ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு முன்னர் இரண்டு வாரங்களுக்குள் நோய்த் தொற்று ஏற்பட்டிருந்த நாடுகளிலிருந்து 2 ஆயிரம் பேரளவில் இலங்கைக்கு வருகை தந்திருந்தமையாகும்.

அவர்கள் அனைவரையும் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்களை இனங்கண்டு அவர்களின் வீடுகளிலேயே சுயகண்காணிப்புக்குட்படுத்த நாம் தீர்மானித்துள்ளோம்.

இதற்காக பொலிஸார், முப்படையினர், சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதோடு, அவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு நேற்று இரவு ஆற்றிய சிறப்பு உரையிலேயே இதனைத் தெரிவித்தார். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

செவன
திகதி 17/03/2020
சீட்டிழுப்பு இலக்கம் 271
L 15 37 60 66

நீரோகா
திகதி 2020/03/17
சீட்டிழுப்பு இலக்கம் 0676
மீனம் 19 40 56 57

மஹஜன சம்பத
திகதி 2020/03/17
சீட்டிழுப்பு இலக்கம் 4137
A 8 1 0 1 9 8

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 17-03-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2424
J 59 62 67 79

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 915
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.03.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,329,415/-
வெற்றி இலக்கங்கள் 06 41 46 47 J

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1656 சீட்டிழுப்பு திகதி 17/03/2020
வெற்றி இலக்கங்கள் 15 30 40 52 E
ரூ. 48,597,644

சீட்டிழுப்பு வாரம்: 573
இளம்சிவப்பு
17.03 2020
செவ்வாய்க்கிழமை
N 43 48 62 78
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,093,205
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 17.03.2020 வெற்றி வாரம் 2801 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் மீனம் 01 03 28 33
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,994,706
ரூ.500 பரிசுக்குரிய 4 8 4 0
ரூ.100 பரிசுக்குரிய 5 9 5
டபள் சான்ஸ் விசேட இல.
2020.03.18 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

# கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் அரசின் நடவடிக்கையில் திருப்தியில்லை

## மக்களின் வாழ்வோடு விளையாடாமல் தேர்தலை பிற்போடுக - சஜித் பிரேமதாச

(கொழும்பு)

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் நடவடிக்கையில் திருப்தியில்லை. மக்களின் வாழ்க்கையுடன் விளையாடாமல் அரசாங்கம் தற்காலிகமாக வேனும் தேர்தலை பிற்போடவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி காரியாலயத்தில் நேற்று செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்.



கொரோனா வைரஸ் தாக்கம் வியாபித்து வருவதால் உலக நாடுகள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகி இருக்கின்றன. அதனால் அந்த நாடுகள் தங்கள் மக்களை பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன.

எதிர்க்கட்சிகளுடன் இணைந்து வைரஸை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களை மேற்கொண்டுவருகின்றன. ஆனால் எமது நாட்டில் இந்த வைரஸை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களைவிட பொதுத் தேர்தலை நடத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளும் முயற்சியே இருந்து வருகின்றது.

அத்துடன் கொரோனா வைரஸ் தாக்கம் நாட்டுக்குள் தொடர்ந்து தீவிரமாகிக்கொண்டிருப்பதாகவே தெரியவருகின்றது. அதனால் தான் அரசியல் பேதமின்றி அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்படுவதற்கு தேர்தலை பிற்போடுமாறு அனைத்து கட்சிகளும் தெரிவித்திருக்கின்றன.

அதேபோன்று பாராளுமன்றத்தை கூட்டி பொதுவான வேலைத்திட்டத்தை மேற்கொள்ளுமாறு தெரிவித்தும் அரசாங்கம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும் அமெரிக்காவில் இந்த வைரஸ் தாக்கம் தீவிரமாகும் நிலை இருப்பதை உணர்ந்தவுடன் அந்நாட்டு ஜனாதிபதி ரொனால் ட்ரம் 8.3 பில்லியனை ஒதுக்கி இருக்கின்றார். அதேபோன்று பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் அமெரிக்க தலைவர்கள் அவர்கள் மேற்கொண்டுவரும் வேலைத்திட்டம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர்.

ஆனால் எமது நாட்டில் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 3மாதமாகியும் வரவு செலவு திட்டம் ஒன்றைக்கூட தயாரிக்க முடியாமல் இருக்கின்றது. ஏற்பட்டிருக்கும் ஆபத்தில் இருந்து மீள்வதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக, நாட்டு தலைவர் மக்களுக்கு தெளிவுபடுத்தாமல் இருக்கின்றார்.

அத்துடன் அரச துறையினருக்கு மாத்திரம் விடுமுறை அளித்து இந்த வைரஸை கட்டுப்படுத்த முடியாது. முழு நாட்டையும் முடக்கி வைரஸ் தொற்று நீக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். ஆனால் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் திருப்தியடைய முடியாமல் இருக்கின்றது.

அதனால் அரசாங்கம் நாட்டு மக்களின் உயிருடன் விளையாடாமல் தேர்தலை பிற்போட்டு கொரோனா வைரஸை கட்டுப்படுத்த முழுமூச்சாக செயற்படவேண்டும். அதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்றார். (ம-3)

# தடுப்பு முகாமுக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்ட

## இராணுவ அதிகாரிக்கு கொரோனா

(கொழும்பு)

இராணுவ அதிகாரி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். வெளிநாட்டில் இருந்து நாடும் திரும்பும் பயணிகளை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து தடுப்பு முகாமுக்கு அனுப்பும் நடவடிக்கை களில் ஈடுபட்ட இராணுவ அதிகாரி ஒருவருக்கே இந்த வைரஸ் தொற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

# கட்டு நாயக்க விமான நிலையம் மூடியதான செய்தி உண்மையில்லை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொடர்பான அச்சுறுத்தல் காரணமாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அரசாங்கம் மூடுவதாக வெளியான வதந்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என சிவில் விமான போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

தற்போது யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் மட்டுமே மூடப்பட்டுள்ளது. மற்றும் எதிர்காலத்தில் கட்டுநாயக்க விமான நிலையமும் மூடப்படும் என்ற அனைத்து வதந்திகளையும் அதன் தலைவர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி நிராகரித்துள்ளார்.

அத்தோடு இவ்வாறு சமூக ஊட்க தளங்களில் பரப்பப்பட்ட தவறான தகவல்களால் பொது மக்களை ஏமாற வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் நாட்டில் உள்ள அனைத்து விமான நிலையங்களிலும் கொரோனா வைரஸினை கட்டுப்படுத்துவதற்கான அனைத்து வசதிகளும் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மூடுவது குறித்த முடிவு ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# கொரோனா வைரஸ் அச்சம் பொதுத் தேர்தலை பிற்போடுக

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு கபே அமைப்பு கடிதம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினால் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலினை பிற்போடுமாறு கபே அமைப்பு (சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம்) தேர்தல் ஆணைக் குழுவுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

கபே அமைப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அச்ச சூழ்நிலையில் பொதுமக்கள் வெளியே செல்வதற்கே அஞ்சுகின்றனர். இந்நிலையில் தேர்தலை நடத்துவதென்பது அசாதாரண நிலைமையாகும். குறிப்பாக வேட்பு மனு தாக்கல் செய்யும்போது ஏற்படக்கூடிய விடயங்கள் மற்றும் அதன் பின்னர் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு சிக்கல்கள் காணப்படுகின்றமையினால் தேர்தல் நடவடிக்கைகளை பிற்போடுவது அவசியமாகும்.

மேலும் நிர்வாக சேவைகள் சிலவற்றை மாத்திரம் திறந்து தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதாகும். சில நாடுகளில் நடைபெறக்கூடிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கூட பிற்போடுகின்ற நிலையில் இலங்கையில் தேர்தலை பிற்போடுவது குறித்து அரசாங்கம் எந்தவொரு அறிவிப்பையும் இதுவரை விடுக்கவில்லை.

மேலும் தேர்தலுக்கு முன்னர் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவது தான் தற்போதைய சூழ்நிலையில் முக்கியமானதொன்றாக காணப்படுகின்றமையினால் அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறித்த கடிதத்தில் கபே அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (ம-3)

# யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் தவணையிடப்பட்ட வழக்குகள்

## மறு தவணை பின்னர் அறிவிக்கப்படும் நீதிமன்ற பதிவாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் இந்த வாரம் தவணையிடப்பட்ட வழக்குகள் அனைத்துக்குமான மறு தவணை பின்னர் அறிவிக்கப்படும் என்று நீதிமன்றப் பதிவாளர் திருமதி வாசுகி அறிவித்துள்ளார்.

நாட்டின் அசாதாரண நிலை காரணமாக மார்ச் 16ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீதிமன்ற நடவடிக்கைகளை மட்டுப்படுத்துவதற்கு நீதிச் சேவை ஆணைக்குழுவால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதனால் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் இந்த வாரம் தவணையிடப்பட்ட வழக்குகள் அனைத்துக்குமான மறு தவணை பற்றிய விவரம் நீதிமன்ற அறிவிப்புப் பலகையில் பின்னர் வெளியிடப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-3.9)


சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=



சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(C-9459)

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK-550*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9458)

0768226240

V2 TRAVELS

மஜஸ்ரிக் விரைவுப் பொதிகள் சேவை

5 kg / 10kg க்கு மேல் கிலோவுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது

பிரான்ஸ் - ரூ.750/ரூ.700
ஜேர்மனி - ரூ.750/ரூ.700
டென்மார்க - ரூ.750/ரூ.700
கொலன்ட் - ரூ.750/ரூ.700
பெல்ஜியம் - ரூ.750/ரூ.700
இத்தாலி - ரூ.850/ரூ.750
லண்டன் - ரூ.700/ரூ.575

கனடா மற்றும் லண்டனுக்கு பழங்கள் மரக்கறி வகைகளை வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு அனுப்பிட தொடர்புகொள்ளவும்.

முகவர்களாக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும் (C-9504)

கப்பல் ஊடாக பொதிகளை அனுப்பிடவும், யாழ்-கொழும்பு ஆசனப் பதிவுகளுக்கும் பொதிகளை அனுப்பிடவும் தொடர்புகொள்ளவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 976,KKS வீதி யாழ்ப்பாணம் 070 3305500 | 72,பலாலி வீதி யாழ்ப்பாணம் 075 5522999 | பிரதான வீதி சங்கானை 075 3305500 | 355, A9 வீதி கிளிநொச்சி 075 5522999 | முல்லைத்தீவு கனகராயன்குளம் மன்னார் | சென்றல் வீதி கொழும்பு 12 070 3305500 |


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்
# மேல்மாகாண பிரபல பாடசாலை

நேரம்: 45 நிமிடம் வினாப்பத்திரம்- 01

01) இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருட்களை இரண்டு கூட்டங்களாக பிரிக்கலாம்.




A B C D

இக் கூட்டங்களை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

01) A,B / B,C 02) A,B / C,D 03) A,C / D,B

02)இங்குள்ள உருவில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாக பிரிக்கலாம்.



A B C

D E F

01) A,C / B,F / E,D 02) A,D / C,B / E,F 03) B,C / D,F / E,A

● 3ஆம், 4ஆம் வினாக்களில் வெற்றிடங்களுக்கு நன்கு பொருத்தக்கூடிய சொல்லின் கீழ் கோடிடுக.

03) ....A.... உள்ள குகை ஓவியங்கள் ....B.... மன்னனால் ....C....

1) A - எம்பக்கவில் B - மகாசேன C - கட்டப்பட்டவை
2) A - சீகிரியாவில் B - காசியப்ப C - வரையப்பட்டவை
3) A - சீகிரியாவில் B - தாதுசேன C - செதுக்கப்பட்டவை

04) ....A.... உள்ள யானைகள் ....B.... யானைகள் குளிப்பதை ....C....

1)A-வில்பத்தில் B-மிருககாட்சிசாலையில் C-பார்வையிட்டோம்
2)A-குமணவில் B-சரணாலயத்தில் C-பார்வையிட்டோம்
3)A-பின்னவலயில் B-சரணாலயத்தில் C-பார்வையிட்டோம்

● கீழ்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

05) நான் மேற்குத்திசை நோக்கிச் செல்லுகின்ற போது எனது இடதுகை பக்கத்தில் உள்ள திசை யாது?


1) தெற்கு 2) வடக்கு 3) கிழக்கு

06) 6□3 =18 இக்கணித செய்கையில் □ உள்ள இடத்தில் வரவேண்டிய கணித குறியீடானது?

1) கூட்டல் 2) கழித்தல் 3) வகுத்தல்

07) இரவு வெளிச்சத்தில் வானவெளியில் பறவை ஒன்று பறந்து செல்வதை நரேன் கண்டான். அவன் கண்ட பறவை

1) கிளி 2) புறா 3) வௌவால்

08)  இவ்வுருவில் 3 பாடங்களை விரும்பு கின்ற பிள்ளைகள் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது இதன்படி கணிதபாடத்தை விரும்புகின்ற ஆங்கில பாடத்தை விரும்பாதார் யார்?

1)A 2)B 3)C

09)  கணித செய்கைகளுக்கு பதிலாக குறியீடுகள் தரப்பட்டுள்ளன இதற்கு ஏற்ப ? என்ற குறியீட்டுக்கு வரவேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.

1)05 2)04 03)06

10) மூன்று செவ்வகங்களினாலும் இரண்டு முக்கோணிகளினாலும் அமைக்கப்பட்ட திண்மவடிவம் யாது?

1) சதுரமுகி 2) கூம்பகம் 3) அரியம்

11) விதுஷா ஒரு எண்ணை எட்டால் பெருக்க வேண்டியதற்கு பதிலாக ஒன்பதால் பெருக்கி விடை 81 எனக் கூறினாள். அவ் எண்ணை எட்டால் பெருக்கினால் வரும் விடை யாது?

1) 63 2) 90 3) 72

12) WP NA - 1857 D வாகனத்தட்டு இலக்கம் ஒன்று அருகில் தரப்பட்டுள்ளது. இவ்வாகனத்திற்கு பயன்படுத்தப்படும் எரிபொருள் யாது?

1) பெற்றோல் 2) டீசல் 3) மண்ணெண்ணெய்

13)  இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி யாது?

1) 1/7 2) 1/12 3) 1/16

14) எட்டு சிறுவர்கள் செய்யும் வேலையை ஆறு பெண்கள் செய்வார்கள். 12 பெண்கள் செய்யும் வேலையை 8 ஆண்கள் செய்வார்கள் எனின் ஒரு ஆண் செய்யும் வேலையை எத்தனை சிறுவர்கள் செய்வார்கள்?

1) 2 2) 4 3) 5

> ஓவியா நேற்று நீல நிறச்சட்டை அணிந்தமையினால் நாளை மஞ்சள் நிறச்சட்டை அணிவாள். நாளை மறுநாள் வியாழக்கிழமை பச்சை நிறச்சட்டை அணிவாள். நேற்றைக்கு முதல் நாள் வெள்ளை நிறச்சட்டை அணிந்தமையால் இன்று சிவப்பு நிறச்சட்டை அணிவாள்.

15) ஓவியா வெள்ளை நிறச்சட்டை அணிந்த நாள் எது?

1) சனிக்கிழமை 2) ஞாயிற்றுக்கிழமை 3) திங்கட்கிழமை


16) ஓவியா நீலநிறச்சட்டை அணிந்தது 25 ஆம் திகதி எனின் பச்சைநிறச்சட்டை அணிந்தது எத்தனையாம் திகதி ஆகும்?


1) 28 ஆம் திகதி 2) 26 ஆம் திகதி 3) 27 ஆம் திகதி

17) ஓவியா திங்கட்கிழமை அணிந்த சட்டையின் நிறம் யாது?

1) நீலநிறம் 2) சிவப்பு நிறம் 3) மஞ்சள் நிறம்

● கீழ்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிந்து கோடிடுக.

8)  இவ்வுருவில் உருக்களையும் இணைப்பதால் தோன்றும் வடிவம்.




1) 2) 3)

19) மழை பெய்யும் போது இடி முழக்கம் ஏற்படும் இது

1) பெரும்பாலும் நிகழும் நிகழ்வாகும்.
2) இது எப்போதும் நடைபெறும் நிகழ்வாகும்
3) இது ஒரு போதும் நடைபெறுவதில்லை

20) 
போத்தல் ஒன்றில் உள்ள நீரின் அளவு முதல் உருவில் காட்டப்பட்டுள்ளது. இப்போத்தலை கிடையாக வைக்கும் போது தோன்றும் விடையை தெரிக.




21) 

ஒரேயளவான இரண்டு சதுரங்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டப்பட்ட அமைப்பு காட்டப்பட்டுள்ளது. சதுரத்தின் ஒரு பக்கநீளம் 8cm எனின் உருவின் சுற்றளவு யாது?
1) 56cm 2) 58cm 3) 64cm

22) மிதுலா தனது தாயைவிட 26 வருடங்கள் இளையவள் மிதுலாவின் தந்தையைவிட தாய் 5 வருடங்கள் இளையவர். மிதுலாவின் தந்தையின் வயது 52 எனின் மிதுலாவின் வயது யாது?
1) 18 வயது 2) 23 வயது 3) 21 வயது

23) மனிதன் ஒருவன் படம் ஒன்றைக்காட்டி எனக்கு சகோதரனோ, சகோதரியோ இல்லை. இருந்த போதும் இப்படத்தில் இருப்பரின் தந்தை எனது தந்தையாரின் புதல்வர் ஆவார். இம்மனிதன் யாருடைய படத்தை காட்டினான்.
1) தனது 2) தனது தந்தையின் 3) தனது மகனின்

24) அமுதம், அரசன், அரவம் என்னும் சொற்கள் குறியீட்டு வடிவில் MPSA MPVH MDIH என எழுதப்பட்டுள்ளன. இதில் அரவம் என்பதை குறிக்கும் குறியீடு யாது?
1) MPSA 2) MPVH 3) MDIH

25) மார்ச்மாதம் 26ஆம் திகதி வியாழக்கிழமை எனின் மார்ச் முதலாம் திகதி என்ன கிழமை?
1) சனிக்கிழமை 2) ஞாயிற்றுக்கிழமை 3) வெள்ளிக்கிழமை

நரேன் ஓர் ஆண்பிள்ளை. நரேனின் தங்கை சுவேதா. சுவேதாவிற்கு இரண்டு பெண் சகோதரிகளும் இரண்டு சகோதரர்களும் உள்ளனர்.

26) நரேனுக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?
1) 2 பேர் 2) 3 பேர் 3) ஒருவர்

27) நரேனின் தங்கைக்கு எத்தனை பிள்ளைகள் உள்ளனர்?
1) 4 பேர் 2) 6 பேர் 3) 5 பேர்

● 28 தொடக்கம் 30 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் இடைவெளிக்கு பொருத்தமான சொற்களை தெரிந்து கோடிடுக.

> நிமலன் இசையில் மிகுந்த விருப்பத்தை கொண்டுள்ளான். ஆகவே பெற்றோர்கள் அவனை அதற்காக .....1..... இசைவகுப்பிற்கு அனுப்பினர். நிமலன் மிகவும் விருப்பத்துடன் வகுப்பிற்கு தவறாமல் சென்று வயலின் .....2..... நன்றாக கற்றான். அவனுடைய பெற்றோர் தமது மகனைப் பற்றி மிகவும் ...3....அடைந்தனர்.

28) முதலாவது இடைவெளிக்கு பொருத்தமான சொல் எது?
1) பயிற்சியளிப்பதற்கு 2) உற்சாகப்படுத்துவதற்கு 3) வழிப்படுத்துவதற்கு

29) இரண்டாவது இடைவெளி பொருத்தமான சொல் யாது?
1) பாட 2) வாசிக்க 3) அடிக்க

30) மூன்றாவது இடைவெளிக்கு பொருத்தமான சொல் யாது?
1) மகிழ்ச்சி 2) இரக்கம் 3) வேதனை

31) வியாபார நிலையம் ஒன்றில் "வார நாட்களில் திறக்கப்படும்" என அறிவித்தல் போடப்பட்டிருந்தது. இதற்கு இதன் கருத்து யாதெனில்
1) வாரத்தில் ஏழு நாட்களும் திறக்கப்படும்.
2) திங்கள் முதல் வெள்ளி வரை திறக்கப்படும்.
3) சனி, ஞாயிறு நாட்களில் திறக்கப்படும்.

32) பிழையான கருத்து இடம்பெறும் விடையை தெரிந்து கோடிடுக.
1) சூரியகிரகணம் அமாவாசை நாளில் ஏற்படும்.
2) உடும்பு குட்டியீன்று இனம் பெருக்கும்.
3) ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் கிரேக்க நாடகும்.

33) ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி வரையுள்ள நாட்களின் நடுவில் வரும் திகதி யாது?
1) ஜனவரி 25ஆம்திகதி 2) ஜனவரி 18ஆம்திகதி 3) ஜனவரி 22ஆம் திகதி

34) "நாளை மறுநாள் எனது பிறந்த தினம்" என வாமதி நேற்றைக்கு முதல் நாள் என்னிடம் கூறினாள். அதன்படி அவளது பிறந்த தினம்?
1) நேற்று 2) இன்று 3) நாளை

35) 
உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
1) 4 2) 5 3) 6

36) எங்கள் ஊரில் உள்ள முதியவர் ஒருவர் நடக்க இருக்கும் விடயங்களை முன்னரே கூறி எங்களை வியப்பில் ஆழ்த்திவிடுவார். அவனைப் பார்ப்பதற்கு ஏராளமான மக்கள் வருவதுண்டு. அந்த முதியவரை குறிக்கும் கூடிய சொல் எது?
1) அட்டவதானி 2) சகபாடி 3) தீர்க்கதரிசி

37) 300 இன் 1/3 உடன் 200 இன் 1/4 ஐ கூட்டினால் கிடைக்கும் விடை யாது?
1) 150 2) 200 3) 275

38) இடைவெளிக்கு வரவேண்டிய சொல்லை தெரிந்து கோடிடுக.
கிராமிய பாடல்கள் படித்தவர்களுக்கு மட்டுமன்றி ................. மக்களுக்கும் இன்பம் தருபவையாகும்.
1) கிராம 2) பாமர 3) வறிய

39) மு.ப 3.30இற்கு கொழும்பில் இருந்து புறப்பட்ட ஆகாயவிமானம் ஒன்று அன்றைய தினமே சிங்கப்பூர் நேரம் மு.ப 7.30 மணிக்கு சிங்கப்பூரைச் சென்றடைந்தது. கொழும்பு நேரம் மு.ப 6 மணியாகும்போது சிங்கப்பூர் நேரம் மு.ப 7.00 மணியாகும். விமானம் பயணத்துக்கு எடுத்த நேரம் யாது?

.............................

40) மூன்று வாகனங்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு 80km தூரத்தில் உள்ள B நகரத்தை அடைந்தன. அவை புறப்பட்ட நேரங்களும் மணித்தியாலத்திற்கு மாறா வேகத்தில் சென்ற தூரமும் கீழ் தரப்பட்டுள்ளது.

| வாகனம் | புறப்பட்ட நேரம் | வேகம் (மணிக்கு km) |
|---|---|---|
| மோட்டார் கார் | மு.ப 7 மணி | 80km |
| மோட்டார் சைக்கள் | மு.ப 6 மணி | 40km |
| பேருந்து | மு.ப 7 மணி | 60km |

அவை B நகரை அடைந்த ஒழுங்கு முறையை தெரிவு செய்க.
1) மோட்டார் கார், பேருந்து, மோட்டார் சைக்கிள்
2) மோட்டார் சைக்கிள், மோட்டார் கார், பேருந்து
3) மோட்டார் கார், மோட்டார் சைக்கிள், பேருந்து

## 11ஆம் திகதி பிரசுரமான தரம்-5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் பகுதி I விடைகள்

01) 1 02) 3 03) 3 04) 1 05) 2 06) 1 07) 3

08)1 09 )2 10)3 11) மான் புலி முயல் பசு

12)கிளை மயில் கொக்கு நாரை 13)2 14)2 15)2

16)3 17)1 18)1 19)2 20) 2 21)2 22)1 23)2

24)3 25) 2 26) 1 27)3 28)1 29)1 30)2 31)3 32)1

33)1 34)3 35)2 36)2 37)1 38)2 39)3 40) 3